PUBLIC LIBRARY

13.09.2012

# உதய சூரியன்

*Source for reading hunters*

...கம் :32 விலை:15/=



## லிட்டில் சங்ககார சாருஜன்

## கலங்கிய உள்ளங்கள் உடைப்பெடுத்த கண்ணீர்!

## My face book சுஹைய்ல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கலங்கிய உள்ளங்கள்! உடைப்பெடுத்த கண்ணீர்! சிதறிய தேங்காய்கள்!!

## வவுனியா காளிகோவில் வளாகத்தில் ஓர் உணர்வுபூர்வ நிகழ்வு!

தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை வேண்டியும் அவர்க
ளுக்கு நீதி கேட்டும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் ஏற்பாட்
டில் நேற்று வவுனியா காளிகோவில் வளாகத்தில் 1008 சிதறு
தேங்காய்கள் உடைக்கப்பட்டன.
கைதிகள் தினத்தினை முன்னிட்டு தமிழ் அரசியல் கைதிகளை
விசாரணை நடத்தி உடனடியாக விடுதலை செய்ய வேண்டும்
எனக் கோரியும் அவர்கள் மீதான தாக்குதல்கள் நிறுத்தப்பட்டு நியா
யமான தீர்வு வேண்டும் எனக்கோரியும் வன்னி மாவட்ட தமிழ்த்
தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்த
னின் தலைமையில் இந்த நிகழ்வு நடத்தப்பட்டது.
தமிழ் அரசியல் கட்சிகள் பல ஒன்றிணைந்து நேற்றுக் காலை 10
மணியளவில் இந்த நிகழ்வை நடத்தின.
இதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்
களான சிவசக்தி ஆனந்தன், செல்வம் அடைக்கலநாதன், வினோ,
மாவை சேனாதிராஜா, சிறிதரன், சுரேஷ் பிரேமச்சந்திரன், புளொட்
அமைப்பின் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன், தமிழர் விடுத
லைக் கூட்டணியின் தலைவர் வீ.ஆனந்த சங்கரி, ஜனநாயக மக்கள்
முன்னணியைச் சேர்ந்த குமர குருபரன், பாஸ்கரா, தமிழ்த்தேசிய
மக்கள் முன்னணியைச் சேர்ந்த சி.கஜேந்திரகுமார், இ.வசந்தன்
ஆகியோர் உட்பட பலர் கலந்து கொண்டனர்.
மக்கள் தமது உறவுகளைத் தேடித்தருமாறும் விடுதலையை
பெற்றுத்தருமாறும் கண்ணீர் மல்கியபடி தேங்காய்களை
உடைத்தனர். ஆலய முன்றிலில் ஒன்று கூடிய பெற்றோரும்
உறவினர்களும் கதறி அழுதவண்ணம் காணப்பட்டனர்.
இவர்கள் முன்னிலையில் உரையாற்றிய அரசியல் தலை
வர்கள் மிருகவதை பற்றி பேசுகின்ற அரசாங்கம் கைதிகள்
விடயத்தில் ஏன் கவனம் செலுத்தவில்லையென கேள்வி
எழுப்பியதுடன் தமிழ் அரசியல் கைதிகளின் சிறைச்சாலை
கள் மரணசாலைகளாக மாறியுள்ளன என தமது ஆதங்கத்தை
வெளிப்படுத்தினர்.
கைதிகள் தொடர்பாக மகிந்த அரசாங்கம் இனியும் உடன
டியாக நடவடிக்கை எடுக்காதுவிட்டால் மக்கள் போராட்டம்
வடக்கு, கிழக்கு உள்ளிட்ட தமிழர் தாயகம் எங்கும் பரவலடை
யும் எனவும் இது சர்வதேசத்தின் கவனத்திற்கு கொண்டுவரப்ப
டும் என்றும் தெரிவித்தனர்.

**கே.வாசு, வவுனியா**






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இலங்கையை புரிந்து கொள்ளாத அரசியல்

தமது அரசியலில் எப்போதெல்லாம் தொய்வு ஏற்படுகிறதோ? எப்போதெல்லாம் மக்களை திசைதிருப்ப வேண்டிய தேவை இருக்கிறதோ? அப்போதெல்லாம் ஈழத்தமிழர் விவகாரத்தை ஊறுகாயாகத் தொட்டுக்கொண்டு வயிறுமுட்ட சாப்பிட்டு விடுவது இந்தியா குறிப்பாக தமிழக அரசியல்வாதிகளின் கைங்கரியமாகிப் போயிருக்கிறது.

இலங்கையிலிருந்து அரச சார்பாக அல்லாமல் கொழும்பிலிருந்து பிரத்தியேகமாக சென்ற கால்பந்தாட்ட அணி தமிழக முதல்வர் ஜெயலலிதா அம்மணி இலங்கைக்கு திருப்பியனுப்பியமையைத் தொடர்ந்து மீண்டும் இலங்கையர்களுக்கு எதிரானதொரு நடவடிக்கை மீண்டும் தமிழகத்தில் அரங்கேறியிருக்கின்றமை எல்லோர் இதயங்களையும் கனக்கச் செய்துள்ளது. கூடவே ஒரு அருவருப்பையும் ஏற்படுத்தியிருக்கிறது.

## இந்திய அரசியல் களம்

இலங்கையிலிருந்து சென்ற கால்பந்தாட்ட அணி என்பது வெறுமனே சிங்களவர்களை மட்டும் கொண்ட ஒரு அணியாக சென்றிருக்கவில்லை. அந்த அணியில் தமிழர்களும் உள்ளடங்கியிருந்தார்கள். தமிழர்கள் எனும்போது சென்றவர்கள் யாழ்ப்பாணத் தமிழரா? இல்லை மலையகத் தமிழரா? இஸ்லாமியத் தமிழரா என்று மேலும் கூறுபடுத்திக் கொள்ளத் தேவையில்லை. ஆக அந்த அணியில் தமிழர்களும் சென்றிருந்தார்கள். மறுதலையாக சிங்களவர்களே சென்றிருந்தாலும் கூட அவர்கள் மீது இதுபோன்ற வெறுப்புணர்வுகளை உமிழத் தேவையில்லை. காரணம் அவர்கள் சாதாரண மக்கள்.

இந்த அலை உருவாகி ஓய்ந்து போவதற்கிடையிலேயே தமிழகம் அடுத்த அதிர்ச்சியையும் கூடவே அரசியல் வெறித்தனத்தையும் வெளிக்காட்டியது.

உண்மையில் இந்த அதிர்ச்சி என்பது அத்தனை பெரிய புதிய ஒன்றல்ல. காரணம், கிரிக்கெட் விளையாட்டில் இந்தியா தோற்றால் வீரர்களின் வீட்டை உடைப்பதும் அபிமான நடிகர் ஒருவனின் புகைப்படம் வெளியானால் கட்டவுட்டுக்கு பாலாபிஷேகம் செய்வதும் நடிகைக்கு கோயில் கட்டுவதும், சாமியார்மாரிடம் ஏமாறுவதும் என இவர்களின் அதீத உணர்ச்சிக்கு ஒரு எல்லையே இல்லை என்பது நன்கு அறியப்பட்ட உண்மைதான்.

ஆக "ம.தி.மு.க" வைகோ தலைமையிலான அணி "நாம் தமிழர்" சீமான் தலைமையிலான அணி "விடுதலை சிறுத்தைகள்" தொல்திருமாவளவனின் அணி ஆகியோர் இணைந்து தமிழகத்தின் பூண்டிமாதா தேவாலயத்திற்கும், வேளாங்கன்னி ஆலயத்திற்கும் நமது இலங்கை யாத்திரிகர்களை சென்று வழிபாடு செய்யவிடாமல் அவர்கள் பயணித்த வாகனங்களின் மீது கற்களையும் காலணிகளையும் வீசி தமது அதீத உணர்வையும் எதிர்ப்பு அரசியலையும் தமிழர் பற்றையும் நாங்கள் எல்லாம் உயிரோடுதான் இருக்கிறோம் என்ற விதமான செய்தியையும் ஒருங்கே வெளிப்படுத்தியிருந்தார்கள். பதிவு செய்திருக்கிறார்கள்.

தவிர தமிழ்நாடு தாம்பரத்தில் இலங்கை விமானப்படையினருக்கு வழங்கும் பயிற்சி மற்றும் குன்னூர் வெலிங்டன் இராணுவ முகாமில் இரு இராணுவ வீரர்களுக்கு வழங்கப்பட்ட பயிற்சி என்பவற்றை நிறுத்துமாறும் இவர்கள் கோஷமிடத் தவறவில்லை.

இது குறித்து தி.மு.க. வினரும் தமது எதிர்ப்பை வெளிப்படுத்தியிருந்தார்கள். ஆனால், மத்திய அரசு இது குறித்து பெரிய அளவில் கண்டு கொண்டதாகத் தெரியவில்லை. மேலும், இது சார்க் நாடுகளுக்கிடையிலான ஒப்பந்தங்களின்படி நடக்கும் பயிற்சிகள். இதனைத் தவிர்க்க முடியாது. அது சார்க் அமைப்பை பாதிக்கும் காரணியாக மாறிவிடும் என்று மத்திய அரசால் விளக்கமும் அளிக்கப்பட்டுள்ளது.

எனினும் இந்த இராணுவப் பயிற்சி விடயத்தில் அ.இ.அ.தி.மு.க., தி.மு.க. உள்ளிட்ட தமிழக எதிர்ப்பு சற்று வலுவடைந்ததைத் தொடர்ந்து தமிழ் நாட்டில் இல்லாமல் வேறு மாகாணத் தில் இந்தப்பயிற்சியினை வழங்குகிறோம் என்று மத்திய அரசு சற்று கீழிறங்குவது போல் காட்டியது. ஆனால் முழு இந்தியாவிலுமே இந்தப்பயிற்சி வழங்கப்படக்கூடாது என்ற வலியுறுத்தல் தொடர்கிறது. ஆனால், பயிற்சி தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டுதான் இருக்கிறது.

குறித்த சம்பவங்களின் பின்னர் முன்னரான கால்பந்தாட்ட அணியும் சரி, வழிபாட்டுக் குழுவும் சரி மிகுந்த அதிர்ச்சிகளுடனும், வேதனைகளுடனும் தமது உணர்வுகளை வெளிப்படுத்தியிருந்தார்கள். அதிலும் கால்பந்தாட்ட அணியைச் சேர்ந்தவர்கள் தாம் எதற்காக இவ்வாறு திருப்பி அனுப்பப்படுகிறோம் என்பதே தெரியாமல் இலங்கை வந்து சேர்ந்ததாகவும். இங்கு வந்தபின்னரே விடயத்தை தெரிந்துகொள்ளக்கூடியதாக இருந்ததாகவும் தெரிவித்திருந்தார்கள்.

வழிபாட்டுக்கு சென்றவர்களும் இவ்வாறுதான் அதிகளவான பணத்தை செலவழித்து எந்தப் பயனும் இன்றி பெரும் ஏமாற்றத்தோடும் வேதனையோடும் நாடு திரும்பியதாக கூறுயிருக்கிறார்கள்.

ஆனால், இதே நிகழ்ச்சி நிரல் நிகழ்ந்து கொண்டிருக்கும் இந்நாட்களில்தான் இந்தியாவில் உள்ள புத்தரின் புனித சின்னம் முக்கிய இடங்களில் மக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டு மீண்டும் இந்தியாவுக்கே கொண்டு செல்லப்படவிருக்கிறது.

மேலும் புத்த ஜெயந்தியின் 2600 ஆம் ஆண்டை முன்னிட்டு நடைபெறும் சிறப்பு நிகழ்வுகளில் கலந்துகொள்ள மஹிந்த ராஜபக்ஷ இந்தியா செல்லவுள்ளார்.

ஆக இந்தப் புள்ளியிலிருந்து யோசித்தால் இங்கு நடைபெறும் அரசியல் சித்து விளையாட்டுக்கள் பற்றி புரிந்துகொள்ளக்கூடியதாக இருக்கும். குறிப்பாக இந்திய ஊழல் அமளித்துமளிகளிலிருந்து கவனத்தை திசை திருப்ப அங்கிருக்கும் மக்களின் தேர்தல் கவனங்களிலிருந்ததான திசைதிருப்புதலை இங்கும் மேற்கொள்ளவே இந்த காய்கள் நகர்த்தப்பட்டிருக்கலாம். அது சாத்தியப்பட்டதா? படவில்லையா? என்பது வேறு விடயம்.

காரணம் முழுக்க முழுக்க மத்திய அரசின் விற்பனர்களுக்கு எதுவுமே தெரியாமல் அங்கு நடந்து முடிந்துவிட வாய்ப்பில்லை. இன்னொரு பக்கம் இலங்கை மீதான மறைமுகமான அழுத்தங்களை பிரயோகிக்கவும் இவ்வாறான செயற்பாடுகளை தூண்டிவிடலாம்.

ஆக, வைகோவும் சீமானும் திருமாவளவனுக்கு ஒன்றும் பச்சைக் குழந்தைகளோ அல்லது அரசியல் குழந்தைகளோ அல்ல. மாறாக தமிழனைக் காக்கின்றேன். தமிழனை அழியவிடமாட்டேன், மஹிந்த போர்க்குற்றவாளி. முள்ளிவாய்க்காலில் நடந்தது இன அழிப்பு. அவர் செய்தது துரோகம், இவர் செய்தது துரோகம் என்று வாய் கிழிய கோஷங்களை இவர்கள் இட்டுக்கொண்டிருக்கும் போதே தமிழர்களுக்கு எதிரான எல்லா அட்டூழியங்களும் நிகழ்ந்தேறுகின்றன. நேரடியாகவும், மறைமுகமாகவும் அண்மையில் கருணாநிதி சொன்னதை கருணாநிதி உட்பட இவர்கள் எல்லோருக்கும் சொல்லலாம்.

தமிழர்களுக்காக நான்தான் ஒன்றும் கிழிக்கவில்லை. நீங்கள் ஏன் உண்ணாவிரதமிருந்து சாகவில்லை.

- வசுமதி -

# இந்துக்களே தவறாது ஆலயம் செல்லுங்கள்!

இலங்கை வாழ் இந்துக்கள் அனைவரும் வெள்ளிக்கிழமை கட்டாயமாக ஆலயம் செல்வதை உறுதிசெய்ய வேண்டும் என்றும், நலிந்து வரும் ஆலய வழிபாட்டையும், இறை நம்பிக்கையையும் மீள கட்டியெழுப்ப இந்து அமைப்புகள் முன்வர வேண்டும் என்றும் இராகலை இந்து மாமன்றம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

மன அமைதிக்கும், இன ஒற்றுமைக்கும் மதவழிபாடு மிக அவசியம். மேலும் கொலை, கொள்ளை போன்ற மூர்க்கத்தனமான செயல்களில் ஈடுபட வைக்கும் கொடூர குணத்தை மாற்றியமைப்பதிலும் இறைவழிபாடு முக்கிய பங்கு வகிக்கின்றது. மேலே ஒருவன் பார்த்துக் கொண்டிருக்கின்றான் என்ற வாசகத்தால் பெரும்பாலானோர் தவறு செய்வதில்லை. இவ்வாறு பல வழிகளில் மனிதனை நல்வழிப்படுத்தும் ஆலய வழிபாடும், இறை நம்பிக்கையும் இன்று குறைந்துவருவது வேதனை தரும் விடயமாகும். இறை நம்பிக்கை இன்மையால்தான் தந்தை தாய் சகோதரியை கொலை செய்வதும், ஆலயத்திற்கு வரும் வேற்று மத, இன நாட்டவரை விரட்டி அடிப்பதும், நெருங்கிய உறவுகளுக்கு மதிப்புக் கொடுக்காமல் அவர்களிடையே தகாத முறையில் நடந்து கொள்வதும், இறைவனின் பெயரால் நிதி திரட்டுவதும், ஆலயங்களுக்கு சொந்தமான சொத்துக்களையும், நிதிகளையும் சூறையாடுவதும் நடைபெறுகின்றன. இஸ்லாமிய சகோதரர்கள் தவறாது வெள்ளிக்கிழமையும், கிறிஸ்தவ சகோதரர்கள் ஞாயிற்றுக்கிழமையும் இறைவழிபாட்டில் ஈடுபடுகின்றனர். தங்களுக்கு வேலைப்பளு இருந்தாலும் இதற்காக கட்டாயமாக நேரத்தை ஒதுக்குகின்றனர். வாரம் ஒரு முறை இவ்வாறு ஒன்று கூடுவதால் தனி நபருக்கு ஏற்படும் பிரச்சினைகளுக்கும் தீர்ப்புக் கிட்டுகின்றது. இதேபோன்று இந்துக்களையும் வாரத்திற்கு ஒருநாள் கட்டாயமாக ஆலயம் செல்வதை உறுதிசெய்ய வேண்டும். ஆலயத்தை கட்டியெழுப்ப உதவிசெய்யும் அமைப்புக்கள், இறைவழிபாடு முறையையும் மக்களிடையே எடுத்துச்செல்ல வேண்டும் என்பதே இராகலை இந்து மாமன்றத்தின் வேண்டுகோளாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்த வாரம் உங்களுக்கு எப்படி?

### 13.09.12 முதல் 20.09.12 வரை




இவ்வாரம் உடல் நலத்தில் அதிக கவனம் தேவை. எதிரிகள் அடங்குவர். உரிய முயற்சியால் பல நல்ல திட்டங்கள் உருவாக்கி வெற்றி காணலாம். தனகாரகன் குருபகவான் உங்களுக்கு பலவகையில் உதவிபுரிந்து வருகிறார். விரயத்தை கட்டுப்படுத்தவும். பேச்சில், செயலில் நிதானம் தேவை. ராகுவால் பல வழிகளில் அலைச்சல் வரும். கணவன், மனைவி, குழந்தைகள் உறவு நலம் காணும். வியாபாரிகளுக்கு இலாபம் பெருகும்.



மிகப்பெரிய மாறுதலுக்கு வழிவகை உண்டாகும். உழைப்புக்கும், உண்மைக்கும் உரிய மதிப்பு பெறுவீர்கள். எதையும் போராடி பெற வேண்டிவரும். பூர்வ புண்ய யோகம், மனைவியின் பந்துக்கள் வழி நன்மைகள் கிட்டும். நிலம், சகோதரர்கள் வழி, சகாயம் உதவி கிடைக்கும். கணவன், மனைவி உறவு பலப்படும். குழந்தைகள் வழி செலவு அதிகரிக்கும். வியாபாரிகள் எதையும் போராடிப் பெற வேண்டி வரும்.




பட்டம், பதவி, போற்றும்படி வாழ்க்கைத் தரம் உயரும். அரசாங்கம், சத்ரு மூலம் மனக்கவலை பெறுவீர்கள். உடல் நிலையில் அதிக கவனம் தேவை. புத்திரர்களால் மன அமைதி கெடும். சிலருக்கு தாயின் ஆதரவு பாதிக்கலாம். வீண்பேச்சு மனவேதனை உண்டாக்கும். கணவன், மனைவி உறவு பலப்படும். தொழில் அதிபர்களின் முயற்சிக்கு உரிய பலன் கிடைக்கும். விருத்தி உண்டாகும்.




மிகப்பெரிய முன்னேற்றத்திற்கான வாய்ப்பு தேடிவரும். இருப்பினும் நிலைமை அறிந்து நடக்கவும். எதிலும் அமைதி காத்து, பேச்சில் நிதானம் கடைப்பிடிக்கவும். தவறுக்கு வருந்தி வாழ்வது மிகவும் நல்லதே. வாழ்க்கைத் தரம் உயரும். கணவன், மனைவி, குழந்தைகள் வழி குழப்பம் அதிகரிக்கும். தொழில் அதிபர்கள் கூடுதல் இலாபம் பெறுவர்.




பல பிரச்சினைகள் தீர்வு ஆகாமல் இழுபறி நிலைமை நீடிக்கும். அலைச்சல் அதிகரிக்கும். பல தடைகளை கடக்க வேண்டிவரும். உடல்நிலையில் அதிக கவனம் தேவை. சகோதரர்கள் உதவுவார்கள். கணவன், மனைவி உறவு பலப்படும். பெண்வழி சகாயம் பெருகும். வாகனங்களில் செல்லும்போது எச்சரிக்கை தேவை. தொழில் அதிபர்களின் நிலைமை உயரும். புதிய உரிய மாறுதல் பெற்று சிறப்படைவீர்.




தொழில், ஸ்தாபனம் போன்றவற்றில் பாதிப்பும், இடமாற்றமும் காண்பீர். உடல்நிலையில் அக்கறை தேவை. தாய்வழி உறவு பாதிப்பு உண்டாகும். செலவு வரும். இருப்பினும் நிலைமையை சமாளிப்பீர்கள். மனக்குழப்பம் வந்து போகும். திருமணயோகம் அமையப்பெறும். கவலைப்பட்டு வந்த புத்திர பாக்கியம் கிட்டும்.




எதையும் அதிகம் போராடிப் பெற வேண்டிய நிலை வரும். பெண்கள் வழி அல்லது உடன்பிறந்த சகோதரிகள் வழி மனவேதனையும், பொருள் விரயமும் உண்டாகும். குடும்பத்தில் நிம்மதியும், தொழில், உத்யோகத்தில் மேன்மையும் உண்டாகும். பழைய நண்பர்கள் மூலம் சில அவசியத் தேவை ஈடேறும். தேவையற்ற புதிய முயற்சிகளை தவிர்க்கவும். குழந்தைகள் வழி கவலை அதிகரிக்கும்.




உங்களின் வாழ்க்கைத் தரம் உயரும். தனலாபம், அந்தஸ்து, உயர்வு பெறுவீர்கள். நினைத்தது நடக்கும். பிரயாணம் அதிகரிக்கும். பல நல்ல திருப்பங்கள் உண்டாகும். சகோதரர்களுக்கு தடைபட்ட திருமணம் நடக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சியும் குழந்தைகளின் கல்வியும் சிறக்கும். தந்தையின் உத்யோகம், தொழில் சிறக்கும். பெண்கள் வழி ஆதாயம், தானிய வழி லாபம் அதிகரிக்கும். உடல் உபாதை வரலாம். எச்சரிக்கை தேவை.




வாழ்க்கை வசதி உயரும். பெரியவர்களின் நட்பும், தொழிலில் உரிய லாபமும் கிட்டும். இருப்பினும், உடல்நலம், உணவுக் கட்டுப்பாடு அவசியம். வீண்செலவு அதிகரிக்கும். தாய்வழி உறவுகள் மூலம் வீண் வாக்குவாதம் வரும். கணவன், மனைவி உறவு சீராகும். குழந்தையின் கல்வியால் சிறுசிறு மனவேதனையும், பொருள் விரயமும் உண்டாகும். தொழில் அதிபர்கள் நிலைமை உணர்ந்து செயல்வடிவம் கொடுக்கவும். அலைச்சல் அதிகரிக்கும்.




தந்தையின் உடல்நலம், உத்யோகம், தொழில் சிறப்படையும். சட்டம், அரசாங்க வழி தொல்லையும் மனவேதனையும் அதிகரிக்கும். எனினும் காரிய வெற்றி, தனலாபம் உண்டாகும் சிலருக்கு குழந்தைப் பாக்கியம் உண்டாகும். சில பொருள்கள், வாகனம் களவுபோக வாய்ப்பு உள்ளது. குடும்பத்தில் மன மகிழ்ச்சியும் நிம்மதியும் பெறுவீர்கள்.




அந்தஸ்து, மரியாதை உயரும். இருப்பினும், தொழில், உத்யோகத்தில் தொடர்ந்து மந்தநிலை நீடிக்கும். சகோதரர்கள் வழி மனக்கசப்பு நீடிக்கும். புத்திர பாக்கியம் வர வாய்ப்பு உண்டு. தொழில் அதிபர்கள், அதிக அலைச்சலுடன், போராடிப் பலன் பெறுவர்.




சிறு சிறு தடைகள் வந்து மாறும். சிலருக்கு திசா புத்தி சரியில்லை. பண நெருக்கடி, தொழில் நஷ்டம், உத்யோகத்தில் பாதிப்பு உண்டாகும். உடல்நலத்தில் அதிக அக்கறை தேவை. வீண் பேச்சு தவிர்க்கவும். கணவன், மனைவி உறவு பலப்படும். குழந்தைகளின் வழி மனமகிழ்ச்சியும் தனப்பிராப்தமும் கிட்டும். தொழில் அதிபர்கள் புதிய உறவுகள் மூலம் நன்மையும் [illegible] பெறுவீர்கள்.




## சின்னத்திரை

பிரிக்க முடியாதது! சின்னத்திரையும் தொடர் நாடகங்களும் என்ற அளவுக்கு இப்போதெல்லாம் நிலைமை மாறிப் போயிருக்கிறது. உங்கள் மனங்கவர்ந்த சின்னத்திரை நடிகை யார்? அதற்கான காரணம் என்ன? என்பதை எங்களோடு பகிர்ந்து கொள்ளுங்கள்.

உதயசூரியன் சின்னத்திரை நாயகி என குறிப்பிட்டு எமது முகவரிக்கு எழுதி அனுப்புங்கள்.

## நடிக்க வந்த பொறியியலாளர்

படிப்பு வராதவர்கள் நடிப்புத் துறைக்கு வந்த காலம் மாறி இன்று மெத்தப் படித்தவர்களின் ஆதிக்கமே அதிகம். சினிமாவில் நடிகர்கள் கார்த்தி, பிரசன்னா, ஆர்யா வரிசையில் நடிகராகியிருக்கிறார் இன்னுமொரு இன்ஜினியர்... சிவகார்த்திகேயன்!

எங்க வீட்ல நிறைய கம்ப்யூட்டர் இன்ஜினியர்ஸ் இருக்காங்க. அந்த வகையில் நானும் விரும்பித்தான் திருச்சி ஜெ.ஜெ. இன்ஜினியரிங் காலேஜ்ல கம்ப்யூட்டர் இன்ஜினியரிங் சேர்ந்தேன். இன்ஜினியரிங் முடிக்கிற டைம்ல எம்.பி.ஏ. படிக்கிற ஆசை வந்தது. ஒரு கம்பெனில வேலையும் கிடைச்சது. ஆனா ஜாயின் பண்ணலை. எம்.பி.ஏ. முடிச்சா வாழ்க்கை இன்னும் பெட்டரா இருக்கும்னு தோணவே அதையும் படிச்சேன். அதை முடிக்கிற நேரம்தான் மீடியா என்ட்ரி இன்ஜினியரிங்னு ஒரு பாதுகாப்பான தகுதி கையில இருக்கிறப்ப நிரந்தரமில்லாத மீடியா எதுக்குங்கிற தயக்கம் வீட்ல எல்லாருக்கும் இருந்தது. போராடிப் புரியவச்சேன்.

மீடியாதான் வாழ்க்கைன்னு நான் துணிஞ்சு முடிவெடுத்தாலும் நிறைய சிரமப்பட்டு நிறைய உழைச்சுதான் எனக்கான ஒரு இடத்தை ஏற்படுத்திக்கிட்டேன். இதுதான் நிரந்தரம்னு நிம்மதியா உட்கார்ந்துட முடியாது. ஏழு மலை, எட்டு கடல் தாண்டி, எங்கேயோ இருக்கிற ஒரு புதையலைப் பிடிக்கிற மாதிரியான ஆபத்தான கதைதான். இதுவும் புதையலை அடையறது மட்டும்தான் நம்ம இலக்கா இருக்கணும். அதுக்கான போராட்டங்கள் பயங்கள் எனக்கு உண்டு. ஆனாலும் அதையெல்லாம் நான் ரொம்பவே என்ஜாய் பண்றேன்.





### ரியல் ஜோடி!

ஆனந்தம் உட்பட பல தொடர்நாடகங்களில் நாயகனாக நடிக்கும் ராஜ்கமல் ரியல் லைப் ஜோடி சின்னத்திரை நடிகை லதா.
இவர் திருமதி செல்வம், செல்லமே தொடரில் நடிக்கிறார். இத்தம்பதிகளுக்கு ஒரு குழந்தையும் உள்ளது.

மீடியாவுக்கு வந்த பிறகு நிறைய சாஃப்ட்வேர் கம்பெனிகளுக்கு கல்ச்சுரல் ஷோஸ் பண்ணப் போவேன். கம்ப்யூட்டர் இன்ஜினியர்களை பார்க்கிறப்ப நம்ம வாழ்க்கையும் இப்படித்தானே இருந்திருக்கும்னு நினைச்சிப்பேன். ஒருவேளை நான் இன்ஜினியரா இருந்திருந்தா என்னோட கம்பனியும் என் குடும்பமும் மட்டுதான் என்னைக் கொண்டாடியிருப்பாங்க. நடிகரானதால உலகமே என்னைத் திரும்பிப் பார்க்குது. கொண்டாடுது.

என்னப்பா படிச்ச படிப்பு வேஸ்ட் ஆகிடுச்சேன்னு அப்பப்ப என்னைப் பார்த்து யாராவது கேட்கறதுண்டு. அப்துல்கலாம் புரொபசரா இருந்தார். அவர் பிரெசிடென்ட் ஆகறதுக்காக படிக்கலையே... அவரோட படிப்பு அந்தப் பதவிக்கு உதவியிருக்கு அவ்வளவுதான். அந்த மாதிரிதான் எனக்கும் உதவியிருக்கு, அவ்வளவுதான்.

அந்த மாதிரிதான் இதுவும் நாலு வருஷ இன்ஜினியரிங் படிப்பு எனக்கு நிறைய கத்துக்கொடுத்தது.

மத்தவங்களோட பழகற அனுபவம், கம்யூனிகேஷன் ஸ்கில்லு அது எல்லாமே இப்ப என் துறைக்கு உதவி இருக்கு. அஞ்சு வருஷப் போராட்டத்துக்குப் பிறகு இப்ப சினிமான்னு ஒரு புதுத்துறைக்குள்ள காலடி எடுத்து வச்சிருக்கேன்.

அந்த சவால் எனக்கு பிடிச்சிருக்கு... இதைத் தான் நான் எதிர்பார்த்தேன்...





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிர் Box

## விடைகள்

### புதிர்போட்டி



### சூப்பர் சூப்பர்




### சொல் வேட்டை

- லவகுசா
- லலிதா
- லக்ஷ்மி
- லண்டன்

### கண்ணாமூச்சி




# பயோ DatA BY உதயசூரியன்



- ★ பெயர் :- ரணில் விக்ரமசிங்க
- ★ பதவி :- எதிர்க்கட்சித் தலைவர்
- ★ தொழில் :-தலைவர் பதவியை காவல் காப்பது
- ★ நண்பர்கள் :- மஹிந்த அண்ட் பிரண்ட்ஸ்
- ★ எதிரிகள் :- சொந்த கட்சியில் இருக்கும் குள்ள நரிகள்
- ★ ஒரு நாள் கவலை :- தேர்தலில் தோற்றுப் போவது
- ★ நீண்ட நாள் சந்தோஷம் :- மஹிந்த அரசு வெற்றி பெறுவது.
- ★ பிடித்த பழமொழி :- கழுதை தேய்ந்து கட்டெறும்பாகியது போல
- ★ சமீபத்திய சாதனை :- இன்னும் 6 ஆண்டுகளுக்கு தலைவர் பதவியை கைப்பற்றியது
- ★ சமீபத்திய வேதனை :- ராசியில்லா தலைவர் என விமர்சிப்பது
- ★ அடிக்கடி வரும் பயங்கர கனவு:- சஜித் பதவியை கைப்பற்றும் காட்சி
- ★ ஒரே ஆசை :- தேர்தலில் சொதப்புவது எப்படி? என்று புத்தகம் ஒன்றை வெளியிடுவது.
- ★ இலட்சியம் :- தேர்தல்களில் அதிக தடவை தோற்றவன் எனும் பெயரை கின்னஸில் பதிப்பது.
- ★அடிக்கடி ஏற்படும் சந்தேகம் :- ஐ.தே.கட்சியின் தொடர் தோல்விக்கு யார் காரணம் என்பது?

தருபவர் :- எம்.தாசன்

ஓம் சக்தி துணை



# நூற்றாண்டு விழா

## பதுளை வேவெஸ்ஸ குரூப், 3ஆம் கட்டை நடுக்கணக்கு அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய வருடாந்த தேர்த்திருவிழா விஞ்ஞாபனம் - 2012

**அம்பிகை அடியார்களே!**

இராவணன் வீணை கொடுத்த கைலாயம் எனும் புண்ணிய பூமியாம் லங்காபுரியில் மலையும் மலைசார்ந்த இடமுமாகிய ஊவா மாகாணத்திலே பதுளை மாநகரத்தில் வேவெஸ்ஸ நடுக்கணக்கு 3ஆம் கட்டை பகுதியிலே கற்பக விருட்சமாக எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தானத்தில் நிகழும் மங்களகரமான நந்தன வருடம் ஆவணி மாதம் 27ஆம் நாள் 12.09.2012 அன்று துவாதசி திதியும் பூச நட்சத்திரமும் கன்னி லக்கனமும் கூடிய சுபவேளையில், கொடியேற்ற விழா நடைபெற திருவருள் கூடியுள்ளது. இவ் வேளையில் பக்த பெருமக்கள் அனைவரும் வருகை தந்து அம்பாளின் அருள்பெற வேண்டுகின்றோம்.

## கிரியாகால நிகழ்வுகள்

**12.09.2012** புதன்கிழமை மாலை 4.30 மணிக்கு விநாயகர் வழிபாடு, அனுக்ஞை, புண்ணியாகவாசனம், வாஸ்து சாந்தி, பிரவேச பலி, கணபதி ஹோமம், லக்ஷ்மி ஹோமம், திரவிய ஹோமம், பூர்ணாகுதி, புஷ்பாஞ்சலி, கும்பவீதி பிரதட்சணம், கும்ப உத்தானம் நடைபெற்று, துவார வாகன கொடியேற்றம் நடைபெற்று, கரகம் பாலித்தல், வசந்த மண்டப பூஜை சுவாமி உள் வீதி வலம் வருதல் இடம்பெறுவதோடு விபூதிப் பிரசாதம் வழங்கப்படும்.

**13.09.2012** வியாழக்கிழமை காலை 7.30 மணிக்கு விநாயகர் வழிபாடு, புண்ணியாகவாசனம், கணபதி ஹோமம், சக்தி ஹோமம் தொடர்ந்து 10.00 மணிக்கு பால்குட பவனியும், பறவைக்காவடி, காவடி பாலித்தலும் தொடர்ந்து மஹா பூர்ணாகுதி, புஷ்பாஞ்சலி, கும்பவீதி பிரதட்சணம், 108 சகஸ்ரநாம சங்காபிஷேகம் நடைபெற்று மகேஸ்வர பூஜையுடன் அன்னதானம் வழங்கப்பட்டு, விபூதிப்பிரசாதம் வழங்கப்படும். அன்று மாலை ஆலயத்தில் விஷேட பூஜைகளுடன் சுவாமி உள்வீதி வலம் வருவார்.

**14.09.2012** வெள்ளிக்கிழமை பி.ப 1.00 மணியளவில் விஷேட வசந்த மண்டப பூஜை, 2.30 மணியளவில் மேளதாள, பேண்ட் வாத்தியங்கள் முழங்க அலங்கரிக்கப்பட்ட சித்திரத்தேரிலே ஆரோகணித்து இரதோற்சவம் நடைபெறும்.

**15.09.2012** சனிக்கிழமை மாலை 3.30 மணிக்கு வேட்டைத் திருவிழாவும், மாவிளக்கு பூஜையும் நடைபெற்று சுவாமி உள்வீதி வலம் வந்து விபூதிப் பிரசாதம் வழங்கப்படும்.

**16.09.2012** ஞாயிற்றுக்கிழமை காலை 8.40 மணிக்கு தீர்த்தோற்சவம் நடைபெற்று கரக ஊர்வலத்துடன் விழா இனிதே நிறைவு பெறும்.

## கிரியாகால குருமார்கள்

**ஆலய பிரதம குரு:** சிவஸ்ரீ சிரோன்மணி கிரியாஜோதி, கிரியா ரத்தின சம்பந்தராஜா குருக்கள் (ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவில் 3ஆம் கட்டை, பதுளை)

**ஆலய உதவி குரு:** சிவஸ்ரீ சிரோன்மணி மோகன சிவா சர்மா

**சர்வபோதகம்:** சிவஸ்ரீ சிரோன்மணி கிரியாஜோதிட சிவயோகம் குருக்கள் (நூல்கந்துர, கண்டி)

சிவஸ்ரீ சிரோன்மணி ஆறுமுகநாத குருக்கள் (தும்பேதன்ன)

சிவஸ்ரீ சிரோன்மணி கிருஷ்ணகுமார் குருக்கள் (கெந்தகொல்ல)

மங்கள வாத்தியம்
கோவிந்தராம் குழுவினர (நடுக்கணக்கு)

பேண்ட் வாத்தியம்
செல்வராஜ் குழுவினர (நடுக்கணக்கு)

**அன்னதான உபயம்: சுதர்ஷன் ட்ரான்ஸ்போட் குடும்பத்தினர் - பசறை**

**குறிப்பு:** பால், தயிர், பூக்கள், இளநீர், அன்னதானப் பொருட்கள் என்பவற்றைக் கொடுக்க விரும்புபவர்கள் ஆலய நிர்வாக சபையிடம் ஒப்படைக்கவும்.

"சர்வ ஜனனோ சுபினோ பவந்து சமஸ்த சன்மங்களி பவந்து"

**இங்ஙனம்: ஆலய நிர்வாக சபையினர், தோட்ட பொதுமக்கள், தோட்ட நிர்வாக சபையினர், உத்தியோகத்தர்கள், இளைஞர்கள்.**

ஓம் சாந்தி!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அவலம்

மஞ்சள் படிந்த வெண்ணிற
ஆடைகள்
வெறுமனே கிடக்கும்
தலைமுடி
அழுக்கு அடைந்த
விரல் நகங்கள்
சாம்பல் நிறம் பூத்த
கைகால்கள்
எண்ணெய் வடிந்து
எங்கும் முகம்
என்று அனுமதிக்க முடியாத
அடையாளங்களுடன்
அலைந்து திரிகின்றார்கள்
பள்ளிகளில்
மாணவர் என்ற பொதுப் பெயரில்
வெளிநாட்டுக்கு வேலை
பெண்ணாய்
போய் சேர்ந்த
எம் தாய்க் குலங்களே
நான் வருத்தத்துடன் வர்ணித்தது
உம் வயிற்றில் பிறந்த
முத்துக்களை

கோ.கிசோகுமார்,
கொட்டகலை.

## கல்லறை சுகம்

அன்பே
பிரிவு கனக்கிறது
கண்கள் கண்ணீர் வடிக்கிறது
இதயம் இடம் மாறி துடிக்கிறது
சுவாசம் இல்லாமல்
சுய நினைவு மறந்து
நடைப் பிணமாய் வாழ்கின்றேன்
நீ என்னை மறந்து விடு என்று
சொன்னதிலிருந்து!

பரமநாதன் திவ்யசோபனா,
பொகவந்தலாவ.

## ரசனை

என் உணர்வுகளை
என் உறவுகளை
என்னுள் உள்ள
சோகங்களை -
மறந்து
மகிழ வைக்கும்
ஓர் உணர்வு!

பா.ரூபா,
டயகம.

## மின்னலாய்

வார்த்தைகளின் புறக்கணிப்பு
பார்வைகளின் மோதல்
நித்தமும் நிந்திப்பு
கனவுகளில்லா நித்திரை
அத்தனையும் உங்களிடமிருந்து
விதைப்பதும் நீங்கள்
அறுவடையும் நீங்கள்
என்பதினாலா
நிச்சயிக்கப்பட்ட சோகங்கள்
நம் மத்தியில்... வளரும்
முன்னரே துளிர்களை
பறிக்கிறீரே எப்படி கனி தரும்
அந்த மரம்? ஏழ்மைக்கு
கிடைக்கும் முத்திரையோ
என்னவோ - உங்களின்
வேண்டப்படாத உபசரிப்புகள்...
எத்தனையோ வீழ்ச்சிகளிலும்
சிறகுவிரிக்க துணிந்துவிட்டது
இந்த பட்டாம்பூச்சி
விலகிடுங்கள் இதன்
துடிதுடிப்பு மின்னலாய்...!

பர்ஹானா, இறக்குவானை

## கனவின் சிதறல்

பல கனவுகள்
பல ராத்திரிகள்
பல கண்டேன்....
சில கணங்களில்
சில வார்த்தைகளால்
சில நபர்களுக்காக
சிதறடித்து விட்டாய்
சிறகடித்த கனவுகளை....

ஆர். உதயா,
பொகவந்தலாவ

## பிரிவு

கண்ணீர் இல்லை
காயங்கள் இல்லை
கனவுகளில்
ஏக்கங்கள்
இல்லை
மிக அழகாகவே
முடிந்தது
நம் இறுதி சந்திப்பு

க.நினல்ராஜன்,
லெதெண்டி

## ஒவ்வொரு முறையும்

என்னைப் பார்த்து
அவள்
புன்னகைக்கவில்லை....
அவள் மௌனங்கள்
கூட எனக்காக
எழுதப்படவில்லை...
என் நிழல் கூட
அவள் பக்கம்
திரும்பவில்லை...
இருந்தும் இறந்து
போகிறேன்
ஓரக்கண்ணால்
ஒவ்வொரு
முறை என்னை
அவள் பார்க்கும்போதும்....

சி.டில்ருக்ஷி சங்கீதா,
மஸ்கெலியா.

## என் உயிரானவன்..!

சிரித்தான்
கன்னங் குழியில் விழுந்தேன்
முத்தமிட்டான்
செத்தே போனேன்
தோளில் சாய்ந்தான்
உயிராய்
தழுவியணைத்தேன்
உறக்கத்திலும்
அவன் பெயரையே
புலம்பினேன்
அன்று பேருந்தில்
அன்றலர்ந்த தாமரையாய்
அவன்தான் -என்
சினேகிதியின்
சின்ன மழலை

செ.கவிதா, கொட்டகலை.

## நட்பு

வெறும் நிழல்களாய்
நினைத்துக்கொள்ள
வெற்றுக் காகிதமல்ல
நட்பு
அனுபவமாய் அனுபவித்து
எழுதிய
கவிதைப் புத்தகம்
நட்பு
இனிமையான
இன்ப நாட்கள் பல - எம்
கண்முன்னே திரிந்தாலும்
கவலை மறந்து
கைகோர்த்து திரிந்த
கல்லூரிக் காலம்தான்
மறந்திடுமா
காலந்தோறும்...

நிலாப்பெண், இறக்குவானை

08 ஆம் பக்கத் தொடர்ச்சி...

## லிட்டில் சங்ககார சாருஜன்

நல்ல சாப்பாடு சாப்பிடனும் என்று சொல்லியிருக்கிறார் என்றார் தன் மழலைக் குரலில்.

சாருஜனின் இன்னொரு பேவரிட் அவுஸ்திரேலிய கிரிக்கெட் வீரர் ஷேர்ன் வோன். அதுமட்டுமல்ல சாருஜனுக்கு இலங்கை கிரிக்கெட் அணிக்கு அடுத்தபடியாக அவுஸ்திரேலிய அணியைத்தான் பிடிக்கும்.

இலங்கை கிரிக்கெட் வீரர்கள் மற்றும் மேற்கிந்திய அணியின் தலைவர் டெரன் செமி, கிறிஸ்கெய்ல், அதிரடி வீரர் கிரான் பொலக், சர்வான், இந்திய அணியின் தலைவர் தோனி, அதிரடி வீரர் விராட்கோலி. சுரேஷ் ரெய்னா, ரோஹித் சர்மா, பாகிஸ்தான் அணியில் சயிட் அப்ரிடி, அஜ்மால் உட்பட உலக கிரிக்கெட் பிரபலங்கள் பலருடன் புகைப்படம் எடுத்து வைத்திருக்கிறார் சாருஜன்.

எனினும் இந்திய நட்சத்திர துடுப்பாட்ட வீரர் சச்சின் டெண்டுல்கரை மட்டும் சாருஜன் இன்னும் நேரடியாக சந்திக்கவில்லை. அவருடன் ஒரு புகைப்படம் எடுத்துக்கொள்ள வேண்டும் என்பது சாருஜனின் நீண்ட நாள் ஆசை.

அத்தனைப் புகைப்படங்களையும் அழகிய ஆல்பமாக செய்து வைத்திருக்கிறார் சாருஜனின் தந்தை சண்முகநாதன்.

கொட்டாஞ்சேனை சென்.பெனடிக் கல்லூரியில் முதலாம் தரத்தில் படிக்கிறார் சாருஜன். மேலதிகமாக கிரிக்கெட் பயிற்சியும் பெற்று வருகிறார்.

வாரத்தில் வெள்ளி, சனி, ஞாயிறு தினங்களில் கிரிக்கெட் பயிற்சிக்காக செல்ல வேண்டும். மற்ற நாட்களில் அம்மாதான் கெஞ்சிக் கூத்தாடி அவரை எழுப்ப வேண்டும். கிரிக்கெட் பயிற்சி நடைபெறும் தினங்களில் அதிகாலையிலேயே எழும்பி விடுவார். எங்களையும் எழுப்பி விடுவார். அந்த அளவுக்கு கிரிக்கெட் மீது ஆர்வம் இருக்கிறது சாருஜனுக்கு.

இலங்கை கிரிக்கெட் அணியில் இடம்பிடிக்க வேண்டும். நல்ல பெட்ஸ் மேனாகவும், விக்கெட் கீப்பராகவும் சங்ககார மாதிரி வரவேண்டும். இதுதான் என் இலட்சியம் என்கிறார் சாருஜன்.

சாருஜனின் விருப்பம் எப்படியோ அதற்கேற்ப அவரை உருவாக்குவோம் என்கிறார் சாருஜனின் தந்தை நம்பிக்கையோடு!

இலங்கை அணிக்கு ஒரு சிறந்த வீரர் உருவாகிறார்.சாருஜனை வாழ்த்தி விடைபெற்றோம்.


## தையல் பயிற்சி வகுப்புகள்

சகல விதமான ஆடைகளும் 06 மாதத்தில்
Tailoring முறைப்படி திறம்பட தைத்துக் காட்டப்படும்.

06 Months Course

பயிற்சி வகுப்புக்கள் நடைபெறும் இடங்கள் :-

- பண்டாரவளை - அனு Tailor (பண்சல Road) - செப்.17,18
- பசறை - Ideal academy - செப். 21,மு.ப. 10.00
- பதுளை - பிரதீபா நிலையம் - செப்.22, மு.ப.10.00
- ஹட்டன் - சக்தி கல்வி நிலையம் - செப்.23, மு.ப. 11.00

தையல் என்பதைப் பாடமாக மட்டுமல்லாமல் கலையாகக் கற்றுத்தரும் தென்னிந்திய கலைப்பாணியில் பயிற்சி பெற்ற பிரபல ஆசிரியை திருமதி இராஜேஸ்வரி குமார் அவர்களின் வழிகாட்டலின்......

தொடர்புகளுக்கு:
077 -9643159/ 0724304555 / 071 - 1697918


## கல் நெஞ்சம்



காலந்தொட்டு வந்த
காதல் மறைந்து
போவதில்லையே -நீ
என்னை விட்டு பிரிந்த
பின்பும்
நினைக்க தூண்டுதுன்னை
யே!
கல்லாய் இருந்த நெஞ்சங்
கூட
கரைந்து போனதுண்மையே -உன்
பார்வைபட்ட இதயங்கூட
சிதறி போனதிங்கேயே!

சவரிமுத்து டயஸ், டிக்கோயா.

உதய சூரியன் "கவிதைச்சமர்"
ஏசியன் மீடியா பப்ளிகேஷன்
இல. 68, எலிஹவுஸ் வீதி, கொழும்பு 15.
பெயர்:------------------------
முகவரி:------------------------
தொலைபேசி இல:------------------------

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY JAFFNA.

# அம்புக்குத்தான் தண்டனை! எய்தவனுக்கு இல்லையா?





அவரது பெயர் விஜயகலா. யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த காரைநகர் பிரதேசத்தைச் சேர்ந்தவர். காரைநகர் இந்துக்கல்லூரியில் தனது இளமைக் கல்வியைக் கற்றிருந்தாள்.

விஜயகலா 1992ஆம் ஆண்டு தனது உயர்தரப் பரீட்சையை முடித்துக் கொண்டு பெற்றோரின் பேச்சுக் கேற்ப, அவர்களின் விருப்பத்துடன் திருமண பந்தத்தில் இணையத் தயாரானார்.

ராசம்மா மற்றும் பரமுவின் இளைய மகளான விஜயகலா, தியாகராஜா மகேஸ்வரனுடன் திருமண பந்தத்தில் இணைந்தார். இந்து முறைப்படி இவர்களின் திருமணம் 1996 ஆம் ஆண்டு நடைபெற்றது. அன்றிலிருந்து விஜயகலா, மகேஸ்வரன் விஜயகலாவாக மாறினாள்.

தியாகராஜா மகேஸ்வரன் படிப்படியாக முன்னேறிக் கொண்டு வரும் ஒரு வியாபாரி. 1997 ஆம் ஆண்டு மீண்டும் தனது வியாபாரத்தை வடக்கு, கிழக்கு பகுதியில் நடத்திக்கொண்டு இருந்தார். இதில் அரசியல் பிரச்சினைகளும் ஏற்பட்டன. அதற்கு அஞ்சாமல் தனது வியாபாரத்தை தொடர்ச்சியாக நடத்திக் கொண்டு சென்றார்.

அந்த நேரத்தில் மகேஸ்வரன் குழந்தைகளின் தந்தையாவார். பவதாரணி தியாகராஜாவின் மூத்த மகள். இரண்டாவது மகன் பிரணவன். மூன்றாவது மகள் பவித்ரா. இவர்கள் கல்வி கற்றது தேசிய பாடசாலை ஒன்றில் ஆகும்.

வியாபாரியாக இருந்த மகேஸ்வரனின் மனம் மெல்ல மெல்ல அரசியலை நோக்கி நகர்ந்தது. 2000ஆம் ஆண்டு யாழ்ப்பாண மாவட்டத்தில் முதன் முதலாக அரசியல்வாதியாக தடம்பதித்தார். 35 வருடங்களுக்குப் பிறகு யாழ்பாணத்திற்கு சிறந்ததொரு அரசியல்வாதி கிடைத்தார்.

யாழ்ப்பாணத்திலிருந்து பாராளுமன்ற தேர்தலில் தெரிவு செய்யப்பட்டு இந்து முறைப்படி சாஸ்திர சம்பிரதாயங்களுடன் தனது பதவியை ஏற்றுக்கொண்டார். 2004 ஆம் ஆண்டு தேர்தலில் கொழும்பு மாவட்டத்தில் போட்டியிட்ட மகேஸ்வரன் 50,978 விருப்பு வாக்குகளை பெற்றார்.

வியாபாரம் மற்றும் குழந்தைகளின் கல்வி காரணமாக இவர் நிரந்தரமாக கொழும்பு வெள்ளவத்தை பிரதேசத்தில் தனது வீட்டில் தங்கியிருந்தார். அவர் வெள்ளவத்தை வீட்டில் இருந்தாலும் கொட்டாஞ்சேனையில் அமைந்துள்ள பொன்னம்பலவாணேஸ்வரர் கோவிலுக்கு அதிகாலையில் நடக்கும் பூஜை வழிபாட்டுக்கு செல்வார். அவர் மிகவும் தெய்வ நம்பிக்கையுடையவர். எவ்வளவு பணம் இருந்தாலும் தெய்வத்திற்குப் பிறகுதான் மற்றவை என்று தனது கொள்கையை வைத்திருந்தார் என்று மகேஸ்வரனின் மனைவி விஜயகலா கூறுகிறார்.

நாளுக்கு நாள் அரசியல், வியாபாரத்திலும் முன்னேறிக் கொண்டு வந்த மகேஸ்வரன் தனது நற்குணத்தால் எல்லோருக்கும் மிகவும் வேண்டப்பட்டவராகவும் அன்புக்கு பாத்திரமானவராகவும் இருந்து வந்தார்.

இதனால் தமிழ் மக்களின் மனதில் மட்டுமல்ல, சிங்கள மக்களினதும் மனதில் இடம் பிடித்தார். மகேஸ்வரன் இல்லாத அரசியலே தேவை இல்லை என்ற அளவுக்கு இவரின் புகழ் பேசப்பட்டது. இதனால் இவருக்கு எதிரிகள் உருவாக ஆரம்பித்தனர்.

ஒவ்வொரு நாளும் அதிகாலை கோவிலுக்கு செல்லும் மகேஸ்வரனின் கொள்கையை அறிந்த அவரது எதிரிகள் அவரைக் கொலை செய்வதற்கு தீர்மானித்திருந்தனர். 2008 ஆம் ஆண்டு புதுவருட பிறப்பன்று ஜனவரி முதலாம் திகதி மகேஸ்வரன் கொட்டாஞ்சேனையில் அமைந்துள்ள கோவிலுக்குச் சென்ற சந்தர்ப்பத்தில் சுட்டுக் கொல்லப்பட்டார்.

எனது கணவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் நடத்தப்பட்டு அவர் இறந்துவிட்டதாக காலையில் எனக்கு ஒரு தொலைபேசி அழைப்பு வந்தது. அதை என்னால் நம்பவே முடியவில்லை என்று துயர நினைவுகளை மீட்கிறார் விஜயகலா.

2008 ஆம் ஆண்டு ஆரம்பத்திலேயே விஜயகலாவின் காதில் விழுந்த முதல் செய்தி தனது கணவர் இறந்துவிட்டார் என்ற செய்தியே ஆகும். எல்லோரதும் கண்ணீரும், கண்களும் மகேஸ்வரனை பார்ப்பதற்கு சூழ்ந்தது.

மகேஸ்வரனின் கொலைக்கு அரசியலில் ஏற்பட்ட பிரச்சினைகளே காரணம் என விஜயகலா சந்தேகித்தார். 2004 ஆம் ஆண்டு மகேஸ்வரன் கொழும்பு தேர்தலில் ஈடுபட்டிருந்தார். 2009 ஆம் ஆண்டு யாழ். மாவட்டத்தில் போட்டியிட இருந்தார். அதைத் தெரிந்து கொண்டவர்கள் அவரை கொலை செய்திருக்கலாம் எனவும் அவர் சந்தேகம் தெரிவிக்கிறார்.

மகேஸ்வரன் இந்த உலகத்தை விட்டு சென்றாலும், அவரது அனைத்து நடவடிக்கைகளையும் தனியொரு பெண்ணாக நின்று விஜயகலா சாதித்தார். நிறைய பெண்கள் தமது கணவன் அரசியலில் இருந்து மறைந்தால் அரசியலில் காலடி வைப்பது தமது கணவனின் குறையைத் தீர்ப்பதற்கு. ஆனால் விஜயகலா அரசியலுக்கு வரக்காரணம் தனது கணவனைக் கொலை செய்தவனை சட்டத்தின் முன் நிறுத்துவதற்கே என்பது உங்களுக்குத் தெரியுமா?

அவளின் வாழ்வின் விளக்கு அணைந்து விட்டாலும், அவள் ஒவ்வொரு நாளும் தனது கணவனின் படத்திற்கு விளக்கேற்றி ஆசிர்வாதம் பெறுதல் வழக்கம். அவள் அரசியலில் பிரவேசிப்பதற்கு குடும்பத்தார் கடும் எதிர்ப்பு தெரிவித்தனர். இவைகளுக்கும், கொலை மிரட்டலுக்கும் அஞ்சாமல் துணிவுடன் முன்னின்று நடத்த தீர்மானித்தார்.

இதற்கிடையில் மகேஸ்வரனின் கொலை சம்பந்தமாக விரிவான விசாரணையை ஆரம்பிக்க அரசாங்கம் முடிவெடுத்தது. 2008 ஆம் ஆண்டு மகேஸ்வரன் கொலை சம்பந்தமாக ஜோன் வெலிங்டன் என்ற நபர் கைதானார். கொலை செய்தவருக்கு எதிராக கண்ணால் கண்ட சாட்சி பிரதேசவாசியொருவர் இருந்ததால் சட்டத்தின் முன் கொலையாளிக்கு தண்டனையைப் பெற்றுக் கொடுக்க கொழும்பு உயர் நீதிமன்றம் தீர்மானித்தது.

குற்றப்பத்திரம் 150 தாள்களுக்கு மேல் பதிவு செய்யப்பட்டு இருந்தது. இதை வாசித்துப் பார்த்த நீதிபதி கொலையாளியை தூக்கிலிடச் சொல்லி அண்மையில் உத்தரவிட்டார்.

உத்தரவின் பின் கொலையாளி தனக்கும், இந்த கொலைக்கும் சம்பந்தம் இல்லை என தெரிவித்ததாக கூறப்படுகிறது.

இந்நபர் ஏற்கனவே ஒருவரையும் கொலை செய்துள்ளமை விசாரணைகளில் தெரிய வந்திருப்பதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இவர்பற்றி வெளிவரும் தகவல்கள் இவ்வாறு அமைகின்றன.

கொலையாளியான ஜோன்வெலிங்டன் முன்னர் விடுதலைப்புலிகள் இயக்கத்தில் உறுப்பினராகச் செயற்பட்டு வந்தவர். காலப்போக்கில் அவ்வியக்கத்திலிருந்து பிரிந்து வடக்கிலுள்ள அரசியல் கட்சியில் தன்னை ஒரு உறுப்பினராக இணைத்துக் கொண்டு இயங்கி வந்தார். கொழும்புக்கு வந்த இவர் கொழும்பில் நீண்டகாலம் மகேஸ்வரனை உளவறியும் வேலையில் ஈடுபட்டு வந்துள்ளார். வசந்தன் என்ற பெயரில் அடிக்கடி மகேஸ்வரனுக்கு தொலைபேசி அழைப்பெடுத்து தொல்லை கொடுத்து வந்தவரும் இவரே. வசந்தன் என்பது ஆரம்பகாலத்தில் இவர் விடுதலைப்புலிகளின் உறுப்பினராக செயற்பட்டு வந்த பொழுது இவருக்கு வழங்கப்பட்ட இயக்கப் பெயராகும்.

மகேஸ்வரன் இறப்பதற்கு முன்னர் பிரபல தமிழ்த் தொலைக்காட்சியொன்றில் நேரடி விவாத நிகழ்ச்சியொன்றில் பங்கேற்றிருந்தமை உங்களுக்கு நினைவிருக்கலாம்.

இந் நிகழ்ச்சியில் இவர் கலந்து கொள்வதற்கு முதல்நாள் இவருக்குத் தொலைபேசி அழைப்பெடுத்த வெலிங்டன் மகேஸ்வரனை சுடப் போவதாக மிரட்டியதாக கூறப்படுகிறது.

பின்னர் தொலைக்காட்சி நேரடி விவாத நிகழ்ச்சியில் கலந்து கொண்டு நேயர்களின் கேள்விகளுக்கு

(தொடர்ச்சி 26ஆம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லிட்டில் சங்ககார சாருஜன்



வெறும் ஆறே வயது தான். உலக கிரிக்கெட் பிரபலங்கள் பலர் இவருக்கு அறிமுகம்! இலங்கை கிரிக்கெட் அணியினரின் செல்லப் பிள்ளை! கிரிக்கெட் வீரர்களதும் வர்ணனையாளர்களதும் ஆச்சரியமான பாராட்டைப் பெற்றிருக்கிறார். யூ டியூப்பில் இவரது வீடியோ மிகப் பிரபலமாக பார்க்கப்படுகிறது.

யாராவது உலகப் பிரபலங்களின் மகனாக இருந்தால், அல்லது தலை சிறந்த கிரிக்கெட் வீரரின் வாரிசாக இருந்தால் சிலவேளை இந்தப் புகழும் பெருமையும் இலகுவாக கிடைத்திருக்கக் கூடும்.

ஆனால் சாதாரண ஒரு சிறுவனுக்கு அதிலும் இலங்கையில் ஒரு தமிழ்ச் சிறுவனுக்கு கிடைத்திருக்கிறதென்றால் அது பெரும் ஆச்சரியம்தான்.

ஆம் இந்த ஆச்சரியத்திற்குரிய , பாக்கியத்திற்குரிய சிறுவன் சாருஜன். நடுத்தர குடும்பத்தைச் சேர்ந்தவர், அப்பா கிரிக்கெட் ஆர்வமுள்ளவர். புகைப்படக் கலைஞர். சாருஜன் கொழும்பு-15 இல் வசிக்கிறார்.

சாருஜனை அவரது தந்தையின் வர்த்தக நிலையத்தில் சந்தித்தோம். மழலைக்கே உரிய குணத்தோடு சாருஜன் வெட்கப்பட அவரது தந்தை சண்முகநாதன் சாருஜன் பற்றிச் சொல்கிறார். முகத்தில் தன் மகனை சான்றோன் எனக் கேட்ட பெருமிதம்.

சாருஜன் பிறந்து 10 -11 மாதத்தில் அவரது கிரிக்கெட் ஆர்வம் வெளிப்படதொடங்கி விட்டது. அவர் விளையாட கேட்பது எல்லாமே போல் தான். மற்ற குழந்தைகளைப் போல Gun வேணும் விளையாட்டு சாமான் வேணும் என்று கேட்கமாட்டார். . எங்களுக்கு ஆச்சரியமாக இருக்கும்.

எனக்கும் கிரிக்கெட் மீது ஆர்வம் அதிகம். சாருஜனுக்கு இரண்டு வயது இருக்கும் போது S.S.C மைதானத்தில் இலங்கை, இந்தியா டெஸ்ட் கிரிக்கெட் போட்டி பார்க்க கொண்டு போயிருந்தோம். சின்னக் குழந்தையைக் கொண்டு போறோமே அங்கே அழுது அடம்பிடித்தால் என்ன செய்வது. நான்கைந்து மணிநேரம் எப்படி பொறுமையாக இருப்பான் என்றெல்லாம் யோசித்தபடிதான் அவரைக் கொண்டு போனேன். ஆனால் சாருஜன் அமைதியாக ஆர்வமாக கிரிக்கெட் போட்டியை ரசித்ததைப் பார்த்த போது ஆச்சரியமாக இருந்தது. திரும்பி வீட்டுக்கு வருகின்ற போது ¨ அப்பா அவங்க காலில போட்டு இருக்கிறது மாதிரி வேணும் என்று கேட்டார்.

இவருடைய அளவுக்கு பேட் எடுக்கிறது அவ்வளவு சுலபமில்லையே. அதனால வீட்டில இருந்த அங்கர் மட்டையை எடுத்து காலில் கட்டி விட்டேன். அதன் பிறகு எங்கள் வீடே சாருஜனின் சிறு மைதானமாகிப் போனது.

அங்கர் மட்டையைக் கட்டிக் கொண்டு எந்நேரமும் கிரிக்கெட் விளையாடுவார். வளரவளர இவர் ரைட் சைட்டில் பந்து வீசுவதையும், லெப்ட் சைட்டில் பெட்டிங் செய்வதையும் அவதானித்தேன்.

அப்புறமாக நான் விளையாடப் போகும் போது மனைவிக்கு தெரியாமல் இவரையும் அழைத்துப் போய் விடுவேன்.கிரிக்கெட் ஆர்வம் வேணாம். படிப்பு கெட்டுடும்னு மனைவி திட்டுவாங்க.

ஒரு தடவை பாகிஸ்தான் - இலங்கை டெஸ்ட் கிரிக்கெட் போட்டி நடைபெற்றுக் கொண்டிருந்த போது நாங்களும் பார்க்கச் சென்றிருந்தோம்.

அந்த நேரத்தில் இவர் மைதானத்தின் ஓரத்தில் விளையாடிக் கொண்டிருந்தார். அப்போதுதான் யாரும் எதிர்பாராத அந்தச் சம்பவம் நடந்தது. இவர் துடுப்பாடுகின்ற விதம், பந்து வீசுகின்ற விதம் எல்லாவற்றையும் Tens Sports தொலைக்காட்சியில் ஒளிபரப்பாக்கி இருந்தார்கள். நாங்கள் மகிழ்ச்யில் திக்குமுக்காடிப் போனோம். இதன் பிறகு தான் கிரிக்கெட் உலகின் அறிமுகம் எமக்கு கிடைத்தது.




இப்போது லிட்டில் சங்ககார என்கிற அளவுக்கு இவருக்கு புகழ் கிடைத்திருக்கிறது. எனது மகன் சங்ககார மாதிரி விளையாடுவதாக சொல்கிறார்கள். சங்ககாரவின் அத்தனை ஸ்டைலும் சாருஜனுக்கு தானாகவே வருகிறது. சங்ககார பாணியில் இவர் விளையாடுவதை கண்ட பிரபல கிரிக்கெட் வர்ணனையாளர் டோனி கிரேக் இவருக்கு "லிட்டில் சங்ககார" எனப் பெயர் வைத்தார்.

மகனுக்கும் சங்ககாரவை ரொம்பப் பிடிக்கும். அவருக்கும் இவரை பிடிக்கும். சங்ககார அணித் தலைவர் பதவியிலிருந்து விலகும்போது சாருஜனுக்குத்தான் கடைசி கையொப்பமிட்டுள்ளார்.

சங்ககாரவை உங்களுக்கு ஏன் பிடிக்கும்? என சாருஜனிடம் கேட்டோம்.

அவர் நன்றாக விளையாடுவார். அவர் பெட்டிங் பண்ணுவது, கீப்பிங் பண்ணுவது பிடிக்கும். அதைவிட அம்பயர் அங்கிள் அவுட் காட்டினா ஒன்றும் சொல்லாம போய் விடுவாரு. ரொம்ப நல்ல அங்கிள். அதுமட்டுமில்ல சங்ககார அங்கிள் நல்லா விளையாடனும். நல்லா படிக்கனும்.

(தொடர்ச்சி-06 ஆம் பக்கம்)

நேர்காணல்: ஜீ.வி.எஸ், ரோஷன்









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






## கழிவறைக்கு 55 லட்சமா?



மொடல் மற்றும் சமூக சேவகியான, ஹொலிவுட் நடிகை கிம் கர்தாஷியானுக்கு பல முகங்கள் உண்டு. புதுமை என்ற பெயரில் எக்குத் தப்பாக எதையாவது செய்து, அவ்வப்போது சர்ச்சைகளில் சிக்குவது இவருக்கு வழக்கம். லேட்டஸ்ட்டாக இவர் செய்திருக்கும் புதுமை என்ன தெரியுமா? லொஸ் ஏஞ்சல்சில் உள்ள, தன் வீட்டில் தனக்கென பிரத்தியேகமாக ஒரு கழிவறையை அமைத்திருக்கிறார். இதற்காக 55 இலட்சம் ரூபாய் செலவழித்துள்ளார்.

ஒரு கழிவறை அமைப்பதற்காக, இவ்வளவு அதிகமான பணத்தை வீணடிக்க வேண்டுமா? என்ற கேள்விக்கு, என் வீட்டுக்கு உறவினர்களும், விருந்தினர்களும் அதிகமாக வருகின்றனர். இதனால், எங்கள் வீட்டுக் கழிவறை போதிய சுகாதாரமின்றி இருந்தது. நான் மட்டுமே உபயோகிப்பதற்காக இவ்வளவு பணத்தை செலவழித்து கழிவறையைக் கட்டியுள்ளேன். சுத்தம் தானே சோறு போடும்... என, எதிர்கேள்வி கேட்கிறார் கிம்.

## மனிதனுக்கு அஞ்சும் காட்டுவாசிகள்

ஏந்த ஒரு வசதியும் இல்லாமல் அடர்ந்த காட்டுக்குள் நூறு சதவீதம் இயற்கையோடு இயற்கையாக வாழும் நூற்றுக்கணக்கான பழங்குடியினர் இருக்கிறார்கள்.

குகைகளில் வசித்து விலங்குகளை வேட்டையாடும் பழங்குடி மக்கள் பலர் இன்னமும் சமைக்கத் தெரியாதவர்களாகவே இருக்கிறார்கள். நெருப்பைப் பற்றி தெரியும் என்றாலும், அதை வைத்து சமைக்கத் தெரியாது. அதேபோல் அவர்கள் உலகத்தோடு ஒட்டி உறவாடவும் விரும்புவது இல்லை. அந்தமான், நிகோபர் தீவுகளில் சென்டினல் என்ற தீவில் வசிக்கும் சென்டினலீஸ் பழங்குடி மக்கள் இதுவரைக்கும் தங்கள் அருகில் யாரையும் நெருங்கவிட்டதே இல்லை. நாகரீகத்தையும் நவீன உலகத்தையும் கற்றுத்தருகிறோம் என்று வெளியில் இருந்து காட்டுக்குள் செல்பவர்காளாலும் காட்டு மனிதர்களுக்கு ஆபத்து உண்டு. காட்டில் ஏற்படும் எவ்வளவோ கொடூரமான வியாதிகளில் பிழைத்துக்கொள்ளும் இவர்களால் நாகரீக மனிதர்களால் ஏற்படும் சாதாரண நோய்களைக்கூட தாங்கிக்கொள்ள முடிவதில்லை. உதாரணமாக நாகரீக மனிதன் மூலம் பரவிய ஜலதோஷத்தைக் கூட தாங்கமுடியாமல் காட்டு மனிதர்களின் உயிர் பறிபோய் விடுகிறது. இதனாலே நாகரீக மனிதர்கள் அவர்களுக்கு ஆகாதவர்களாக இருக்கிறார்கள்.

பிரேசில் அமேசன் நதிக்கு அருகே வசிக்கும் பழங்குடியின மக்களை புகைப்படம் எடுக்க ஹெலிகொப்டரில் சென்றார், புனாய் என்ற போட்டோ கிராபர். அந்த மக்களின் வசிப்பிடத்திற்கு மேல் ஹெலிக்கொப்டர் பறந்தபோது அதை ஏதோ பெரிய ஆபத்தான பறவை என்று நினைத்த காட்டுவாசிகள் அதை நோக்கி சரசரவென அம்புகளை விட்டனர். அதையும் தவற விடாமல் போட்டோ எடுத்து வந்து புனாய் பத்திரிகைகளில் வெளியிட, அந்தப்பகுதி மிகவும் பிரபலமானது. இப்போது பத்திரிக்கையாளர்கள் அந்தப்பகுதியை நோக்கி படையெடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

காட்டு விலங்குகளிடம் இருந்து தப்பிக்கத் தெரிந்த இந்த காட்டுவாசிகளுக்கு நவீன மனிதர்களிடம் இருந்து தப்பிக்கத் தெரியவில்லை.





## அம்மாடியோ! இவ்வளவு பெரிய பர்கரா?

அமெரிக்காவில் மினிசோட்டா பகுதியில் செயல்படும் சூதாட்ட விடுதி ஒன்று புதிய கின்னஸ் சாதனையை நிகழ்த்த திட்டமிட்டது. இதற்காக பதப்படுத்திய பன்றி இறைச்சி, பாலாடைக் கட்டி ஆகியவற்றுடன் கூடிய ராட்சத பர்கர் தயாரித்துள்ளது.

இதன் சுற்றளவு 10 அடி, எடை 914 கிலோவாகும். இதை தயாரிக்க 4 மணி நேரத்தை செலவிட்டதாக அந்நிறுவனம் கூறியுள்ளது.

பின்பு இந்த பர்கர் விடுதிக்கு வந்த வாடிக்கையாளர்களுக்கு உணவாக வழங்கப்பட்டது. இதனை பார்வையிட வந்த கின்னஸ் குழுவைச் சேர்ந்த பிலிப் கூறுகையில், இது அரிய சாதனை முயற்சி. சாப்பிடுவதற்கும் இந்த பர்கர் நல்ல சுவையுடன் இருந்தது என குறிப்பிட்டார்.

இதற்கு முன்பு 400 கிலோ எடை கொண்ட பர்கர் தான் சாதனையாக இருந்தது. தற்போது அதை இந்த புதிய பர்கர் முறியடித்திருக்கிறது.



## தாவரங்களுக்கு வாழ்க்கை கொடுக்கும்

மற்றவர்களைக் கவர்வதற்காக வீடுகளில் பல வடிவங்களில் பூச்சாடிகளை அமைத்து அவற்றுள் விதவிதமான பூச்செடிகளை வளர்ப்பார்கள்.



ஆனால் வினோதமான முறையில் சிந்தித்த நபர் ஒருவர் வித்தியாசமான காலணிகளின் வடிவமைப்புகளால் உருவாக்கப்பட்ட சாடிகளை அமைத்து அவற்றுள் பூச்செடிகள் போன்ற தாவரங்களை வளர்க்க முடியும் என்பதை அறிமுகப்படுத்தியுள்ளார்.

## எங்காவது இந்த மாதிரி போராட்டத்தை பார்த்ததுண்டா?

தமது விவசாய நடவடிக்கைகளுக்கு தேவையான நீர்மட்டத்தினை மேலும் உயர்த்தக்கோரி தமது எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்றினை வித்தியாசமான முறையில் வெளிப்படுத்தியுள்ளனர் இந்தியாவின் ஹண்ட்வாவின் ஜல் ஷட்ஜாக்ரஹா பிரதேசத்தைச் சேர்ந்த விவசாயிகள்.

அதாவது ஏறத்தாழ 90 விவசாயிகள் ஒன்றிணைந்து நீர் நிலை ஒன்றில் தமது தலைகள் மட்டும் வெளியில் தெரியும் வண்ணம் மூழ்கியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர். இப்போராட்டம் தொடர்ச்சியாக 15 நாட்கள் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏன் இந்தக் கொடூரம்?





இப்போதெல்லாம் நமது நாட்டில் ஏன்? எதற்கு என கண்டறியப்படாத வக்கிரமான கொலைகள் மிகச் சாதாரணமாக அரங்கேறுகின்றன. தாய் தந்தையரை திட்டமிட்டுக் கொன்ற மகன், சகோதரியை வல்லுறவுக்குட்படுத்திக் கொன்ற சகோதரன், சொத்துக்காக தந்தையை அடித்துக் கொன்ற மகன் என்ற செய்திகளைத்தான் இப்போதெல்லாம் அதிகம் காணமுடிகிறது.

அண்மைக்காலமாக பெண்கள், சிறுவர்கள் மிக மோசமாக கொல்லப்படுகிறார்கள். அல்லது வன்முறைக்கு ஆளாக்கப்படுகிறார்கள். இந்தக் கொலைகள் யாருமே எதிர்பார்த்திராத வகையில் குடும்பத்திற்கு மிக நெருக்கமான உறவினர்கள், நண்பர்கள் மூலமாகவே மேற்கொள்ளப்படுவது யாரைத்தான் நம்புவது என்ற அச்சத்தை விதைத்திருக்கிறது.

சம்பவங்கள் நடந்து முடிந்து போனபின்தான் இவர்களா இப்படி? என்று தலையில் கைவைக்க வேண்டிய நிலை ஏற்படுகிறது!

இந்த வரிசையில் கடந்த 4 ஆம் திகதி கொடக்க வெலை பகுதியில் இடம்பெற்ற இரு பாலகர்களின் கொலைகளும் சேர்ந்து கொள்கிறது.

இந்த திமுத்து லக்ஷான் (வயது 5) அவிஸ்க்க மகேஷ் சத்துரங்க (வயது 12) ஆகிய இந்தச் சிறுவர்கள் கடந்த 4 ஆம் திகதி இரவு 7.30 மணியளவில் கூரிய ஆயுதத்தால் குத்தியும் வெட்டப்பட்டும் மிகக் கொடூரமான முறையில் கொலை செய்யப்பட்டுள்ளனர்.

கொடக்கவெல பள்ளேபெத்த கல்பாய பகுதியில் இவர்களின் வீடு அமைந்துள்ளது. அக்கம் பக்கம் வீடுகள், எல்லோரும் உறவு இல்லாவிட்டாலும் உறவு முறை சொல்லிப் பழகும் அளவுக்கு நெருக்கமானவர்கள். இந்தச் சூழ்நிலையில் இவர்களின் பாதுகாப்பிற்கு எவ்வித பங்கமும் இருக்கவில்லை.

இவர்களின் தந்தை கொழும்பில் ஜா-எல பகுதியில் தொழில் புரிகின்றார். மாதத்தில் ஒரு தடவையோ இரண்டு தடவைகளோ இவர்களை வந்து பார்த்துச் செல்வார். எனவே தாய் சரோஜினியுடன் இச்சிறுவர்கள் வசித்து வந்தார்கள்.

கடந்த 4 ஆம் திகதி இரவு 7.30 மணி!

அக்கம் பக்கம் இருந்த குடும்பத்தினர் கூட உறங்கியிருக்கவில்லை. அருகில் இருந்த ஒரு வீட்டில் ஏதோ மதச் சடங்குகள் நடந்து கொண்டிருந்தன. அவ்வேளை இவர்களது வீட்டிலிருந்து தாய் சரோஜினியின் அவலக்குரல் ஒலித்தது.

என் பிள்ளைகளை ஒன்றும் செய்யாதே! அவர்களை விட்டு விடு! யாராவது என் பிள்ளைகளைக் காப்பாற்றுங்கள்!

தாயின் இந்தக் கூக்குரல் கேட்டு அயலவர்கள் ஓடிவந்தார்கள்.

வீடு முழுவதும் இரத்தக் காடு, தரையிலும் சுவரிலும் சிந்தி வழியும் இரத்தக் கோடுகள்,

ஒரு அறையில் வெட்டுப்பட்டு குற்றுயிராகக் கிடந்தார்கள் திமுத்து லக்ஷானும், மகேஷ் சத்துரங்கவும்.

தாய் சரோஜினியும் வெட்டுப்பட்டு கடும் காயங்களுடன் காணப்பட்டார்.

பிரதேச மக்கள் நிலைமையைக் கண்டு அதிர்ந்து மூவரையும் வைத்தியசாலைக்கு உடனடியாகக் கொண்டு சென்றனர். எனினும் காலன் முந்திக் கொண்டு விட்டான். திமுத்துவும் மகேஷ் சத்துரங்கவும் பரிதாபகரமாக மரணத்தைத் தழுவிக் கொண்டனர்.

**ஒளிந்திருந்த சந்தேக நபர்!**

இந்தக் கொலைகள் நடந்த தினம் மாலை குறித்த தாயின் சகோதரன் உறவுமுறை கொண்ட (சித்தியின் மகன்) 19 வயது நபர் இவர்களின் வீட்டுக்கு வந்துள்ளார். இவர் அடிக்கடி வந்து செல்பவர். தாய் சரோஜினிக்கும் குறித்த நபருக்குமிடையில் தகாத உறவு உண்டு என்ற கதை ஊரில் பரவலாகவே பேசப்பட்டு வந்தது.

தாய் சரோஜினியின் அவலக் குரல் கேட்டு அக்கம் பக்கத்தார்கள் ஓடிவந்த சமயம் வீட்டுக்குள் குறித்த நபர் இருக்கவில்லை. ஆக இக் கொலைகளுக்கும் அவருக்கும் தொடர்பு இருக்கலாம் என இலகுவாகவே யூகித்துக் கொண்ட அயலவர்கள் வீட்டைச் சுற்றிலும் தேடுதல் நடத்தினர்.

வீட்டுக்கு அருகிலிருந்து ஒரு மரத்தின் பின்னால் ஒளிந்திருந்த அந்நபர் பிடிக்கப்பட்டு நையப்புடைக்கப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

**கொலைக்கு முன்!**

இந்தக் கொலைகள் பற்றி தெரிய வருவதாவது:-

அன்றைய தினம் திமுத்துவுக்கும் மகேஷ் சத்துரங்கவிற்கும் இரவு உணவை வழமையான நேரத்திற்கு முன்பதாகவே தாய் உண்ணக் கொடுத்து உறங்கச் செய்துள்ளார். ஆனால் இருவரின் கண்களையும் உறக்கம் தழுவவில்லை. பாதி உறக்கத்தில் இருந்த திமுத்து அருகே தாய் இல்லாததைக் கண்டு சகோதரனையும் அழைத்துக் கொண்டு தாயைத் தேடினர். ஒரு அறையில் சந்தேக நபரும் தாயும் இருந்தனர். அங்கே இச்சிறுவர்கள் வந்ததைக் கண்ட சந்தேக நபர் தனது தவறான உறவு வெளியில் தெரிந்துவிடும் என்பதற்காக இவர்களை அடித்துள்ளதுடன் சமையலறைக்கு ஓடிச் சென்று பெரிய கத்தியை எடுத்துக் கொண்டு வந்து இருவரையும் சரமாரியாக தாக்கியுள்ளார். ஆயுதங்களில் தாக்கியுள்ளதாகவும் கூறப்படுகிறது.

என் பிள்ளைகளை விட்டுவிடு என்று கதறியபடியே தடுக்கவந்த தாய் சரோஜினியையும் சந்தேக நபர் தாக்கியுள்ளார்.

இந்நிலையில் தாயார் தனது வீட்டிலிருந்து வெளியே வந்து கூக்குரலிட்டு தன்னையும் தன் குழந்தைகளையும் காப்பாற்றுமாறு அபயக் குரல் எழுப்பியுள்ளார்.

பிரதேசவாசிகள் திரண்டு வருவதைக் கண்ட சந்தேக நபர் அங்கிருந்து தப்பிச் சென்றதாகக் கூறப்படுகிறது.

துரிதமாகச் செயல்பட்ட அயலவர்கள் சந்தேக நபரைப் பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

**மீளமுடியாத இழப்புகள்!**

சில நிமிடச் சலனங்கள், ஆசைகள் மிகப் பெரிய மீண்டும் பெற முடியாத இழப்புகளை ஏற்படுத்தி விடுகிறது. இந்த இரண்டு சிறுவர்களின் மரணமும் அப்படித்தான். இனி அந்தத் தாய் கதறினாலும் துடித்தாலும் அவரது குழந்தைகள் அவரிடம் திரும்பி வரப் போவதில்லை.

19 வயது சந்தேகநபரும் கூட கண நேர உந்துதலில் இரண்டு மரணங்களுக்கு காரணமாகியிருக்கிறார். இனி அவரது வாழ்க்கை?

மனிதர்களே சிந்தியுங்கள் மனிதப் பண்போடும் கலாசாரம் விதித்த கட்டுக்கோப்புகளுடனும் வாழுங்கள்! இல்லையேல் இழப்புகள் உங்களுக்கும் வரலாம்!

ஜீ.வி.எஸ்

டொமோஹோக் புதிர் இல. 44

புதிருக்குரிய கேள்வி 13.09.2012 உதயசூரியனில் வெளிவந்த சிகரம் பகுதியை அடிப்படையாகக் கொண்டு கீழ்த் தரப்பட்டுள்ளது. நீங்கள் செய்ய வேண்டியது கொடுக்கப்பட்ட கேள்விகளுக்கான விடையைக் கண்டு பிடிப்பது மட்டுமே. இந்தப் பக்கத்தில் கீழ்த் தரப்பட்ட டொமோஹோக் புதிர் இல. 44 என்பதை வெட்டி ஒரு தபால் அட்டையில் ஒட்டி பதில் எனும் வெற்றிடத்தில் உங்களுடைய விடையினை தெளிவாக எழுதி அனுப்புங்கள்.

இது உங்களுடைய சொந்த முயற்சி என்பதை ஒரு ஆசிரியர் அல்லது பெற்றோர் மூலம் உறுதிப்படுத்தி, தபால் அட்டையினை தரப்பட்ட முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

தபால் அட்டை அனுப்ப வேண்டிய முகவரி

டொமோஹோக் புதிர் இல. 44
ஞாயிறு தினக்குரல்
68, எலிஹவுஸ் வீதி,
கொழும்பு - 15.

8-16 வயதுக்கிடைப்பட்ட அனைத்து உதயசூரியன் வாசகர்களும் இதில் பங்குபற்ற முடியும்.

(ஒரு பைசிக்களை ஏற்கனவே பரிசாக வென்றெடுத்தவர்கள் இதில் பங்கு பற்றும் தகைமை பெறமாட்டார்கள்)

கேள்வி - புதிர் இல.44

கேள்வி : மனித மூளை பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ள இடம் எது?

பதில் : ..........................................

U/S



TOMAHAWK
Bicycles டொமோஹோக்
Mountain - BMX - Ladies - Kids
TOMAHAWK BICYCLE MALL

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

தினக்குரல்
Voice of Students
தினக்குரலில் இலவச கல்வி இணைப்பிதழ்



# கல்விக்குரல்



34 T I

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය 2012 දෙසැම්බර්
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2012 டிசம்பர்
**Genral Certificate of Education (Ord, Level) Examination, December 2012**

| | |
|---|---|
| ගණිතය<br>கணிதம் I<br>**Mathematics I** | පැය දෙක<br>இரண்டு மணித்தியாலம்<br>**Two hours** |

**குறிப்பு -** எல்லா வினாக்களுக்கும் இவ்வினாத்தாளில் விடை எழுதி எமக்கு அனுப்பி வைக்கவும். விடைகள் எழுதி அனுப்பி வைக்க வேண்டிய முகவரி ''கல்விக்குரல்'', யாழ். தினக்குரல், இல - 336 கே.கே. எஸ். வீதி யாழ்ப்பாணம்.


மாணவர் பெயர் : ..............................................................

பாடசாலை : ..............................................................

01. ஆறு பென்சில்களின் விலை ரூ.39 எனின், ஒரு பென்சிலின் விலை யாது?

02. 4.5 cm ஆரையுடைய வட்டத்தில் வரையப்படும் மிகப்பெரிய நாணின் நீளம் யாது?

03. தரப்பட்ட உருவில் x இன் பெறுமானம் யாது?





04. 5-3n என்ற பொது உறுப்பைக் கொண்ட தொடரின் பொது வித்தியாசம் யாது?

05. கூட்டுக. 0.7 + 0.077

06. 95.64 இல் 4இன் இடப்பெறுமானம் யாது?

07. $\frac{51}{100}$ ஐ சதவீதமாகத் தருக.

08. தரப்பட்ட உருவின் சுற்றளவை x சார்பாகத் தருக.





09. $\frac{x^{-5}}{4}$ என்பதை நேர்ச்சுட்டியாகத் தருக.

10. சுருக்குக. $14 - \frac{5}{9}$


11. புள்ளிப்பரம்பல் ஒன்றின் உத்தேச இடை 50 ஆக இருக்கும்போது மீடிறன் விலகல்களின் பெருக்கத்தின் கூட்டுத்தொகை 40 ஆகவும் மீடிறன்களின் கூட்டுத்தொகை 40 ஆகவும் இருப்பின் அப் புள்ளிப்பரம்பலின் இடையைக் காண்க.

12. 20cm, 8cm நீள அகலம் கொண்ட செவ்வகத்தில் நிழற்றப்பட்ட பகுதியின் பரப்பளவு யாது?




13. பரவளைவி ஒன்றின் சமன்பாடு $y = -(x-4)^2 + 5$ ஆகும். இவ் வளையியின்
(i) சமச்சீர் அச்சின் சமன்பாட்டைக் காண்க.
(ii) திரும்பல் புள்ளியின் ஆள் கூற்றைக் காண்க.

14. O ஐ மையமாகக் கொண்ட வட்டத்தில்
$O\hat{A}D = 40^0$ எனின்
(i) $B\hat{O}C$ இன் பெறுமானம் காண்க.




ஆசிரியர் - திரு. S. கிருஷ்ணதாஸ் ( யாழ்/ இந்துக் கல்லூரி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Educatation Voice of Thirukkural திருக்குறள் - கல்விக் குரல் Educatation Voice of Thirukkural திருக்குறள் - கல்விக் குரல் Educatation Voice of Thirukkural திருக்குறள் - கல்விக் குரல்

34 T I

# අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය 2012 දෙසැම්බර්
# கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2012 டிசம்பர்
# Genral Certificate of Education (Ord, Level) Examination, December 2012

## விஞ்ஞானம் I
## science I

පැ. එක
1 மணித்தியாலம்
One hours

கவனிக்குக.

- எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக. இவ் வினாத்தாள்களுக்கு 40 புள்ளிகள் வழங்கப்படும்.
- 1 தொடக்கம் 40 வரையான வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3),(4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.
- உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்திலுள்ளே புள்ளடியை (x) இடுக.
- அவ் விடைத்தாளின் பிற்பக்கத்தில் தரப்பட்டுள்ள மற்றைய அறிவுறுத்தல்களையும் கவனமாக வாசித்து அவற்றைப் பின்பற்றுக.

01. யூரியா தொகுக்கப்படும் இடம் எது?
   1. சிறு நீரகம் 2. ஈரல் 3. சதையி 4. இரைப்பை

02. அருகில் தரப்பட்ட தாவரம் பற்றிய இயல்புகளில் சரியானவை



   a) பிரிவிலி அமைப்பு அற்ற தாவரமாகும்.
   b) வேர்ப் போலிகளைக் கொண்டவை.
   c) கடத்தும் இழையங்களைக் கொண்டிருப்பதில்லை.
   d) உலர்ந்த சூழலில் வாழக்கூடியன.
   1. a,b,c மட்டும் 2. a,b,c,d
   3. b,c மட்டும் 4. a,c மட்டும்

03. சில வெண்குழிய வகை தரப்பட்டுள்ளது.





இவற்றுள் சிறுமணி (Granulocyte) கொண்ட வெண்குழிய வகை எவை?
   1. a,b,c 2. a,d,e 3. c,d,e 4. b,c,d

04. வெளிச்சுவாசத்தின் போது.
   1. பிரிமென்றகடு மேல் நோக்கி அசையும்
   2. பழுவிடைத்தசை மேல் நோக்கியும் வெளிநோக்கியும் அசையும்
   3. பிரிமென்றகடு கீழ் நோக்கி அசையும்
   4. பழுவிடைத்தசை மேல் நோக்கியும், பிரிமென்றகடு கீழ் நோக்கியும் அசையும்

05. பாற்கலனினால் உறிஞ்சப்படுவது
   1. அமினோ அமிலமும் குளுக்கோசும்
   2. கொழுப்பமிலமும் கிளிசரோலும்
   3. கொழுப்பமிலமும் குளுக்கோசும்
   4. அமினோஅமிலமும் கிளிசரோலும்

06. மனித உடலில் உள்ள இருவகையான தசையிழையம் தரப்பட்டுள்ளன. அத் தசையிழையங்கள் பற்றிய கூற்றுக்களுள் பிழையானது.




   1. தசையிழையம் I அழுத்தத் தசையாகும்.தசையிழையம் II இதயத் தசையாகும்
   2. தசையிழையம் I இல் குறுக்கு வரி காணப்படுவதில்லை.
   3. தசையிழையம் II மாத்திரம் இச்சையின்றியதாகும்
   4. தசையிழையம் I கிளையற்றது.தசையிழையம் II கிளை கொண்டது.

07.



இங்கு தரப்பட்ட மேலணியிழையம்
   1. எளிய செதின் மேலணி 2. கன மேலணி
   3. கம்ப மேலணி 4. படை மேலணி

08. அருகில் தரப்பட்ட அமைப்பு எத்தாவரப்பகுதியின் குறுக்கு வெட்டமைப்பைக் குறிக்கின்றது?



   1. மாவின் தண்டின் குறுக்கு வெட்டமைப்பு
   2. நெல்லின் தண்டின் குறுக்குவெட்டமைப்பு
   3. மாவின் வேரின் குறுக்குவெட்டமைப்பு
   4. நெல்லின் வேரின் குறுக்குவெட்டமைப்பு

09. காலில் தீண்டப்பட்ட நஞ்சானது நுரையீரலை அடையும் பாதை காட்டப்பட்டுள்ளது. இதில் A,B ஆகியவை குறித்து நிற்பன.
கால் ⟶ A ⟶ பிற்பெருநாளம் ⟶ வலதுசோணையறை ⟶ வலது இதய அறை ⟶ B ⟶ நுரையீரல்

| | A | B |
|---|---|---|
| 1. | புடைதாங்கி நாடி | நுரையீரல் நாடி |
| 2. | கால் நாளம் | நுரையீரல் வாயி நாளம் |
| 3. | புடைதாங்கி நாளம் | நுரையீரல் நாளம் |
| 4. | புடைதாங்கி நாளம் | நுரையீரல் நாடி |


10. ஈரல் (Liver) பற்றிய கூற்றுக்களுள் சரியானவை
   a - வயிற்றுக்குழியினுள் பிரிமென்றகட்டுக்கு கீழாக இரைப்பைக்கு மேலாக அமைந்துள்ளது.
   b - இது யூரியாவை வெளியேற்றுகின்றது.
   c - உடலில் நாடியாலும் நாளத்தாலும் குருதியைப் பெறும் அங்கம் இதுவாகும்.
   d - உடலில் அதிகளவு குருதியைப் பெறும் அங்கம் இதுவாகும்
   1. a,c,d மட்டும் 2. a,b,c மட்டும்
   3. c,d மட்டும் 4. a,b,c,d மட்டும்

ஆசிரியர் - திரு. எம். பிரியந்தன் ( பிரபல விஞ்ஞான ஆசிரியர்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

(ii) $\hat{CBD}$ இன் பெறுமானம் காண்க.

15. தரப்பட்ட முக்கோணி ABC இல் D,E என்பன AC,BC என்பவற்றின் நடுப்புள்ளிகளாகும். முக்கோணி ABC இன் பரப்பளவு $200cm^2$ எனின் முக்கோணி BDE இன் பரப்பளவைக் காண்க.





16. காரணி பற்றிய அறிவைப் பயன்படுத்திப் பெறுமானம் காண்க.
$\frac{10}{11} \times 0.27 - \frac{10}{11} \times 0.05$

17. கூட்டல் விருத்தி ஒன்றின் n உறுப்புக்களின் கூட்டுத்தொகை n(5+n) ஆல் தரப்படுகின்றது.இத் தொடரின் பொது வித்தியாசம் யாது?


18. இலவச மருத்துவ முகாமொன்றில் பங்குபற்றும் 5 மருத்துவர்களால் ஒரு நாளில் 6 மணி நேரம் வேலை செய்து 300 நோயாளர்களுக்குச் சிகிச்சை அளிக்க முடியும். மேலதிகமாக 5 மருத்துவர்கள் இணைந்து ஒரு நாளைக்கு 8 மணி நேரம் வேலை பார்த்தால் எத்தனை நோயாளர்களுக்குச் சிகிச்சை அளிக்க முடியும்?

19. தரப்பட்ட உருவில் ABCD ஓர் சதுரமும், ABE என்பது ஓர் சமபக்க முக்கோணியும் ஆகும். x இன் பெறுமானம் காண்க.




20. சுருக்குக. $\frac{x}{x+1} - \frac{1}{x(x+1)}$

21. தரப்பட்ட நேர்கோட்டு வரைபின் சமன்பாடு யாது?
(x அச்சிலும் y அச்சிலும் ஒரே அளவிடை பயன் படுத்தப்பட்டுள்ளது)





22. $\frac{x}{12} < \frac{2}{15}$ ஆகுமாறுள்ள மிகப்பெரிய நிறை எண் x ஐக் காண்க.

23. $P = \sqrt{\frac{k}{m}}$ என்பதில் m ஐ எழுவாயாக மாற்றுக.

24. A,B என்பன தம்முட் புறநீங்கும் நிகழ்ச்சிகளாக இருக்க $P(A) = \frac{1}{3}$, $P(B) = \frac{1}{2}$ எனின், P(AUB) ஐக் காண்க.

25. தரப்பட்ட உருவில் உள்ள இரு வட்டங்களினதும் மையம் O ஆகும். AB = BN , ON = 6cm, உள் வட்டத்தின் ஆரை = $2\sqrt{13}$cm ஆகும். தரவுகளைப் பயன்படுத்தி பெரிய வட்டத்தின் ஆரையைக் காண்க.




26. வெற்றுப் பெட்டியில் பொருத்தமான எண்களை இடுக.

$\square^3 + \square^3 = \square^2$

27. தரப்பட்ட மூன்று ஈட்டுக்களின் ஆகாரம், இடையம், இடை என்பன முறையே 6, 6, 7 ஆயின் அம் மூன்று ஈட்டுக்களையும் எழுதுக.

28. x : y = 1 : 2 எனின், $\frac{5x+6y}{y}$ இன் பெறுமானம் காண்க.

29. ஓட்ட வீரன் ஒருவன் $22\ ms^{-1}$ என்ற கதியில் வட்டவடிவமான மைதானமொன்றை ஓடி முடிக்க எடுத்த நேரம் 20 செக்கன்கள் எனின், அம் மைதானத்தின் ஆரையைக் காண்க.

30. $x = 10^{0.3841}$ , $y = 10^{1.6159}$ எனின், xy இன் பெறுமானம் காண்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Educatation Voice of Thinakkural
தினக்குரல் - கல்விக் குரல்
Educatation Voice of Thinakkural தினக்குரல் - கல்விக் குரல் Educatation Voice of Thinakkural தினக்குரல் - கல்விக் குரல் Educatation Voice of Thinakkural தினக்குரல் - கல்விக் குரல் Educatation Voice of Thinakkural தினக்குரல் - கல்விக் குரல்

**34 TI**

**අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය 2012 දෙසැම්බර්**

**கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2012 டிசம்பர்**

**Genral Certificate of Education (Ord, Level) Examination, December 2012**

**விஞ்ஞானம் I**
**science I**


**පැය එක**
**1 மணித்தியாலம்**
**One hours**

கவனிக்குக .

* எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக. இவ் வினாத்தாள்களுக்கு 40 புள்ளிகள் வழங்கப்படும்.
* 1 தொடக்கம் 40 வரையான வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3),(4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.
* உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (X) இடுக.
* அவ் விடைத்தாளின் பிற்பக்கத்தில் தரப்பட்டுள்ள மற்றைய அறிவுறுத்தல் களையும் கவனமாக வாசித்து அவற்றைப் பின்பற்றுக.

01. யூரியா தொகுக்கப்படும் இடம் எது?
 1. சிறு நீரகம் 2. ஈரல் 3. சதையி 4. இரைப்பை

02. அருகில் தரப்பட்ட தாவரம் பற்றிய இயல்புகளில் சரியானவை



 a) பிரிவிலி அமைப்பு அற்ற தாவரமாகும்.
 b) வேர்ப் போலிகளைக் கொண்டவை.
 c) கடத்தும் இழையங்களைக் கொண்டிருப்பதில்லை.
 d) உலர்ந்த சூழலில் வாழக்கூடியன.
 1. a,b,c மட்டும் 2. a,b,c,d
 3. b,c மட்டும் 4. a,c மட்டும்

03. சில வெண்குழிய வகை தரப்பட்டுள்ளது.




A B C D E

இவற்றுள் சிறுமணி (Granulocyte) கொண்ட வெண்குழிய வகை எவை?
 1. a,b,c 2. a,d,e 3. c,d,e 4. b,c,d

04. வெளிச்சுவாசத்தின் போது,
 1. பிரிமென்றகடு மேல் நோக்கி அசையும்
 2. பழுவிடைத்தசை மேல் நோக்கியும் வெளிநோக்கியும் அசையும்
 3. பிரிமென்றகடு கீழ் நோக்கி அசையும்
 4. பழுவிடைத்தசை மேல் நோக்கியும், பிரிமென்றகடு கீழ் நோக்கியும் அசையும்

05. பாற்கலனினால் உறிஞ்சப்படுவது
 1. அமினோ அமிலமும் குளுக்கோசும்
 2. கொழுப்பமிலமும் கிளிசரோலும்
 3. கொழுப்பமிலமும் குளுக்கோசும்
 4. அமினோஅமிலமும் கிளிசரோலும்

06. மனித உடலில் உள்ள இருவகையான தசையிழையம் தரப்பட்டுள்ளன. அத் தசையிழையங்கள் பற்றிய கூற்றுக்களுள் பிழையானது.



I II

 1. தசையிழையம் I அழுத்தத் தசையாகும்,தசையிழையம் II இதயத் தசையாகும்
 2. தசையிழையம் I இல் குறுக்கு வரி காணப்படுவதில்லை.
 3. தசையிழையம் II மாத்திரம் இச்சையின்றியதாகும்
 4. தசையிழையம் I கிளையற்றது,தசையிழையம் II கிளை கொண்டது.

07.



இங்கு தரப்பட்ட மேலணியிழையம்
 1. எளிய செதின் மேலணி 2. கன மேலணி
 3. கம்ப மேலணி 4. படை மேலணி

08. அருகில் தரப்பட்ட அமைப்பு எத்தாவரப்பகுதியின் குறுக்கு வெட்டமைப்பைக் குறிக்கின்றது?



 1. மாவின் தண்டின் குறுக்கு வெட்டமைப்பு
 2.நெல்லின் தண்டின் குறுக்குவெட்டமைப்பு
 3. மாவின் வேரின் குறுக்குவெட்டமைப்பு
 4. நெல்லின் வேரின் குறுக்குவெட்டமைப்பு

09. காலில் தீண்டப்பட்ட நஞ்சானது நுரையீரலை அடையும் பாதை காட்டப்பட்டுள்ளது. இதில் A,B ஆகியவை குறித்து நிற்பன.
கால் ⟶ A ⟶ பிற்பெருநாளம் ⟶ வலதுசோணையறை ⟶ வலது இதய அறை ⟶ B ⟶ நுரையீரல்

| | A | B |
|---|---|---|
| 1. | புடைதாங்கி நாடி | நுரையீரல் நாடி |
| 2. | கால் நாளம் | நுரையீரல் வாயிநாளம் |
| 3. | புடைதாங்கி நாளம் | நுரையீரல் நாளம் |
| 4. | புடைதாங்கி நாளம் | நுரையீரல் நாடி |

10. ஈரல் (Liver) பற்றிய கூற்றுக்களுள் சரியானவை
 a - வயிற்றுக்குழியினுள் பிரிமென்றகட்டுக்கு கீழாக இரைப்பைக்கு மேலாக அமைந்துள்ளது.
 b - இது யூரியாவை வெளியேற்றுகின்றது.
 c - உடலில் நாடியாலும் நாளத்தாலும் குருதியைப் பெறும் அங்கம் இதுவாகும்.
 d - உடலில் அதிகளவு குருதியைப் பெறும் அங்கம் இதுவாகும்
 1. a,c,dமட்டும் 2. a,b,cமட்டும்
 3. c,d மட்டும் 4. a,b,c,d மட்டும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# சிநேகிதியே

# வீட்டிலே 'க்ளீன் அப்' செய்து பாருங்கள்!

சாதாரணமாக க்ளீன் அப் என்றதுமே அனைவரும் முதலில் நினைப்பது முகத்திற்கு உபயோகிக்கும் 'பேஷ் வொஷ்' எனப்படும் திரவ வடிவிலமைந்த சவர்க்காரத்தை உபயோகிப்பது என்று. பேஷ் வொஷ் மற்றும் சவர்க்காரம் கொண்டு முகத்தை கழுவி சுத்தம் செய்வதனால் மாத்திரம் எமது முக அழுக்குகள் முற்றிலும் அகலுவதில்லை. இவ் பேஷ் வாஷ்ஷானது எமது சருமத்தின் வெளியேயுள்ள அழுக்குகளை மாத்திரமே அகற்ற உகந்தது. எமது முகத்திற்கு வெளியே இருப்பதைப் போல் எமது சருமத்திற்கு உள்ளேயுள்ள அழுக்குகளையும் நாம் சுத்தம் செய்வது அவசியம். இவற்றை இந்த பேஷ் வொஷ்களினால் அகற்றிவிட முடியாது. இந்த அழுக்குகளை அகற்ற நாம் தினமும் அழகுநிலையம் செல்ல வேண்டிய அவசியமும் இல்லை. இவற்றை மிக இலகுவான முறையில் நாம் வீட்டிலேயே மாதம் இரு முறை செய்துகொள்ளலாம் என கூறுகிறார் நம் அழகியற்கலை நிபுணர் தானுகா ரசாக்.



திருமதி தானுகா ரசாக்

க்ளீன் அப்பின் முதல் படியானது க்ளென்சர் முறையாகும். இவ் க்ளென்சரானது அழுக்குகளினால் மூடிக்கிடக்கும் துவாரங்களைத் திறக்கும் வேலையைச் செய்கிறது. இதற்கு மேலும் சிறந்ததான டீப் க்ளென்சரையும் நாம் பயன்படுத்தலாம்.

எந்த கிறீமை நீங்கள் உபயோகித்தாலும் மேல்நோக்கியே பூச வேண்டும். அத்துடன் கிறீம்கள் அகற்ற பாவிக்கப்படும் டிஷ்யு அல்லது ஸ்பொன்ஞ்களை பிரத்தியேகமாகவும் சுத்தமாகவும் பாவனைக்கு உட்படுத்த வேண்டும்.

நமது சருமமானது ஒட்சிசனை உள்ளெடுத்து காபனீரொட்சைட்டை வெளியே விடும் செயற்பாட்டை நாள்தோறும் செய்கிறது. ஆனால் இச்செயற்பாட்டை செய்யவிடாது எமது முகத்தில் படியும் மாசுக்களினால் துவாரங்கள் அடைக்கப்பட்டு எமது சருமத்திற்குத் தேவையான சீரான சுவாசவோட்டம், இரத்தவோட்டம் தடைப்படுகிறது. இவ் செயற்பாடுகள் ஒழுங்கே நடைபெறாது விடுவதினாலும் எமது முகம் பொலிவிழந்து போகின்றது.

எனவே, இவ் க்ளென்சர் எமது சருமத்தின் உள்ளே உள்ள துவாரங்களை திறந்து உள்ளே உள்ள திரவ திண்ம சவர்க்காரங்களினால் முடியாத அழுக்குகளை அகற்ற உதவிபுரிகின்றது. இரண்டாவதாக ஸ்கரப் எனப்படும் முறையாகும். இந்த ஸ்கரப்பை முகத்தில் சிறுசிறு புள்ளிகளாக பூசி மெதுவாக கைகளை ஈரப்படுத்திக் கொண்டே ஒரு 10 நிமிடம் மசாஜ் செய்து பஞ்சினால் முற்றிலும் நீர்த்தன்மையின்றி துடைத்து விடவேண்டும். இம்முறையின் போது சருமத்தின் இறந்திருக்கின்ற கலங்களை உயிர்ப்பிக்க முடிகிறது. பிறகு டோனர் கொண்டு நாம் திறந்துவைத்திருந்த துவாரங்களை மூடிவிடவேண்டும். இறுதியாக மொய்ஸ்டரைசரை உபயோகிக்க வேண்டும். இவ் மொய்ஸ்டரைசரானது சருமத்தின் நீர் இழப்பை ஈடு செய்வதோடு நீர் இழப்பையும் தடுக்கிறது. ஏனெனில், இதில் தண்ணீர்த் தன்மை எண்ணெய்த் தன்மை இரண்டுமே உண்டு.

தோழிகளே! நீங்கள் உங்கள் சருமம் தொடர்பான பல பிரச்சினைகளுக்கான விளக்கங்களை, தீர்வுகளை பெறுவதற்கு எமக்கு கடிதங்கள் எழுதிஅனுப்புங்கள். அவற்றுக்கான தீர்வுகளை எமது அழகுக்கலை நிபுணர் உங்களுக்கு அடுத்தடுத்த இதழ்களில் வழங்குவார்.

உங்கள் சந்தேகங்களுக்கான கடிதங்கள் அனுப்பவேண்டிய முகவரி:-

'சிநேகிதியே'
உதயசூரியன்,
68, எலி ஹவுஸ் லேன்,
கொழும்பு-15.

(தொடரும்...)

எஸ்.பிரியதர்ஷனி

## சுசியம் செய்வது எப்படி?



அரிசி மற்றும் உளுந்தை ஊற வைத்து அரைத்துக் கொள்ளவும். பஜ்ஜி மாவை விட கொஞ்சம் கட்டியாக இருக்க வேண்டும். கடலை பருப்பை குழைய வேக வைத்து தண்ணீரை வடித்து எடுத்துக் கொள்ளவும்.

ஒரு பாத்திரத்தில் கடலை பருப்பு, வெல்லம், தேங்காய் துருவல் மூன்றையும் போட்டு பிசையவும்.

வேண்டுமெனில் மிக்ஸியில் ஒரு சுற்றுச் சுற்றி எடுக்கலாம்.

பின்பு இதனை சிறு சிறு உருண்டைகளாக பிடிக்கவும்.

இந்த உருண்டையை அரைத்து வைத்துள்ள மாக் கலவையில் முக்கி எடுத்து எண்ணெயில் போட்டு சிவந்ததும் எடுக்கவும்.

## டிப்ஸ்

### தோல் சுருக்கம் குறைய

2 தேக்கரண்டி தயிர் எடுத்து அதில் அரைத் தேக்கரண்டி தேன் மற்றும் எலுமிச்சை பழச்சாறு கலந்து முகம், கழுத்து போன்ற இடங்களில் பூசி சிறிது நேரம் கழித்து கழுவி வந்தால் தோல் சுருக்கம் குறைந்து பளபளப்பாகும்.

### கரும்புள்ளிகள் குறைய

எலுமிச்சம் பழச்சாற்றை எடுத்து அதில் வெள்ளரிக்காய் சாறு கலந்து கரும்புள்ளி இருக்கும் இடத்தில் பூசி வந்தால் கரும்புள்ளிகள் குறையும்.

### பற்கள் பளபளப்பாக

எலுமிச்சம் பழத்தை எடுத்து சாறு பிழிந்து அதனுடன் உப்பை கலந்து பற்களில் தேய்த்துக் கழுவவேண்டும். இவ்வாறு வாரத்திற்கு ஒரு முறையாவது செய்து வந்தால் பற்கள் பளபளப்பாக காணப்படும்.

# பழங்களை எப்போது எப்படி சாப்பிடணும்?



காலையில் படுக்கையில் இருந்து எழுந்ததும் வெறும் வயிற்றில் பழங்கள் சாப்பிட்டால் உடலில் சேர்ந்திருக்கும் நச்சுப் பொருட்களை மலமாக வெளியேற்றும். இதனால், உடலுக்கு புத்துணர்ச்சியும், தெம்பும் கிடைக்கும்.

சாப்பிட்ட பின்பு பழம் சாப்பிட்டால் முதலில் பழம்தான் ஜீரணமாகும். உணவுகள் செரிக்க கூடுதல் நேரமாகும். உட்கொண்ட உணவுகள் செரிக்காத நிலையில், உடனே பழங்கள் சாப்பிடுவதால் வயிற்றுக்குள்ளே செரிமானமாகிக் கொண்டிருக்கும் உணவு கெட்டுப்போகும்.

அதனால், சாப்பிடுவதற்கு ஒரு மணி நேரத்திற்கு முன்பாகவோ அல்லது பின்னரோ பழங்கள் சாப்பிடுவதுதான் உடலுக்கு ஆரோக்கியம் தரும்.

பழங்களை தனியாக சாப்பிடாமல், அதனுடன் இனிப்பு சேர்த்து மிக்சியில் போட்டு அடித்து ஜூஸாக சாப்பிடும் வழக்கம் பலரிடம் உள்ளது. இது தவறு, பழங்களை ஜூஸாக சாப்பிடுவதைவிட பழமாக அப்படியே சாப்பிடுவதுதான் நல்லது. அவ்வாறு சாப்பிடுவதால் நார்ச்சத்து நிறைய கிடைக்கும். சத்தும் முழுமையாக கிடைக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




படம் : கும்கி
இசை : டி,இ ன்
பாடியவர் : ..ரஜனிகாந்த்,
ஸ்ரேயா ல்
பாடல் கபாரதி

ஆண்: சொல்லி டாலே அவ காதல
செல்லும் போதே சுகம் தாளல
இது போல் ஒரு வார்த்தையே
யாரிடமும் நெஞ்சு கேக்கல
இனி வேறொரு வார்த்தைய
கேட்டிடவும் எண்ணிப் பார்க்கல
அவ சொன்ன சொல்லே போதும்
அதுக்கு ஈடே இல்லை ஏதும்
ஏதும்...

பெண்:- சொல்லிட்டேனே இவ காதல
சொல்லும் போதே சுகம் தாளல
இது போல் ஒரு வார்த்தையே
யாரிடமும் சொல்ல தோணல
இனி வேறொரு வார்த்தைய
பேசிடவும் எண்ணம் கூடல
உனதன்பே ஒன்றே போதும்
துக்கு ஈடே இல்லை ஏதும்...
தும்...

ஆண்:- அம்மையவ சொன்ன சொல்
கேக்கல
ப்பனவன் சொன்ன சொல் கேக்கல
னுடைய சொல்ல கேட்டேன்..
ண்டு பேர ஒண்ணா பார்த்தேன்

பண்: மனசயே தொறந்து சொன்னா
ல்லாமே கிடைக்குது உலகத்துல
நவத எடுத்து சொன்னா
தோஷம் முளைக்குது இதயத்துல

ஆண்:- அட சொன்ன சொல்லே
போதும்
அதுக்கு ஈடே இல்லை ஏதும் ஏதும்...

பெண்: சொல்லிட்டேனே இவ காதல
ஆண்: சொல்லிட்டாளே அவ காதல

பெண்:- எத்தனையோ சொல்லு
சொல்லாமலே
உள்ளத்திலே உண்டு என்பார்களே
சொல்லுறதில் பாதி இன்பம்
சொன்ன பின்னே ஏது துன்பம்

ஆண்:- உதட்டுல இருந்து சொன்னா
தன்னாலே மறந்திடும் நிமிசத்துல
இதயத்தில் இருந்து சொன்னா
போகாம நிலைச்சிடும் உதிரத்துல
அவ சொன்ன சொல்லே போதும்
அதுக்கு ஈடே இல்லை ஏதும்...
ஏதும்...

(சொல்லிட்டேனே )



## சுயசரிதை எழுதுகிறார் தம்பி ராமையா!!

தேசிய விருதுக்குப் பிறகு பிரபலமாகியுள்ள தம்பி ராமையா ஆரம்பத்தில் மிகவும் வறுமை நிலையில் இருந்த சாதாரண நடிகர். சிறு சிறு வேடங்களில் நடித்து வந்தவர். வடிவேலு குழுவில் சேர்ந்து அவருக்கு காமெடி டிராக்குகளை எழுத ஆரம்பித்தார். பல படங்களில் அவருடன் நடிக்கவும் செய்தார். வடிவேலு ஹீரோவாக நடித்த இம்சை அரசன் 23 ஆம் புலிகேசி படத்தின் வெற்றிக்குப் பி அதே பாணியில் வடிவேலுக்கு ஒரு கதை எழுதினார். அதுதான் இந்திரலோகத் நா.அழகப்பன். பலகோடி செலவில் எடுக்கப்பட்ட இந்தப் படம் தோல்வியடை தது.

மைனா படத்தின் மூலம் அதிர்ஷ்டக்காற்று அடிக்க, இப்போது பிசியான நடிகராகிவிட்டார். லட்சக் கணக்கில் தினசரி கூலி பெறும் காஸ்ட்லியான நடிகராகவும் மாறிவிட்டார்.

இப்படி... தான் கடந்து வந்த பாதைகளை சுயசரிதையாக எழுதி வருகிறார். அதற்கு அனுபவ முகடுகள் என்று தலைப்பும் வைத்திருக்கிறார். அதோடு அன்னைமடி என்ற பெயரில் ஒரு முதியோர் இல்லமும் கட்டி வருகிறார்.

## மிஷ்கின் பாடிய குத்துப்பாட்டு!

தன் முகமூடி படத்தில் குடிமகன்களுக்காக ஒரு பாடல் பாடியுள்ள இயக்குனர் மிஷ்கின், தற்போது குருநாதர் வின்செண்ட் செல்வா இயக்கியுள்ள, துள்ளி விளையாடு படத்திலும் ஒரு தத்துவப் பாட்டு பாடியிருக்கிறார். செம ரகளையான இந்தப் பாடல், நான் முன் இயக்கிய யூத் படத்தில் இடம் பெற்ற, ஆல் தோட்ட பூபதி நானடா பாடல் போன்று ஹிட்டாகும்... என்கிறார் வின்செண்ட் செல்வா.




## சானாகான் துணிச்சல்!

தென்னிந்திய நடிகைகள் மது, புகை பழக்கத்திற்கு, அதிகமாக அடிமையாகியிருப்பதாக சானாகான் சொன்ன கருத்துக்கு பல நடிகைகள் எதிர்ப்பு தெரிவித்தனர். ஆனால், சானாகானோ, நான் சொன்னதில் எந்த தவறும் இல்லை. மும்பை ஓட்டல்களில் தென்னிந்திய நடிகைகள் அளவுக்கு அதிகமாக குடித்து விட்டு தள்ளாடியபடி நடப்பதை, அடிக்கடி நான் பார்க்கிறேன் என்று மீண்டும் துணிச்சலாகக் கூறிவருகிறார்.



## டொப் வன் ஹீரோ!

தொடர்ந்து ஐந்து படங்கள் நூறு கோடி ரூபாய்க்கும் மேல் வசூல் செய்திருக்கின்றன. சந்தேகத்திற்கு இடமின்றி ஓபனிங் கிங் அவர்தான். ஒரே வாரத்தில் பெருமளவு இலாபத்தை சம்பாதித்து விடலாம். வடக்கிலும் தெற்கிலும் மட்டுமல்ல அட்லஸ் மேப்பில் இல்லாத நாடுகளிலும் கூட அவருக்கு ரசிகர்கள் இருக்கிறார்கள். எனவே கல்லாப்பெட்டி அட்சயபாத்திரமாவது உறுதி. இதையெல்லாம் கூட்டிக் கழித்து கணக்குப் போட்டுப்பார்த்த டிப்ஸ் எனும் ஒரு நிறுவனம் அதிரடியாக ஒருகாரியத்தை செய்திருக்கிறது. நூறு கோடி ரூபாய் சம்பளம் தருகிறோம். கால்ஷீட் தருவீர்களா என அந்த நடிகரிடம் கேட்டிருக்கிறது. ஆனால் அந்த நடிகர் இன்னும் அதற்கு ஓகே சொல்லவில்லை. ஒருவேளை சம்மதித்து விட்டால் இந்திய சினிமாவில் அதிகூடிய சம்பளம் வாங்கிய நடிகர் என்ற பெயரை பெற்றுவிடுவார். அந்த நடிகர் சல்மான் கான்.





## மகனை லண்டனுக்கு அனுப்பிய ஷாருக்!

தன் மகனை சான்றோனாக மாற்றுவதற்குத் தானே எல்லா அப்பாக்களும் படாதபாடு பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஷாருக்கானும் அப்படித்தான். எனவேதான் தன் மகன் ஆர்யன்கானை லண்டனுக்கு படிக்க அனுப்பியிருக்கிறார். இந்தியாவில் இருந்தால் தன் மீதான மீடியா வெளிச்சம் மகன் மீதும் விழும். மீடியாக்கள் துரத்தி துரத்தி அவனைக் கண்காணிப்பார்கள். அவனது படிப்பு எதிர்காலம் கெட்டுவிடும் என்பதால்தான் இந்த ஏற்பாடாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ு
ரில்
களை
வேலு
துப் பிறகு
லாகத்தில்
யடைந்



## ஷங்கர் போட்ட கண்டிஷன்!

ஐ படப்பிடிப்பை தொடங்கியுள்ள இயக்குனர் ஷங்கர், படப்பிடிப்பு விறுவிறுப்பாக நடைபெற சில கண்டிஷன்களை போட்டுள்ளார். சரியான நேரத்தில் ஸ்பாட்டிற்குள் ஆஜராகி விட வேண்டும். தேவை இல்லாமல் யாரும் அரட்டையடிக்கக் கூடாது போன்ற கண்டிஷன்களை போட்டுள்ளார். இதனால், யூனிட் நபர்கள் ஆடிப் போயிருக்கின்றனர்.



## ஷாருக்கான் மீது வழக்கு!

ஏற்கனவே, கிரிக்கெட் மைதானத்துக்குள் குடிபோதையில், புகைபிடித்தபடி சென்று சர்ச்சையை ஏற்படுத்தியவர் இந்தி நடிகர் ஷாருக்கான். இவர் தற்போது, தேசிய கொடியை அவமதிக்கும் வகையில் போஸ் கொடுத்து நிற்பது போன்ற புகைப்படங்கள், இணையத் தளங்களில் வெளியாகியுள்ளன. இதன் காரணமாக, ஷாருக்கான் மீது வழக்குத் தொடரப்பட்டுள்ளது.



## வெயிட்டான வேடங்களில் அனுஷ்கா!

செல்வராகவனின், இரண்டாம் உலகம் படத்தில், டாக்டர் வேடத்தில் நடிக்கும் அனுஷ்கா, தாண்டவம் படத்தில் ரோ பிரிவு அதிகாரியாக நடிக்கிறார். இவ்விரு வேடங்களுமே, சம்பந்தப்பட்ட படங்களின் ஹீரோக்களுக்கு இணையான வெயிட்டான வேடங்கள்.



## எனக்காக பிறந்தவரை கடவுள் தருவார்-நயன்தாரா



சிம்பு, பிரபுதேவாவுடனான காதல் முறிவிற்கு பின்னர் நடிப்பதை முழு மூச்சாகக் கொண்டுள்ளார் நடிகை நயன்தாரா. தமிழில் அஜித்துடனும் தெலுங்கில் 3 படங்களிலும் நயன்தாரா நடித்து வருகிறார். படப்பிடிப்பில் கலந்து கொள்ள வந்த நயன்தாரா காதல் மீது தனக்கு இன்னும் நம்பிக்கை இருப்பதாக கூறினார்.

நான் நடிக்கும் ஒரு படம் தோல்வி அடைந்தால் அதில் செய்த தவறை அடுத்த படத்தில் திருத்திக் கொள்வதன் மூலம் வெற்றி பெறுவேன். இது போலத்தான் வாழ்க்கையும். எதிர்பார்த்த ஒன்று கிடைக் காவிட்டால் அதுபற்றி வருத்தப்படாமல் அதனை மறந்துவிட வேண்டும். கசப்பான அனுபவம்தான் நமக்கு கூடுதல் முன்னேற்றத்தை அளிக்கும். எனக்கு கடவுள் எவ்வளவோ கொடுத்து உள்ளார். இன்னும் காதல் மீது எனக்கு நம்பிக்கை உள்ளது. எனக்காக ஒருவர் பிறந்தே இருக்கிறார். அவரையும் கடவுள் எனக்கு கொடுப்பார் என்றார்.



## சிவகார்த்திகேயனின் டெக்னிக்!

தனுஷ் தயாரிக்கும் எதிர்நீச்சல் மற்றும் கேடி பில்லா கில்லாடி ரங்கா ஆகிய படங்களில் நடிக்கும் சிவகார்த்திகேயன் அடுத்து முன்னணி டைரக்டர்களின் படங்களில் நடிக்கவே விரும்புகிறார். அதனால் யாராவது புதுமுக இயக்குனர்கள் கால்ஷீட் கேட்டு துரத்தினால், 40 இலட்சம், 50 இலட்சம் என்று சொல்லி அவர்களை ஓட வைக்கிறார்.




படம்: சுப்ரமணியபுரம்
இசை: ஜேம்ஸ் வசந்தன்
பாடல்: தாமரை
பாடியவர்கள்: தீபா மிரியம், பெல்லி ராஜ்

ஆ......... ஆ...........
கண்கள் இரண்டால் உன் கண்கள் இரண்டால்
என்னைக் கட்டி இழுத்தாய் இழுத்தாய் போதாதென
சின்னச் சிரிப்பில் ஒரு கள்ளச் சிரிப்பில்
என்னைத் தள்ளி விட்டு தள்ளி விட்டு
மூடி மறைத்தாய்

(கண்கள் இரண்டால்)

பேச எண்ணி சில நாள்
அருகில் வருவேன்
பின்பு பார்வை போதும் என நான்
நினைத்தே நகர்வேன் ஏமாற்றி

கண்கள் எழுதும் இரு கண்கள் எழுதும்
ஒரு வண்ணக் கவிதை காதல் தானா
ஒரு வார்த்தை இல்லையே
இதில் ஓசை இல்லையே
இதை இருளிலும் படித்திட முடிகிறதே

இரவும் அல்லாத பகலும் அல்லாத
பொழுதுகள் உன்னோடு கழியுமா
தொடவும் கூடாத படவும் கூடாத
இடைவெளி அப்போது குறையுமா

மடியினில் சாய்ந்திட துடிக்குதே
மறுபுறம் நாணமும் தடுக்குதே
இது வரை யாரிடமும் சொல்லாத கதை

( கண்கள் இரண்டால் )

கரைகள் அண்டாத காற்றும் தீண்டாத
மனதுக்குள் எப்போது நுழைந்திட்டாய்
உடலும் அல்லாத உருவம் கொள்ளாத
கடவுளைப் போல வந்து கலந்திட்டாய்

உனையன்றி வேறொரு
நினைவில்லை
இனி இந்த ஊன் உயிர்
எனதில்லை
தடையில்லை சாவிலுமே
உன்னோடு வர

(கண்கள் எழுதும் இரு கண்கள் எழுதும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தந்தை சொல் மிக்க மந்திரமில்லை!

உண்மைச் சம்பவம்



கி.பி. 1798 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் முதலாம் திகதியன்று நடந்த சம்பவம்.

பிரெஞ்சு சக்கரவர்த்தியான நெப்போலியனின் உத்தரவுப்படி எல்.ஓரியண்ட் என்னும் கப்பலொன்று மத்திய தரைக்கடலில் ஊடுருவியது. அந்தக் கப்பலின் கப்டனாக விளங்கியவர் காசாபியான்கா. அவர் அன்றைய தினம் தன்னுடைய பதின்மூன்றே வயது நிரம்பிய மகன் கியாகோமாவையும் கப்பலில் அழைத்து வந்திருந்தார்.

அவர் கப்பல் பணிகளில் ஈடுபட்டிருந்தபோது தன் மகனை அழைத்துப் பாதுகாப்பான ஓரிடத்தில் அமர்த்திவிட்டு மகனே! எந்தச் சூழ்நிலை கப்பலில் ஏற்பட்டாலும் நீ இந்த இடத்தை விட்டு நகரக்கூடாது. நானே வந்து உன்னைக் கூட்டிச் செல்லும்வரை இங்கேயே இரு... எங்கேயும் போய்விடக்கூடாது! என்று கூறிவிட்டுத் தன் பணிகளில் மும்முரமானார்.

பிரெஞ்சுக் கடற்படைக் கப்பல்களில் ஒன்றான எல்.ஓரியண்ட் மத்திய தரைக்கடல் வழியே ஊடுருவித் தங்களைத் தாக்க வருவதை ஆங்கிலேயக் கப்பற்படை அட்மிரல் நெல்ஸன் அறிந்தார். எனவே அவர் தங்கள் பிரிட்டிஷ் படைக்கு சொந்தமான கப்பல்களால் எல். ஓரியண்ட்டைச் சுற்றி வளைத்துத் தாக்கத் தொடங்கினார்.

ஆனால், எல்லாவற்றுக்கும் ஈடு கொடுத்த நெப்போலியச் சக்கரவர்த்தியின் கப்பல் அந்த எதிர்ப்புகளை முறியடித்தவாறு முன்னேறிக் கொண்டே இருந்தது. ஆங்கிலேயப் படைகள் ஆத்திரமடைந்து எல்.ஓரியண்ட் கப்பலை நோக்கிச் சரமாரியாகத் துப்பாக்கிகளினால் சுட்டனர்.

இதனால் எல்.ஓரியண்ட் கப்பல் தீப்பிடித்துக் கொண்டது. கப்பலின் கப்டனாக இருந்த காசாபியான்கா படுகாயமடைந்தார். தீ கொழுந்து விட்டு எரிந்தவாறே மளமளவென்று கப்பலின் எல்லாப் பகுதிகளுக்கும் பரவியது.

இதனை படுகாயத்துடன் பார்த்த காசாபியான்கா இனியும் கப்பலைக் கட்டுப் பாட்டுக்குள் வைத்திருக்க முடியாது என்று தெரிந்து கொண்டார். ஆகவே, அவர் உரத்த குரலில் கப்பலை அழித்து விடுங்கள் என்று தன் படைகளுக்கு ஆணையிட்டார்.

அந்த வேளையில் தன்னுடைய பதின்மூன்று வயது மகனான கியாகோமாவைத் தான் கப்பலில் கூட்டி வந்திருக்கிறோம் என்ற விஷயத்தை அவர் மறந்துவிட்டார்.

தன்னுடைய மகன் தன் வார்த்தையை மீறாதவன் என்பதும் கட்டுப்பாடுடையவன் என்பதும் அவருக்குத் தெரிந்திருந்தும் அவனை மறந்து போனார். அந்த உத்தரவிட்ட கையோடு கடுமையான காயங்களுடன் கப்பலில் பிணமானார் அவர்.

தீ வேகமாகப் பரவி வந்ததைச் சிறுவன் பார்த்தான். ஆனால், தன்னுடைய தந்தை எந்தச் சூழ்நிலையிலும் இந்த இடத்தை விட்டு நகரக்கூடாது என்றல்லவா உத்தரவிட்டிருக்கிறார் என்ற எண்ணம் அவனுள் பிறந்தது.

பயத்துடன் தீயைப் பார்த்தவாறே! அப்பா! அப்பா! எங்கே இருக்கிறீர்கள்? என்று அலறினான். ஒரு சில விநாடிகளில் தீயானது அவன் இருந்த பகுதிக்குப் பரவியது. வெடி மருந்துக் கிடங்கு அருகேதான் இருந்தது. அந்த இடத்திலும் தீப்பற்றியது.

இதன் காரணமாக அந்தப் கப்பல் மிகப் பிரம்மாண்டமான சத்தத்துடன் வெடித்துச் சிதறியது. அதிலிருந்து சிறுவன் வெடித்துச் சிதறி மத்தியத்தரைக்கடலில் மூழ்கினான்.

தந்தை சொல் மிக்க மந்திரமில்லை என்று கடந்த சில நூற்றாண்டுகளுக்குள்ளே நிரூபித்துக் காட்டிய கியோகோமாவின் மனத்துணிவும், வீரமும், உறுதியும் இன்று வரை பிரெஞ்சு தேசத்தில் போற்றப்படுகிறது.

இந்தத் தீரத்தைக் கேள்விப்பட்ட ஆங்கிலக் கவிஞரான பெலிஸியா ஹெமான்ஸ் சிறுவனான கியாகோமாவைப் புகழ்ந்து நீண்ட கவிதை ஒன்றை எழுதி அஞ்சலி செய்தார்.

பிரெஞ்சின் கியோகோமாவும் அவன் புகழ் பாடிய ஆங்கிலக் கவிஞன் பெலிஸியா ஹெமான்ஸின் கவிதையும் இன்றுவரை புகழுக்குரியதாக விளங்குகின்றன.



## "அம்மா" எனும் வார்த்தை அர்த்தம் சொல்லும் வார்த்தை!

தமிழில்"அம்மா" எனும் வார்த்தை உருவான விதம் அம்மா என்பதில் உள்ளிருக்கும் உங்களுக்கு உயிர் கொடுத்தவள் தாய் என்பதால் முதல் எழுத்தாக "அ" எனும் உயிர் எழுத்தையும், உயிர் வளர மெய் (உடல்) தேவை என்பதால் "ம்" எனும் மெய் எழுத்தை இரண்டாவதாகவும், 10 மாதம் கழித்து உயிர், மெய் இரண்டையும் சேர்த்து உருவமாக உலவ விடுவதால் "மா" எனும் உயிர் மெய் எழுத்தையும் வைத்துள்ளனர்.

அதே போன்றுதான் "அப்பா" என்ற சொல்லும் அமைந்துள்ளது. இதில் தாய் மென்மையானவள் என்பதால் தான் அம்மா என்ற சொல்லில் "ம்" எனும் மெல்லின எழுத்து வந்துள்ளது. அப்பா எப்போதும் வன்மையானவர் என்பதால் அதில் "ப்" எனும் வல்லின எழுத்துப் பயன்படுத்தப்பட்டுள்ளது. எனவே தமிழ் மொழி என்பது பார்த்துப் பார்த்து செதுக்கப்பட்டுள்ள மொழி என்பதை நாம் புரிந்து கொள்ளவேண்டும்.

## மின்மினிப் பூச்சி


இரவு நேரங்களில் மின்னிக்கொண்டே செல்லும் சில பூச்சிகளை நாம் பார்த்திருக்கிறோம். இதைத் தான் மின்மினிப்பூச்சி என்று அழைப்பார்கள். விலங்கினங்களைப் பொறுத்தவரை, ஒருசெல் உயிரியில் இருந்து ஆழ்கடல் மீன்கள் வரை பல்வேறு உயிரினங்கள் ஒளியை உமிழக்கூடிய ஆற்றல் பெற்றவையாக விழங்குன்றன. அவற்றுள் மின்மினிப் பூச்சிகள் கூட்டமாக ஒளியை உமிழ்ந்து கொண்டு செல்வதைப் பார்க்க மிக அழகாக இருக்கும்.

மின்மினி ஒளியை உமிழ்வது உயிர் வேதியியல் செயலாகும். இந்தப் பூச்சிகள், சுவாசத்துளைகளின் வழியாகச் செல்லும் சுவாசக் குழல்கள் மூலம் சுவாசிக்கின்றன. இவற்றின் அடிவயிற்றுப் பகுதியில் தனிச்சிறப்பு மிக்க செல்கள் காணப்படுகின்றன. இந்தச் செல்களில் லூஸிபெரின் என்ற வேதிப்பொருள் காணப்படுகிறது. இந்தச் செல்களுடன் சுவாசக்குழல்கள் தொடர்பு கொண்டிருப்பதால், இதனுடன் ஒக்சிஜன் வினைபுரிந்து ஒளியைத் தருகிறது. இந்த வேதிவினைக்கு ஆற்றலும் தேவைப்படுகிறது. இந்தப் பூச்சிகள் பச்சை, சிகப்பு, மஞ்சள், ஒரேஞ்சு என பல்வேறு வகையான ஒளியை உமிழ்கின்றன.



## தெரிந்து கொள்வோம்

* உயிர் முடிச்சு என்பது முகுளம்.
* இயக்கு தசைகளை கட்டுப்படுத்துவது சிறுமூளை.
* நினைவாற்றலுக்கு காரணமாக அமைவது பெருமூளை.
* மனித மூளை பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ள இடம் கபாலம்.
* அரக்னாய்டு என்பது மூளைச் சவ்வு.
* நரம்புத் திசுக்களின் பணி உணர்ச்சிகளை கடத்துவது.
* முகுளத்தின் தொடர்ச்சி எனப்படுவது தண்டுவடம்.
* தண்டுவடத்தின் முக்கிய பணி அனிச்சை செயல்.







அன்பார்ந்த தம்பி, தங்கைகளே 'சிகரம்' பகுதி உங்களுக்கானது. உங்கள் படைப்பாற்றலுக்குக் களம் கொடுக்கக் காத்திருக்கிறது. உங்கள் ஆக்கங்களை எழுதி அனுப்புங்கள். தரம் கண்டு பிரசுரிக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11. கீழே தரப்பட்ட அமைப்புக்களின் செயற்பாடுகளை ஒழுங்குமுறையில் தருவது



A B C

1. வேரமுக்கம்,ஆவியுயிர்ப்பு,கசிவு
2. வேரமுக்கம்,கசிவு,ஆவியுயிர்ப்பு
3. ஆவியுயிர்ப்பு,வேரமுக்கம்,கசிவு
4. கசிவு,வேரமுக்கம்,ஆவியுயிர்ப்பு

12. இலைகன் காணப்படுவது,
1. பாசிகளும்,பங்கசுக்களும் சேர்ந்து வாழ்கின்ற ஓர் ஈட்டம்
2. பங்கசும்,அல்காக்களும் சேர்ந்து வாழ்கின்ற ஓர் ஈட்டம்.
3. பங்கசும்,பற்றீரியாக்களும் சேர்ந்து வாழ்கின்ற ஓர் ஈட்டம்.
4. பங்கசும்,பற்றீரியாவும்,அல்காவும் சேர்ந்து வாழ்கின்ற ஓர் ஈட்டம்.

13. X எனும் மூலகத்தின் சல்பைட்டின் சூத்திரம் $X_2S$ எனின் Xஇன் நைத்தரேற்றின் சூத்திரம் யாது?
1. $X_2NO_3$ 2. $XNO_3$ 3. $X(NO_2)_2$ 4. $X(NO)_2$

14. கரைப்பான் பற்றிய கூற்றுக்களுள் சரியானவை,
1. சமச்சீரற்ற இலத்திரன் பரம்பலினால் முனைவுக்கரைப்பான் உருவாகும்
2. எதனோல் எனும் கரைப்பான் மூலம் அயடீன் கரைக்கப்படுகின்றது.
3. எதனோல் ஓர் முனைவற்ற சேதனக்கரைப்பான் ஆகும்.
4. முனைவுக் கரைப்பானில் மூலக்கூறுகளிடையே கவர்ச்சி விசை அதிகம்.

1. 1,2 மட்டும் 2. 1,2,4 மட்டும் 3. 2,3,4 மட்டும் 4. 1,2,3,4 மட்டும்


15. குறித்த திணிவுடைய வாயுவின் கனவளவு $300cm^3$ அதன் அமுக்கம் 60cmHg ஆகும். வெப்ப நிலையை மாற்றாது கனவளவை $1200cm^3$ ஆக அதிகரிப்பின் புதிய அமுக்கம் யாது?
1. 15cmHg 2. 240cmHg 3. 6000cmHg 4. 0.06cmHg

16. இரும்பின் மீது கொதி நீராவி செலுத்தும் போது பின்வரும் தாக்கம் நடைபெறுகின்றது.

$$3Fe_{(s)} + 4H_2O_{(g)} \longrightarrow Fe_3O_{4(s)} + 4H_{2(g)}$$

இத்தாக்கத்தின் படி 16g $H_{2(g)}$ தயாரிக்க தேவையான Fe திணிவு யாது?(Fe =56,O =16,H=1)
1. 336g 2. 112g 3. 56g 4. 28g


17. மாறாவெப்ப நிலையில் நிலையான திணிவைக்கொண்ட வாயுவின் அமுக்கத்திற்கும் கனவளவின் தலைகீழ்ப் பெறுமானத்திற்கும் இடையிலான வரைபைக் காட்டுவது




18. $3.01 \times 10^{22}$ மூலக்கூறுகளைக்கொண்ட N இன் அணுதிணிவு (N= 14)
1. 1.4g 2. 0.7g 3. 2.8g 4. 7g


19. $XAl + YH_2SO_4 \longrightarrow Al_2(SO_4)_3 + ZH_2$ மேற்படி தாக்கத்தில் X,Y,Z ஆக வரக்கூடிய பெறுமானங்கள் முறையே
1. 2,3,3 2. 3,3,2 3. 3,2,3 4. 2,3,2

20. அருகில் தரப்பட்ட பரிசோதனை எதற்காக ஒழுங்குபடுத்தப்பட்டது



1. சுவாசத்தின் போது $CO_2$, $H_2O$ வெளியேறும் எனக்காட்ட
2. தகனத்தின் போது $CO_2$, $H_2O$ வெளியேறும் எனக்காட்ட
3. தகனத்திற்கு $O_2$ அவசியம் எனக்காட்ட
4. தகனத்தின் போது சக்தி வெயியேறும் எனக்காட்ட

21. அமோனியாவின் ($NH_3$)பங்கீட்டு பிணைப்பை சரியாகக் காட்டும் அமைப்பு




22. பின்வருவனவற்றுள் ஒற்றை இடப்பெயர்ச்சித் தாக்கமாக அமைவது
1. $2KMnO_4 \longrightarrow K_2MnO_4 + MnO_2 + O_2\uparrow$
2. $C + O_2 \longrightarrow CO_2\uparrow$
3. $NaOH + HCl \longrightarrow NaCl + H_2O$
4. $Mg + 2HCl \longrightarrow MgCl_2 + H_2\uparrow$

23.




இங்கு தரப்பட்ட சாலக அமைப்பிற்கு பொருத்தமாக அமைவது முறையே
1. காரீயம்,மரக்கரி
2. வைரம்,கந்தகம்
3. வைரம்,காரீயம்
4. காரீயம்,வைரம்

24. 64g ஒட்சிசனில் உள்ள மூலக்கூறுகளின் எண்ணிக்கை பின்வருவனவற்றுள் (O=16) எது?

1. $\frac{6.02 \times 10^{23}}{16} \times 64$ 2. $\frac{6.02 \times 10^{23}}{64} \times 32$


3. $\frac{6.02 \times 10^{23}}{64} \times 16$ 4. $\frac{6.02 \times 10^{23} \times 64}{32}$

25. இப் பொருளை மட்டுமட்டாக இழுப்பதற்கு பிரயோகிக்க வேண்டிய விசை F யாது?




1. 150N 2. 600N 3. 30N 4. 75N


அருகில் நெம்பின் அமைப்புக் காட்டபட்டுள்ளது.
(26,27 ஆம் வினாக்களுக்கு இவ் அமைப்பைப் பயன்படுத்துக)




26. பொறிமுறை நயம் யாது?
1. 3 2. 1/3
3. 30 4. 1/30


27. பொறியின் திறன் யாது?
1. 75% 2. 65%
3. 50% 4. 100%

28. குறித்த உயரத்தில் ஓய்வில் இருந்து விடப்பட்ட கல் ஒன்று நிலத்தை அடிக்கும் வரையான வேகநேர வரைபு பின்வருவனவற்றுள் எது?





29. பின்வரும் ஒளிக்கதிர் படங்களில் தவறானது


1.





2.





3.




4.




30. தரப்பட்ட மின் சுற்று எப்படலைச்சுற்றைக் காட்டுகின்றது




1. OR - Gate 2. AND - Gate
3. NOT - Gate 4. NOR - Gate

31. 60Ω தடையுடைய நிக்ரோம் கம்பிச்சுருளினூடாக 2 நிமிடங்களுக்கு 0.2 A மின்னோட்டம் பாய்கின்றது எனில் அது வெளியிட்ட சக்தி யாது?
1. 144J 2. 48J 3. 0.08J 4. 288J

32. அருகில் தரப்பட்ட தடை அமைப்பின் விளைவுகளுக்கு சமனான தடையைக் கொண்ட அமைப்பு எது?





1.





2.




3.





4.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


33. ஆடலோட்ட முதல் ஒன்றில் இருந்து வரும் மின்னோட்டம் சீராக்கும் இருவாயி மூலம் சீராக்கப்படுகின்றது. CRO வில் தோன்றும் அலைவடிவம்




1. 


2. 



3. 


4. 



34. பின்வருவனவற்றில் உந்தத்தின் அலகாக அமைவது
1. $kgms^{-2}$  2. $ms^{-2}$
3. $kgms^{-2}$  4. $Nm^{-2}$


35. படிக்கட்டு மாற்றின் அமைப்பு காட்டப்பட்டுள்ளது.இதில் முதன்மைச் சுருள் 20 சுற்றுக்களையும் 240v ஐயும் கொண்டது.துணைச்சுருளில் 400 சுற்றுக்கள் காணப்படின் துணைச்சுருளில் தூண்டப்படும் அழுத்தம் யாது?
1. 4800V
2. 1.2V
3. 333.33V
4. 8000V


240V 

36. 


அருகில் தரப்பட்ட வேக நேர வரைபிற்கேற்ப இடப்பெயர்ச்சி நேர வரைபை சரியாகக் காட்டுவது

1. 



2. 


3. 


4. 


37. தற்போது இலங்கையில் டெங்கு நோய் குடம்பிகளைக் கட்டுப்படுத்தப் பயன்படும் பக்ரீரியா வகை
1. BTI
2. Acetobactor
3. Rhizobium
4. Steptococus

38. மலேரியா நுளம்பு ஒன்றின் வாழ்க்கை வட்டத்தில் Plasmodium vivax எனும் மலேரியா நோய்க்காரணி மனித உடலில் கடத்தப்படுவதை படம் காட்டுகின்றது. இங்கு X எனக்காட்டப்படுவது
1. செங்குழியம்
2. ஈரல்
3. சிறுநீரகம்
4. இதயம்




39.நற்போசணையாக்கத்தை ஏற்படுத்தும் அயன்களாவன
1. $Na^+$, $K^+$
2. $CO_3^{2-}$, $Cl^-$
3. $Mg^{2+}$, $Ca^{2+}$
4. $PO_4^{3-}$, $NO_3^-$

40. 2012 ஆம் ஆண்டு உலகம் அழிவடையலாம் என சிலர் கருதுகின்றனர். ஞாயிற்றுத் தொகுதியிலுள்ள கோள்கள் ஒரு பிரதேசத்தில் சேர்வதனால் புவி சுழல்வது தடைபடும். இது நிகழலாம் என நம்புகின்றனர்.இவ்வாறு விஞ்ஞானிகள் மத்தியில் பரபரப்பை ஏற்படுத்தக் காரணமாய் அமைவது
1. ஹரிப்பொட்டர்
2.மாயன்கலண்டர்
3.பைபிள்
4.திருக்குர்ஆன்

**கல்விக்குரல் – 03**  **பாடம் :– விஞ்ஞானம் – I**  **முடிவுத்திகதி – 13.09.2012**

**மாணவர் முழுப்பெயர் – ........................................**  **கல்வி கற்கும் பாடசாலை – ........................................**

| | | | |
|---|---|---|---|
| 1. ① ② ③ ④ | 11. ① ② ③ ④ | 21. ① ② ③ ④ | 31. ① ② ③ ④ |
| 2. ① ② ③ ④ | 12. ① ② ③ ④ | 22. ① ② ③ ④ | 32. ① ② ③ ④ |
| 3. ① ② ③ ④ | 13. ① ② ③ ④ | 23. ① ② ③ ④ | 33. ① ② ③ ④ |
| 4. ① ② ③ ④ | 14. ① ② ③ ④ | 24. ① ② ③ ④ | 34. ① ② ③ ④ |
| 5. ① ② ③ ④ | 15. ① ② ③ ④ | 25. ① ② ③ ④ | 35. ① ② ③ ④ |
| 6. ① ② ③ ④ | 16. ① ② ③ ④ | 26. ① ② ③ ④ | 36. ① ② ③ ④ |
| 7. ① ② ③ ④ | 17. ① ② ③ ④ | 27. ① ② ③ ④ | 37. ① ② ③ ④ |
| 8. ① ② ③ ④ | 18. ① ② ③ ④ | 28. ① ② ③ ④ | 38. ① ② ③ ④ |
| 9. ① ② ③ ④ | 19. ① ② ③ ④ | 29. ① ② ③ ④ | 39. ① ② ③ ④ |
| 10. ① ② ③ ④ | 20 ① ② ③ ④ | 30. ① ② ③ ④ | 40 ① ② ③ ④ |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கணிதம்

31.08.2012 அன்று வெளி வந்த வினாப்பத்திரத்திற்கான விடைகள்

**ஆசிரியர் - வி. குகநாதன்** பகுதி - **I A**

(1) (-4) — 1 புள்ளி

(2) $x = 30^o$ — 1 புள்ளி

(3) 5 — 1 புள்ளி

(4) 26 cm — 1 புள்ளி

(5) $6\sqrt{5}$ — 1 புள்ளி

(6) n(A) = 4 — 1 புள்ளி

(7) $\frac{11 + 9}{2} = 10$ — 1 புள்ளி

(8) {1,3,2,4,6,7} — 1 புள்ளி

(9) 3 x 1 — 1 புள்ளி

(10) 1.4770 — 1 புள்ளி

(11) $2 \times 3 \times a^2 \times b = 6a^2b$ — 2 புள்ளிகள்

(12) CD = 12cm, CY = 6cm — 2 புள்ளிகள்

(13) 20 மனித நாள் — 2 புள்ளிகள்

(14) i. 4cm ii. $90^o$ — 2 புள்ளிகள்

(15) $\pi a + 2a$ / $a(\pi + 2)$ — 2 புள்ளிகள்

(16) (x - 1) (2 - 3y) OR (3y - 2) ( 1- x) — 2 புள்ளிகள்

(17) $3x = 180^0$, $x = 60^o$ — 2 புள்ளிகள்

(18) i. $\frac{1}{3}$ , ii. 3 — 2 புள்ளிகள்

(19) $\frac{35}{7} \times 100$ = ரூபா 500 — 2 புள்ளிகள்

(20) i. $x = 60^o$ ii. $y = 100^o$ — 2 புள்ளிகள்

(21) i. 300 பங்குகள் ii. ரூபா 3000 — 2 புள்ளிகள்

(22) x = +3 OR x = (-3) — 2 புள்ளிகள்

(23 i. (-3) ii. x = (-1) — 2 புள்ளிகள்

(24) $F = \frac{v^2 - u^2}{2s}$ — 2 புள்ளிகள்


(25) $12^2 + 5^2 = 169\ cm^2$ — 2 புள்ளிகள்

(26) i. x = 2 ii. y = 3 — 2 புள்ளிகள்

(27) $3^5 = 243$ — 2 புள்ளிகள்


(28 ) 01

(29 )




2 புள்ளிகள்

(30)




கோண இருகூறாக்கி — 2 புள்ளிகள்

## பகுதி I B

i. ரூ. 70,00 - ரூ.25,000 = ரூ.45,000

ii. $\frac{10}{100} \times 30,000$ = ரூ.3,000

iii. ரூ. 45000 - ரூ 30000 = ரூ 15000

iv. 15/100 x 15000 = ரூ 2250

V . ரூ3000 + ரூ 2250 = ரூ 5250

02.

i. பாலன்: ரஞ்சன்:தனா

3000 : 40000 : 40000

3 : 4 : 4

ii. 3 x 12 : 4x8 : 4x6 = 9 : 8 : 6

iii. 8/23 x 46000 = 16000/=

iv. 3/23 x 46000 = 6000/=

அல்லது

பாலன் பெறும் இலாபம் = 9/23 X46000 = 18000/=

தனா பெறும் இலாபம் = 6/23 X 46000 = 12000/=

ஆகவே தனா பாலனை விடக் குறைவு = 6000/=

03. i. $2\pi r = 176$

$22 \times 22/7 \times r = 176$

r = 28 cm

ii. $\pi r^2 = 22/7 \times 28 \times 28$

$= 2464 cm^2$

iii. 176 cm

iv. $176 \times 100 = 17600 cm^2$

v. 17600 + 2 x 2464


17600 + 4928

$= 22528\ cm^2$

vi. $246400\ cm^3$

246.4 l


04. i.




ii. 6 பேர்

iii. 3 பேர்

iv. ரஞ்சன்





v. 15 / 6

05.

i. 8 பேர்

ii. 40 - 60




V. 20/50 X 100 = 40%

# தமிழ் மொழியும் இலக்கியமும்

31.08.2012 அன்று வெளி வந்த வினாப்பத்திரத்திற்கான விடைகள்

**ஆசிரியர் - ந. கணேசமூர்த்தி** பகுதி - **I**

| | | | |
|---|---|---|---|
| **1. 3** | **11. 2** | **21. 4** | **31. 4** |
| **2. 4** | **12. 4** | **22. 3** | **32. 2** |
| **3. 4** | **13. 2** | **23. 2** | **33. 3** |
| **4. 1** | **14. 3** | **24. 4** | **34. 2** |
| **5. 4** | **15. 2** | **25. 1** | **35. 4** |
| **6. 2** | **16. 4** | **26. 2** | **36. 2** |
| **7. 1** | **17. 3** | **27. 1** | **37. 3** |
| **8. 3** | **18. 3** | **28. 2** | **38. 3** |
| **9. 4** | **19. 2** | **29. 2** | **39. 1** |
| **10. 1** | **20. 2** | **30. 4** | **40. 2** |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பகுதி B

எல்லா வினாக்களுக்கும் விடை தருக.

(01)

| செப்பு | தங்கம் | அழைக்கப்படும் வகை | விகிதம் (எளிய வடிவத்தில்) |
|---|---|---|---|
| 2 | 22 | 22 கரட் | 1 : 11 |
| 6 | 18 | 18 கரட் | 1 : 3 |
| 15 | 9 | 9 கரட் | 5 : 3 |

தங்கப் பவுண் ஒன்றின் நிறை 8g ஆகும்.
பவுண் ஒன்றில் 28 மஞ்சாடிகள் உண்டு.

(i) 22 கரட் தங்கத்தினால் செய்யப்பட்ட சங்கிலி ஒன்றின் நிறை 24g ஆகும். இதில் தங்கத்தின்நிறையை கிராமில் தருக.


(ii) 18 கரட் தங்கத்தினால் செய்யப்பட்ட வளையலொன்றின் நிறை 16g ஆகும். இதில் அடங்கியுள்ள செப்பின் நிறையை கிராமில் தருக.

(iii) 24 மஞ்சாடிகள் நிறையுள்ள ஒரு சோடி தோடுகள் 9 கரட் தங்கத்தினால் செய்யப்பட்டுள்ளது.

a. தோடுகளில் அடங்கியுள்ள தூய தங்கத்தின் நிறையை கிராமில் (கிட்டிய 1ம் தசம தானத்தில்) தருக.

b. தோடுகளில் அடங்கியுள்ள செப்பின் நிறையை கிராமில் (கிட்டிய 1ம் தசம தானத்தில்) தருக.

(02) புத்தகக் கடை ஒன்றில் ஒரு தினத்தில் விற்கப்பட்ட நாவல்களினதும், கவிதைப் புத்தகங்களினதும் எண்ணிக்கை தரப்பட்டுள்ளது. ஒருவர் ஒருவகைப் புத்தகத்தில் ஒரு புத்தகத்தை மட்டுமே விலை கொடுத்து வாங்க முடியும். விற்கப்பட்ட நாவல்கள் 158உம் கவிதைப்புத்தகங்கள் 128உம் ஆகும். அன்றய தினம் விற்கப்பட்ட முழுப்புத்தகங்களினதும் எண்ணிக்கை 238 ஆகவும் இவ்விரு வகையைத் தவிர வேறு புத்தகங்கள் வாங்கியவர்களின் எண்ணிக்கை 30உம் எனின்,





i. மேற்குறித்த தகவல்களை வென்வரிப் படத்தில் குறிக்குக.

ii. நாவல்கள், கவிதைப்புத்தகங்கள் இரண்டையும் வாங்கியோரது எண்ணிக்கை(X) யாது?

iii. நாவல்கள் மட்டும் வாங்கியோர் எத்தனை பேர்?

iv. கடையில் வந்து புத்தகங்கள் வாங்கியவர்களில் ஒருவரைத் தேர்ந்தெடுக்கும் போது அவர் கவிதைப் புத்தகங்களை மாத்திரம் வாங்கியவராக இருப்பதற்கான நிகழ்தகவு யாது?

(03) புதிதாக அமைக்கப்பட இருக்கும் வீடொன்றின் வரைபடம் கீழே காட்டப்பட்டுள்ளது.




i. வீட்டின் சுற்றளவு யாது?

ii. வீட்டின் தரையின் பரப்பளவு யாது?

iii. குளியல் அறைக்கு 10cm x 10cm மாபிள் பதிப்பதற்கு தேவையான மாபிள்களின் எண்ணிக்கை யாது?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வரத்தைப் பறிக்கும் பூசாரிகள்!

## பாடசாலை சத்துணவுத் திட்டம் கண்காணிக்கப்பட வேண்டும்

நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம். இத்தகைய வாழ்வை வாழ நாம் உட்கொள்ளும் உணவு பிரதான இடத்தை வகிக்கின்றது.

இவ்வாறிருக்க மலையக மக்கள் நாளுக்கு நாள் அதிகரித்து வரும் பொருட்களின் விலையேற்றத்தால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். மலையக சிறார்களின் போஷாக்கு நிலை மிகவும் மோசமாக பின்தங்கியுள்ளதாக சமீபகால ஆய்வுகள் தெரிவிக்கின்றன. இதனை கவனத்தில் கொண்டே அரசாங்கம் பாடசாலைகளில் போஷாக்கு உணவு வழங்கும் வேலைத்திட்டத்தை ஆரம்பித்தது.

எனினும் கடவுள் கொடுத்ததை பூசாரிகள் பறிப்பது போல அரசு வழங்கும் போஷாக்கு உணவு மாணவர்களுக்கு முறையாக கிடைக்காதவாறு இடையிலுள்ளவர்களால் அபகரிக்கப்படுகிறது.

மாணவர்களுக்கு வழங்கப்படும் போஷாக்கு உணவு உண்மையாகவே போஷாக்காக இருக்க வேண்டுமே தவிர வெறும் பெயரளவிலான உணவாக இருக்கக் கூடாது என்று அரச சுற்று நிருபம் கூறுகின்றது.

ஆனால் வெறும் சோறும் பருப்பும் மாத்திரமே சில பாடசாலைகளில் வழங்கப்படுகின்றது. ஒரு முட்டை வழங்கப்பட வேண்டிய நிலையில் பாதி முட்டை கூட வழங்கப்படுவதில்லை. சில பாடசாலைகளில் நூடில்ஸ் வழங்கும் தினங்களில் மாத்திரம் முட்டை வழங்கப்படுகிறது. அதுவும் முட்டை உடைக்கப்பட்டு நூடில்ஸில் கலந்து விடப்படுகிறது. அங்கே மாணவர்கள் முட்டையைத் தேட வேண்டியிருக்கிறது என பெற்றோர்களில் ஒருவர் அங்கலாய்கிறார்.

மேலும் தினமும் பழம் வழங்க வேண்டும் என கூறப்படுகிறது. ஆனால் பாடசாலைகளில் எப்போதாவது ஒரு நாள்தான் பழம் வழங்கப்படுகிறது. இத்தனை குளறுபடிகள் நடந்தும் தட்டிக்கேட்க முடியாத துர்ப்பாக்கியமும் நிலவுகிறது. உணவு வழங்கும் பொறுப்பு பாடசாலை அதிபர்களுக்கு மிக நெருக்கமான அல்லது உறவினர்களிடமே ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. இந்நிலையில் நாம் எவ்வாறு கேள்வி எழுப்ப முடியும்? அவ்வாறு கேள்வி எழுப்பினால் நாங்கள் அல்லவா பழிவாங்கப்படுவோம் என்கிறார் பெயர் குறிப்பிட விரும்பாத ஆசிரியர் ஒருவர்.

மேலும் உணவு வழங்கும் செயல்திட்டத்தில் 100சதவீத மாணவர்களின் வரவு பாடசாலைகளில் காணப்படும் பட்சத்தில் ஒரு மாணவனுக்கு 20 ருபா வீதம் 100சதவீத பணம் அரசாங்கத்தால் வழங்கப்படுவதோடு 100 வீதத்திற்கு குறைவாக மாணவர்களின் வரவு காணப்படும் பட்சத்தில் 95 வீதம் பணம் வழங்கப்படுகின்றது.

சில பாடசாலை மாணவர்களின் வரவை கணக்கிட்டபின்பே சமையல் இடம் பெறுகிறது. இது தவறான முறையாகும். மாணவர்களுக்காகவே உணவு சமைக்கப்பட்டு பாடசாலைக்கு கொண்டுவரப்பட வேண்டும். அவ்வாறு கொண்டுவரப்பட்ட உணவு மாணவர்களுக்கு வழங்கப்பட்டு பின் மிகுதிபடும் பட்சத்தில் அடுத்த வகுப்பு அல்லது மேல் வகுப்பு மாணவர்களுக்கு வழங்கப்பட வேண்டும். ஆரம்ப வகுப்புகள் மாத்திரம் காணப்படும் பாடசாலைகளில் உணவு மிகுதிபடாத வகையில் அனைத்து மாணவர்களுக்கு பகிர்ந்து வழங்கப்பட வேண்டும் என்று பாடசாலைகளுக்கு அறிவுறுத்தப்படுகிறது.

எனினும் இலாப நோக்கம் கருதி இந்த நடைமுறை பின்பற்றப்படுவதில்லை. மேலும் மாணவர்களுக்கு குறித்த அளவுக்கு குறைவான உணவே வழங்கப்படுகிறது என்ற குற்றச்சாட்டும் உண்டு. இவ்வாறான நிலைமை மலையகத்தின் பல பாடசாலைகளில் இடம்பெறுவதாக தெரியவருகின்றது.

பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், கல்வி திணைக்கள அதிகாரிகள், கல்வி அமைச்சின் அதிகாரிகள் போன்றோர் குறித்த விடயத்தில் கூடிய கவனம் செலுத்துவது மிக இன்றியமையாதது. வளமான மாணவர் சமூகத்தை கட்டியெழுப்பும் நோக்கோடு அரசு வழங்கும் பணம் தனி நபர்களின் பொக்கட்டுகளுக்கு செல்வதை கண்டிப்பாக தடுத்தாக வேண்டும்.

**பொகவந்தலாவ**
**சா.சதீஸ்குமார்**

# ஏன் எதற்கு என்ன காரணம்?



## திருநீறு அணிவது ஏன்?

திருநீறு அணிவது இந்துக்களின் அடையாளம். நெற்றியில் திருநீறு அணிந்தவர்கள் சிவபக்தர்கள் என்றும் குங்குமம் தரித்தவர்கள் அம்மன் பக்தர்கள் என்றும் அடையாளம் காணப்படுவர்.

சரி வெறும் அடையாளம் மட்டுமா திருநீறின் நோக்கம்?

மனித உடலில் நெற்றி என்பது மிக முக்கிய பாகம். அதன் வழியாக மிக அதிகமாக சக்தி வெளிப்படும், உள்ளிழுக்கவும் செய்யும். இது ஒரு வர்ம ஸாதனம் கூட சூரிய கதிர்களின் சக்திகளை இழுத்து நெற்றி வழியாக கடத்தும் வேலையை திருநீறு செவ்வனே செய்யும். அதனால்தான் நெற்றியில் திருநீறு பூசுகிறார்கள். குளித்து உடல் சுத்தமாக, இறைவனை தியானித்து மனம் சுத்தமாக திருநீறு பூச வேண்டும்.

## நாடக போட்டியில் விருது

றோயல் கல்லூரியின் தமிழ் நாடக மன்றம் இவ்வருடம் வெளியிட்ட தமிழ் நாடகப் பிரதியாக்கத் தொகுப்பு நூலான நகல்க்காக நடாத்தப்பட்ட நாடகப் பிரதியாக்கப் போட்டியில் சிதறிய சிற்பி என்னும் நாடகப் பிரதியாக்கத்தை எழுதிய அப்புத்தளையைச் சேர்ந்த ஆரோக்கியம் எட்வேட்க்கு விருது வழங்கப்பட்டுள்ளது.



இவ்விருது வழங்கும் வைபவம் அண்மையில் றோயல் கல்லூரியில் இடம்பெற்றது. இதன் போது நாடகப் போட்டியில் பரிசு பெற்ற எட்வேட்டிற்கு வித்தக கவிஞர் கலைச்செல்வன் விருது, சான்றிதழ் என்பவற்றை வழங்குவதனையே இங்கு காண்கின்றீர்கள். விருது பெற்ற எட்வேட் ஒரு கணித ஆசிரியர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

ஆ.புவியரசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








# என்னை அதிர வைத்த நேயரும் நெகிழ வைத்த நேயரும்!!

நல்லவாய்ப்புகள் சிலருக்கு போராட்டத்தினால் கிடைக்கிறது, சிலருக்கு தீராத முயற்சியால் கிடைக்கிறது, இன்னும் சிலருக்கு தியாகங்களால் கிடைக்கிறது, மிகச்சிலருக்கு மட்டுமே கடவுளின் கருணையால் அதிர்ஷ்டத்தால் கிடைக்கிறது, அந்த வகையில் நான் இறுதியாக சொன்ன ரகம். இன்று நான் பெருமைப்படும், நேசிக்கும் அறிவிப்புத்துறை எனக்கு தானாகக் கிடைத்தது. வாய்ப்பு தானாகக் கிடைத்தாலும் திறமையால் இத்துறையில் ஜொலிக்க முடிகிறது என்கிறார் இலங்கையின் தரமான அறிவிப்பாளர் வரிசையில் இடம்பிடித்திருக்கும் இளம் அறிவிப்பாளர் சுஹய்ல்.

சக்தி தொலைக்காட்சியின் அறிவிப்பாளராக இலங்கை முழுவதும் அறியப்பட்ட சுஹய்ல் இவ்வாரம் பேஸ்புக் பகுதியில் இணைகிறார்.

நான் பிறந்தது அழகிய திருகோணமலை மாவட்டத்தில். தற்போது என்னுடைய தொழில் நிமித்தம் தெஹிவளையில் வசிக்கிறேன். வீட்டில் நான் தான் மூத்தவன். அன்பான அப்பா, அம்மா, நான்கு தம்பிமார்கள், கடைசியாக செல்லத் தேவதையாக என் தங்கை. அழகான அன்பான குடும்பம் என்னுடையது.

**அறிவிப்புத்துறை பிரவேசம் அமைந்தது எப்படி?**

என்னுடைய அறிவிப்புத்துறை பிரவேசம் தானாக அமைந்தது. உயர்தரப் பரீட்சை எழுதிவிட்டு வீட்டில் இருந்தபோது என்னுடை உறவினர் ஒரு அரசாங்க ஊடகத்தில் வேலை இருப்பதாகச் சொன்னார். சாதாரண கணினி அச்சுக்கோர்ப்பாளராக அங்கு வேலைக்குச் சேர்ந்தேன். காலப்போக்கில் எனது குரலையும் திருத்தமான தமிழ் உச்சரிப்பையும் பார்த்துவிட்டு செய்தி வாசிப்பாளராக நியமனம் கிடைத்தது. இப்போது சக்தி தொலைக்காட்சியில் வேலை செய்கிறேன்.

**நண்பர்கள் பற்றி:-** நண்பர்கள் தானே வாழ்க்கைப் பயணத்தை சுவாரஷ்யப்படுத்துகிறார்கள். எல்லோருடனும் இலகுவில் பழகி நட்பு பாராட்டி விடுவேன். எனக்கு எக்கச்சக்கமான நண்பர்கள். எத்தனை நண்பர்கள் இருந்தாலும் என்னுடைய முதல் நண்பி அம்மாதான்.

**பாடசாலைக்காலத்தில் மறக்க முடியாத சம்பவம்?**

அது ஒரு அழகிய கனாக்காலம். படிக்கிற காலத்தில் நான் ரொம்ப ரொம்ப நல்ல பிள்ளை. காரணம் நான் வளர்ந்த விதம். வீட்டில் சரியான கட்டுப்பாடு. என்னை ஒரு மகனாக வளர்க்கவில்லை ஒரு மகளாகத்தான் வளர்த்தார்கள். எந்த வம்பு தும்புக்கும் போகமாட்டேன். ஆனா என் நண்பர்கள் செய்யும் சேட்டைகளுக்கு உதவி செய்வேன். அதனால் அடிக்கடி மாட்டிக் கொள்வேன். அப்படித்தான் ஒருமுறை ஆசிரியர் பரீட்டை பேப்பரில் முட்டை போட, கோபத்தில் நாங்கள் அவர் ரூமில் உண்மையாக முட்டையை போட்டோம். பிறகென்ன அதிபர் அறை முன் நிற்க வேண்டியது தான்.

**அறிவிப்பாளன் எப்படி இருக்க வேண்டும்? எப்படி இருக்கக்கூடாது ?**

அறிவிப்பாளனும் சாதாரண மனிதன்தான். அவன் நிறையக் கற்பவனாக, நட்புக் குணம் கொண்டவனாக குறிப்பாக பந்தா இல்லாதவனாக இருக்க வேண்டும். எனக்கு மட்டும்தான் எல்லாம் தெரியும். எதிரில் இருப்பவன் முட்டாள் என்று நினைப்பவனாக இருக்கக் கூடாது.

**அறிவிப்புச் செய்யும் போது நடந்த சுவாரஷ்ய சம்பவம்?**

ஒவ்வொரு நாளும் நிகழ்ச்சி தொகுத்து வழங்குவதே ஒரு பெரிய சுவாரஷ்யம்தான். குறிப்பாக சொல்ல வேண்டுமானால் ஒரு முறை நானும் சக அறிவிப்பாளர் யசோவும் ''காதல் டொட் கொம்'' நிகழ்ச்சி தொகுத்து வழங்கிக் கொண்டிருந்தோம். அன்றைய நாள் தலைப்பு ''காதலில் சொதப்புவது எப்படி'' என்பதைப் பற்றி பேசிக்கொண்டிருந்தோம். அப்போது ஒரு பெண் அழைப்பினை ஏற்படுத்தி இது என்னுடைய முதலாவது சொதப்பல். ஏன் என்றால் நான் உங்களை பார்த்து விட்டேன். ஆனால் நான் திருமணம் முடித்து விட்டேன். எனது கணவனை விவாகரத்து செய்யப் போகிறேன். எனக்கு உங்களைத்தான் பிடித்திருக்கிறது என்று சொல்லி என்னை தர்மசங்கடப்படுத்தி விட்டார். நேரடி ஒளிபரப்பு வேறு. கொஞ்ச நேரம் அப்படியே தலையில் கைவைத்து உட்கார்ந்து விட்டேன். இந்தச் சந்தர்ப்பத்தை என்னால் மறக்கவே முடியாது.

**பலரதும் உள்ளம் கவர்ந்த அறிவிப்பாளர் நீங்கள். உங்கள் உள்ளம் கவர்ந்தவர் யார்?** இலங்கையில் என்னைக் கவர்ந்த அறிவிப்பாளர் கஜமுகன். இந்தியாவில் என்றால் சிவகார்த்திகேயன்தான். மனிதர் என்னமாதிரி கலக்குகிறார். எவ்வளவு விடய ஞானம் ?

**உங்களை பல பேர் உதயநிதிமாதிரி அல்லது நடிகர் பிரசன்னா மாதிரி இருக்கிறீர்கள் என்று சொல்கிறார்கள். நீங்கள் சொல்லுங்கள் நீங்கள் யார் மாதிரி?** எல்லாரும் அப்படித்தான் சொல்கிறாங்க. ஒரு கல் ஒரு கண்ணாடி படம் வெளிவந்து மூன்றாவது நாள் சக்தி செட் நிகழ்ச்சி தொகுத்து வழங்கிக் கொண்டிருந்தபோது அந்த படத்தில் இருந்து ஒருபாட்டை ஒளிபரப்பினோம். அதை பார்த்து விட்டு ஒரு ரசிகர் நான் உதயநிதி மாதிரி இருப்பதாக சொன்னார். அதன்பிறகு பலரும் சொல்கிறார்கள்.

**நெகிழவைத்த ரசிகர்:** ஒரு முறை நானும் அம்மாவும் கலுபோவில ஆஸ்பத்திரிக்குச் சென்றிருந்தோம். அங்கு என்னை கண்ட ஒரு பெண் தயக்கத்தோடு அருகில் வந்து நீங்க சுஹய்லா என்றாள். நானும் ஆம் என்றேன். கொஞ்சம் இருங்க என் அக்காவ கூட்டிக்கிட்டு வாறேன் என்று சொல்லிவிட்டு சென்றார். சிறிது நேரத்தில் அக்காவோடு வந்தாள். நான் அதிர்ந்து போனேன். அக்காவின் இடது கையில் சேலைன் போத்தல். நடக்க முடியாமல் தாங்கித் தாங்கி வந்து எனக்கு கைகொடுத்தார். இவ்வளவு வருத்தத்திலும் என்னை பார்த்ததும் ஓடிவந்த என் ரசிகையை என்னால் மறக்கவே முடியாது.

**பொழுதுபோக்கு என்ன?** வீட்டில் குடும்பத்தோடு இருப்பதுதான் என் முதல் சந்தோஷம். நேரம் கிடைத்தால் தூங்குவது, சில சமயம் தங்கச்சியைக் கூட்டிக்கொண்டு ஷொப்பிங் செய்வது.

**அறிவிப்புத்தவிர்ந்த ஏனைய திறமைகள் என்ன?** பாட்டுப் பாடுவேன் (யுவன், ஏ.ஆர் ரகுமான் குரலில் பாடுவேன்), நம்பியார், சிவக்குமார், வைரமுத்து மாதிரி மிமிக்கிரி செய்வேன்.

**சந்திக்க விரும்பும் நபர் யார்?** சிவகார்த்திகேயன், தற்போது நடிகர் உதயநிதி.

**பிடித்த சாப்பாடு:** கோதுமை மா பிட்டுதான். அதுவும் அம்மாவோட கைப்பக்குவத்துல சாப்பிடும் போது அதன் சுவையே தனி.

**அடிக்கடி கடுப்பாகும் விஷயம்:** எனக்கு சத்தம் பிடிக்காது. யாரும் சத்தம் போட்டு பேசினால் பிடிக்கவே பிடிக்காது.

**அடிக்கடி மறக்கும் பொருள்.** நிச்சயமாக என் செல்போன்தான். வேலைக்குப் போகும் போது எப்போதும் அதை மறந்துடுவேன். அம்மா எடுத்துக் கொண்டு ஓடி வருவாங்க.

**படித்ததில் பிடித்தது:** கற்காமல் இருப்பதைவிட பிறக்காமல் இருப்பதே நல்லது. ஏனெனில் அறியாமைதான் தீவினையின் மூலவேர்! எல்லாத் துன்பங்களுக்கும் இரண்டு மருந்துகள் உள்ளன. ஒன்று காலம், இன்னொன்று மௌனம். இப்படியான தன்னம்பிக்கை வரிகள் எனக்கு மிகவும் பிடிக்கும்.

**உங்கள் திருமணம் எப்போது?** வீட்டில் பார்த்திருக்கிறார்கள் விரைவில் டும் டும் டும் தான்...

My face book -59






அபி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்புமுனையாக அமையுமா?

## கிழக்கு மாகாணசபை பற்றி ஓர் அலசல்

கிழக்கு மாகாண சபைத் தேர்தல் திருப்பு முனையாக அமையப் போகிறது. சர்வதேசம் உன்னிப்பாக பார்த்துக் கொண்டிருக்கின்றது.

இவ்வாறு மேடைக்கு மேடை பிரசாரக் கூட்டங்களில் கட்டியம் கூறப்பட்டு வந்த கிழக்கு மாகாண சபைத் தேர்தல் தீர்ப்பு கடந்த ஞாயிற்றுக்கிழமை அதிகாலை வெளியாயிற்று.

திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய மூன்று நிர்வாக மாவட்டங்களை உள்ளடக்கியது கிழக்கு மாகாணம். இம்மாவட்ட மக்களின் தீர்ப்பின் பிரகாரம் இம்மாகாண







சபையில் உள்ள 37 ஆசனங்களில் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பிற்கு 14 (இரு போனஸ் ஆசனங்கள் உட்பட), இலங்கை தமிழரசுக் கட்சிக்கு 11, ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸிற்கு 07, ஐக்கிய தேசியக் கட்சிக்கு 04, தேசிய சுதந்திர முன்னணிக்கு 01 என பகிரப்பட்டிருக்கின்றது.

இப்பின்னணியில் 11 ஆசனங்களைப் பெற்ற இலங்கைத் தமிழக அரசு கட்சி ஏழு ஆசனங்களைப் பெற்ற ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் நான்கு ஆசனங்களைப் பெற்ற ஐக்கிய தேசியக்கட்சி ஆகியவற்றுடன் ஆட்சி அமைக்கும் உரிமையை தருமாறு கோரி கிழக்கு மாகாண ஆளுநருக்கு எழுத்துமூலம் கோரிக்கை விடுத்தது.

இம்மூன்று கட்சிகளுக்கும் உள்ள ஆசனங்களின் எண்ணிக்கை 22, இம்மூன்று கட்சிகளுக்கும் கிடைத்த வாக்குகளின் மொத்த எண்ணிக்கை 4 இலட்சத்து 1645 ஆகும். இவற்றில் தமிழ் மற்றும் முஸ்லிம் வாக்குகள் பெரும்பான்மையாகும். கணிசமான சிங்கள வாக்குகளை ஐக்கிய தேசியக் கட்சி பெற்றுள்ளது.

இந்த நிலையில் கிழக்கு மாகாண சபையின் ஆட்சியைக் கைப்பற்றப் போவது எந்தக் கட்சி?

மாகாணசபைத் தேர்தலில் நான்காவது பெரிய கட்சியாக வந்த ஐக்கிய தேசியக் கட்சி, இலங்கைத் தமிழரசுக் கட்சியால் முதலமைச்சர் பதவிக்கு பிரேரிக்கப்படுபவரை ஆதரிக்கப்போவதாக மாகாண ஆளுநருக்கு எழுத்து மூலம் ஏற்கனவே அறிவித்துவிட்டது. அதன் மூலம் இரண்டு கட்சிகளுக்கும் மாகாண சபையில் உள்ள ஆசனங்கள் 15 ஆகவும் வாக்குப்பலம் 2 இலட்சத்து 68 ஆயிரமாகவும் உயர்கின்றது.

14 ஆசனங்களுடன் உள்ள ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புக்கும் ஒரு ஆசனத்தைப் பெற்ற அதன் பங்காளிக் கட்சியான தேசிய சுதந்திர முன்னணிக்கும் கிடைத்த மொத்த வாக்குகளின் எண்ணிக்கை 2 இலட்சத்து 9566 ஆகும்.

இக்கட்டத்தில் 1 இலட்சத்து 32 ஆயிரத்து 917 வாக்குகளுடன் ஏழு ஆசனங்களைப் பெற்ற ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் எந்த அணிக்கு உதவப்போகிறது?

இக்கேள்விக்கான பதிலை கிழக்கு மாகாண தமிழ் பேசும் மக்களாகிய தமிழ் மக்களும் முஸ்லிம் மக்களும் ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

கடந்த இரு மாதங்களாக இடம்பெற்ற கிழக்கு மாகாணத் தேர்தல் பிரசாரக்கூட்டங்களில் தமிழ்த் தேசிய கூட்டமைப்புத் தலைவர்களும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர்களும் தமிழ் மக்களதும் முஸ்லிம் மக்களதும் நீண்டகால அரசியல் அபிலாசைகளுக்கு சர்வதேச அனுசரணையுடன் நிரந்தர அரசியல் தீர்வுகாணும் காலம் வாசற்படிக்கு வந்துவிட்டது என்றெல்லாம் உரக்கப் பேசிவந்தனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் திருகோணமலையில் நடந்த இறுதிப் பிரசாரக் கூட்டத்தில் முக்கிய உரையாற்றினார்.

“முஸ்லிம் மக்கள் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் சரித்திர ரீதியாக வாழ்ந்து வந்துள்ளனர் என்பதை மறுக்க முடியாது. காணப்படும் அரசியல் தீர்வு தமிழ் மக்களுக்கு மாத்திரம் அல்ல, முஸ்லிம் மக்களும் ஏற்றுக் கொள்ளக் கூடிய தீர்வாகவே அமைய வேண்டும் என்பதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுதியாக உள்ளது. முஸ்லிம் மக்கள் தனித்துவமான இனத்தைச் சேர்ந்தவர்கள். தங்களின் தனித்துவத்தைப் பேணி பாதுகாப்பதற்கான உரித்து முஸ்லிம் மக்களுக்கு உண்டு. சரித்திர ரீதியாக தாம் வாழ்ந்து வந்த வடக்கு, கிழக்கு மாகாணங்களில் சுயாட்சி கோருவதற்கு முஸ்லிம் மக்கள் உரித்துடையவர்கள்” என்று சம்பந்தன் கூறியிருந்தார்.

கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் இலக்கு எதுவாக இருக்கும் என்றும் சம்பந்தன் தெரிவித்திருந்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து கூடுதலான வாக்குகளைப் பெற்று இரண்டு போனஸ் ஆசனங்களைப் பெறுவதுதான் எமது இலக்கு. அறுதிப் பெரும்பான்மையை பெறுவோம் என்று கூற மாட்டேன். ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், ஐக்கிய தேசியக் கட்சி ஆகியவற்றுடன் இணைந்து கூட்டு ஆட்சி அமைக்கும் வாய்ப்பு ஏற்பட்டால் அதனைப் பயன்படுத்துவோம் என்றும் சம்பந்தன் கொடிகாட்டியிருந்தார்.

தனிப்பெரும் கட்சியாக வரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் இலக்கு தவறிவிட்டது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அடுத்த இலக்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து கூட்டு ஆட்சி அமைப்பதுதான். அந்த இலக்கு நிறைவேறுமா?

இக்கட்டத்தில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் நிலைப்பாடு பற்றி ஆராய்வோம்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் திருகோணமலை மாவட்டத்தில் மூதூர், கிண்ணியா பிரதேசங்களில் நடந்த பிரசாரக் கூட்டங்களில் உரையாற்றினார்.

“கிழக்கு மாகாண அரசியலில் புதிய பாரம்பரியம் ஒன்றை உருவாக்கும் நோக்குடன் தான் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் போட்டியிடுகின்றது. ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸூம் தமிழ்த் தேசிய கூட்டமைப்பும் பலம் பொருந்திய கட்சிகள் என்பதை கிழக்கு மாகாணசபைத் தேர்தல் சர்வதேச சமூகத்திற்கு தெளிவாகத் தெரிவிக்கப்போகின்றது” என்று நீதி அமைச்சரான ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் திட்டவட்டமாகக் கூறியிருந்தார்.

மத்தியில் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் பங்காளி கட்சியாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உள்ளது. எம்மை கலந்தாலோசிக்காமலே அரசாங்கம் கிழக்கு மாகாண சபையைக் கலைத்துவிட்டு தேர்தலை நடத்துகின்றது. கலைக்கப்பட்ட கிழக்கு மாகாண சபையில் பொம்மை ஆட்சி நடத்தப்பட்டு வந்தது. கிழக்கில் ஆட்சியை நிர்ணயிக்கும் வல்லமையுள்ளவர்களாக நாம் இருந்தும் எம்மை புறக்கணித்து விட்டு விரும்பினால் இணைந்து கேளுங்கள். இல்லையானால் விட்டுச்செல்லுங்கள் என்று ஆளும் கட்சி எமக்கு கூறியது என்றும் மு.கா. தலைவர் ரவூப் ஹக்கீம் மேலும் தெரிவித்தார்.

கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம் மக்களும் தமிழ் மக்களும் பலம் வாய்ந்தவர்கள் என்பதாக கிழக்கு மாகாணசபைத் தேர்தல் முடிவு அமையப்போகிறது. இதன் மூலம் சர்வதேச சமூகத்தின் அனுசரணையுடன் எமது நீண்டகால அரசியல் அபிலாசைகளுக்க நிரந்தரமான அரசியல் தீர்வுக்கான சூழல் உருவாகலாம் என்றும் ரவூப் ஹக்கீம் பிரசாரக் கூட்டத்தில் கூறியிருந்தார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மாத்திரம் தான் கிழக்கு மாகாண முஸ்லிம் மக்களின் அரசியல் அபிலாசைகளைத் தீர்மானிக்கும் வலிமை பொருந்திய சக்தியாக விளங்குகின்றது என்றும் ரவூப் ஹக்கீம் பிரகடனப் படுத்தி இருந்தார்.

இச்சூழலில் யார் ஆட்சி அமைப்பது? என்பது பற்றி பேரம் பேசப்படுகிறது.

முஸ்லிம் மக்கள் சரித்திர ரீதியாக வாழ்ந்து வந்த தாயகத்தில் சுயாட்சி கோர உரித்துடையவர்கள் என்று கூறிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முதலமைச்சர் பதவி உட்பட பாரிய விட்டுக் கொடுப்புகளுடன் ஆட்சி அமைக்கத் தயாராக இருக்கிறோம் என்று பேரம் பேசுகிறது.

கிழக்கு மாகாண முஸ்லிம்களின் அரசியல் அபிலாசைகளைத் தீர்மானிக்கும் வலிமை பொருந்திய சக்தி ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ்தான் என்று கூறும் அதன் தலைவரும் நீதி அமைச்சருமான ரவூப் ஹக்கீம் பேரம் பேசப் போகிறார்.

பேரம் பேசும் விடயத்தில் முஸ்லிம் மக்கள் தங்கள் பலத்தை பயன்படுத்த வேண்டும் என்று தேர்தல் பிரசாரத்தின் போது திட்டவட்டமாகத் தெரிவித்த ரவூப் ஹக்கீம் பேரம் பேசும் ஆற்றலை முஸ்லிம் மக்கள் உன்னிப்பாக கவனித்துக் கொண்டிருக்கின்றார்கள் என்றார்.

கிழக்கு மாகாணசபைத் தேர்தல் தீர்ப்பு, பேரம் பேசுதல்!

கிழக்கு மாகாண தமிழ்-முஸ்லிம் மக்களின் உறவில் ஆரோக்கியமான திருப்புமுனையாக அமையுமா? அல்லது கிழக்கு மாகாண முஸ்லிம் மக்களின் அரசியல் வரலாற்றில் ஒரு தனித்துவத்தை ஏற்படுத்தும் திருப்பு முனையாக அமையுமா?

சர்வதேச சமூகம் தொடக்கம் அனைவரும் இதனை உன்னிப்பாக அவதானித்துக் கொண்டிருக்கிறார்கள்.

அநாமிகன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மதுச்சாலையால் இடர்!

## குடிமகன்களால் தொல்லையை எதிர்கொள்ளும் அப்பாவிகள்

வவுனியா இரணை இலுப்பைக்குள பிரதான வீதிக்கருகிலுள்ள ஒரு கிராமத்தில் மக்களின் கடும் எதிர்ப்புக்கும் மத்தியில் திறக்கப்பட்டுள்ள மதுபானசாலையால் பல்வேறு பாதிப்புகளை எதிர்நோக்கியுள்ளதாக இப்பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

இப்பிரதேசத்தில் மதுபானசாலை திறக்கப்படுவதற்கு பிரதேச கிராம அபிவிருத்தி சங்கம், கமக்கார அமைப்பு, இளைஞர் அமைப்பு, மகளிர் அமைப்பு என்பன கடும் அதிருப்தியை வெளியிட்டு உடனடி நடவடிக்கை எடுக்குமாறு கடிதம் மூலம் பிரதேச செயலாளர், மாவட்ட அரச அதிபர், பிரதேச சபைத் தலைவர் ஆகியோருக்கு வேண்டுகோள் விடுத்தன. எனினும் அந்த அதிகாரிகளால் எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் கூட இது தொடர்பாக கவனம் செலுத்தவில்லை. இச்செயற்பாடானது மக்கள் மத்தியில் விசனத்தை ஏற்படுத்தியுள்ளது.

மக்களுக்காக செயற்படும் இவ் அரச திணைக்கள அதிகாரிகளும் மக்கள் பிரதிநிதிகளும் பக்கச் சார்பாக செயற்படுகின்றார்களா? என மக்களை சிந்திக்கத் தூண்டுகின்றது.

மாலை நேரங்களில் இவ் வீதிவழியாக பயணிப்போர் பல்வேறு இடர்பாடுகளை எதிர்நோக்குகின்றனர். வீதியிலும் வீதியின் இருமருங்கிலும் அப்பிரதேச வயல்வெளிகள், பாலங்கள் என்பவற்றில் பரவலாக இருந்து இளைஞர்கள் குடித்து கும்மாளம் போடுவதால் வீதியில் செல்ல முடியாத நிலை ஏற்பட்டுகின்றது.

வீதியால் செல்லுகின்ற அரச உத்தியோகத்தர்கள் கூட பாதிக்கப்படுகின்றனர். கடந்த வாரம் ஒரு பெண் அரச உத்தியோகத்தர் கூட குடிமகன் ஒருவரால் மன உளைச்சலுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளார். பாடசாலை மாணவர்கள் அவ்வீதியை பயன்படுத்த அச்சம் அடைகின்றனர்.



அண்மையில் ஜனாதிபதி வவுனியா வருகைதந்த போது கிராம அபிவிருத்திச்சங்கம் வவுனியா பிரதேச சபை ஊடாக மகஜர் ஒன்றினை இது தொடர்பாக அவரது செயலாளரிடம் கையளித்தும் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டதாக தெரியவில்லை.

அரசியல் செல்வாக்கே இது அகற்றப்படாமைக்கு காரணம் என்கின்றனர் பிரதேச மக்கள். பிரதேச கலாசாரத்தையும் அமைவிட விதிமுறைகளையும் கவனத்தில் கொண்டு பொறுப்புவாய்ந்த அதிகாரிகள் இவ் விடயத்தில் நடவடிக்கை எடுப்பார்களா? என ஏக்கத்துடன் மக்கள் காத்திருக்கின்றனர்.

கே.வாசு

7 ஆம் பக்கத் தொடர்ச்சி

பதிலளித்துக் கொண்டிருந்த பொழுது அழைப்பெடுத்த ஒரு நபர் தாறுமாறாக உரையாடத் தொடங்கினார். இதனை அவதானித்து சுதாகரித்துக் கொண்ட மகேஸ்வரன் நீ... வசந்தன் தானே! உன்னை எனக்குத் தெரியும் என்றிருக்கிறார். திடீரென மறுமுனை துண்டிக்கப்பட்டது. பின்னர் மகேஸ்வரன், குறித்த கட்சியொன்றின் பல இரகசியங்கள் தன்னிடமுள்ளதாகவும் விரைவில் தான் அவற்றை அப்பலப்படுத்தப்போவதாகவும் பாராளுமன்றத்திலும் தொலைக்காட்சி விவாத நிகழ்ச்சிகளிலும் தெரிவித்திருந்தார். இதுவே இவரை எதிராளிகள் கொலைசெய்வதற்கு காரணமாக இருந்திருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது.

மேலும் மகேஸ்வரனின் கொலையுடன் யாழ்ப்பாணத்திலுள்ள பிரபல வர்த்தகர் ஒருவருக்கும் தொடர்பிருப்பதாக புலனாய்வுத் தகவலொன்று தெரிவிக்கின்றது. இதற்காகவே அவர் கொழும்பிலுள்ள நாலாம் மாடிக்கு அழைத்துவரப்பட்டு விசாரணைக்கும் உட்படுத்தப்பட்டிருந்தார். குறிப்பிட்ட தொலைக்காட்சி நேரடி விவாத நிகழ்ச்சிக்கு மூன்று நாட்களுக்குப் பின்னர் கொச்சிக்கடை பொன்னம்பலவாணேஸ்வரர் கோயிலில் வைத்து மகேஸ்வரன் சுட்டுக் கொல்லப்பட்டார்.

மகேஸ்வரனைக் கொல்லவந்த நபர் துப்பாக்கியை மகேஸ்வரனை நோக்கி நீட்டிக் கொண்டு செல்ல வசந்தன்... என்னைச் சுடாதே...!! என்று மகேஸ்வரன் அந்த இறுதிக்கணத்தில் கூறியதாக தெரியவருகிறது.

ஆனாலும் அந்த இரக்கமற்ற மனிதன் மகேஸ்வரனைக் கொன்றுள்ளார்.

கணவனைக் கொன்ற கொலையாளி பிடிப்பட்டவுடன் விஜயகலாவின் மனம் அமைதி பெற்றது. இன்று அந்நபருக்கு தூக்குத்தண்டனை வழங்கப்பட்டு விட்டது என்றவுடன் அவளின் சபதம் நிறைவேறியது. என்னதான் பலம் பொருந்திய பின்னணி இருந்தாலும் தவறு செய்தால் அதற்குரிய தண்டனையை பெற்றுத்தானே ஆகவேண்டும்.

அம்புக்குத் தூக்குத் தண்டனையை வழங்கி விட்டார்கள். ஆனால் எய்தவனுக்கு எப்போது தண்டனை கிடைக்குமென நீங்கள் கேட்பது புரிகிறது. பொறுத்திருப்போம். காலம் பதில் சொல்லும் வரை.

நிலவன்


## குப்பையில் கிடந்த குழந்தையின் சடலம்



நாவலப்பிட்டி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட மாக்கும்புர பிரதேசத்தின் ஓடை ஒன்றுக்கு அருகில் குப்பை சேகரிக்குமிடத்தில் உருக்குலைந்த நிலையில் நான்குமாத சிசுவொன்றின் சடலமொன்றினைச் சுத்திகரிப்புத் தொழிலாளர்கள் நேற்று 12 ஆம் திகதி காலை 8 மணியளவில் மீட்டுள்ளனர். குறிப்பிட்ட இடத்தில் நாவலப்பிட்டி நகரசபையின் சுத்திகரிப்புத் தொழிலாளர்கள் குப்பைகளைத் தரம் பிரித்துக்கொண்டிருந்த போது பையொன்றினால் சுற்றப்பட்ட நிலையில் சிசுவின் சடலத்தினை கண்டுள்ளனர். கருச்சிதைவு காரணமாக இந்தச்சிசு இறந்திருக்கலாமென சந்தேகிக்கப்படுகின்றது. இந்தச் சம்பவம் தொடர்பாக நாவலப்பிட்டி பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து பொலிஸார் மேலதிக விசாரணைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

அட்டன் நிருபர்

## இது இலையா? பூச்சியா?



இது இலையா? அல்லது பூச்சியா என்று இலகுவில் இனங்காண முடியாத விநோத உயிரினத்தை தற்போது தலவாக்கலை, நானுஓயா பகுதிகளில் காணமுடிகிறது. இலைபோல் இருந்தாலும் இது உண்மையில் ஒரு பூச்சியினம். இந்த பூச்சியின் பெயர் பேரகொல வந்தா என சிங்களத்தில் அழைக்கப்படுகிறது. இந்த பூச்சி கொய்யா மரத்தில் மட்டும் தான் உயிர் வாழும் என்பார்கள். இந்த பூச்சியை யாரும் தாக்குவதற்கு முயன்றால் அது இரு கைகளால் கும்பிடுவது போன்று தன் உணர்கொம்புகளைக் குவிக்கிறது. இதனால் பேரகொல வந்தா என்கிறார்கள். அதாவது கொய்யா இலையில் காணப்படும் வணங்கும் பூச்சியினம் என்கிறார்கள். இதன் வடிவம் முழுக்கமுழுக்க கொய்யா இலையைப் போன்றே இருக்கின்றது. இந்த பூச்சியால் யாருக்கும் எந்தப்பாதிப்பும் ஏற்படுவதில்லை என்கிறார்கள்.

டி. சந்ரு, நானுஓயா.


## மென்பந்து கிரிக்கெட் போட்டி

எட்டியாந்தோட்டை வீ ஓயா சன்சயின் விளையாட்டுக் கழகம் நடத்தும் மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டி.

இடம் :- சன்சயின் விளையாட்டு மைதானம்.
காலம் :- 15.09.2012 சனிக்கிழமை.
நேரம் :- மாலை 6.00 மணி.


முதலாம் பரிசு
10,000/=, வெற்றிக்கிண்ணம், மெடல்.

இரண்டாம் பரிசு
5,000/=, வெற்றிக்கிண்ணம்.

ஊடக அனுசரணை உதய சூரியன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வார்த்தைப் புதிர் - 25



**இடமிருந்து வலம்**

01. "சித்திரமும் கைப்பழக்கம், செந்தமிழும் ---"
06. புது வருட காலண்டர் மாட்ட, சுத்தியலோடு இதுவும் தேவைப்படும்.
07. வெட்டவெளி.
10. நாட்டியம் - இன்னொரு சொல்.
12. வெற்றிலை, பாக்கு, சுண்ணாம்பு சேர்ந்தது ---பூலம்.
14. பள்ளிக்கூடங்களில் இருக்கும்.
16. கட்டிட வேலை செய்பவர்.
17. கஞ்சன் என்பதன் எதிர்ப்பதம் முதல் எழுத்து ஊ---.
18. விரல் - ஆங்கிலத்தில்.

**வலமிருந்து இடம்**

03. உலகம். இன்னொரு சொல்.
05. அங்காடி.
09. இளமையில் இது கொடிது என்பார்கள்.
11. தை மாதத்தின் முதல் நாள் கொண்டாடப்படும் பண்டிகை.
13. ஒரு நீர் மூலம்
19. இனிப்பு என்றதும் ஞாபகத்திற்கு வருவது.

**மேலிருந்து கீழ்**

01. கிராமங்களில் முதன்மையானவர்
02. நட்பல்ல
03. இது செய்வது சந்ததிக்கும் நல்லது.
04. நேரம் ஆங்கிலத்தில் உள்ளது.
08. தாய்நாடு, இன்னொரு சொல்.
09. தெற்குக்கு எதிரான திசை.
11. --- பூமி ஆள்வார்!.
13. உதவு அல்லது ஒத்துழை எனப் பொருள்தரும்.
14. எந்தப் பொருளுக்கும் அழகு சேர்க்கும்.
15. இது வைத்தால் கோலம் போடுவது சிரமமா என்ன?

**கீழிருந்து மேல்**

05. கணிதம். முற்றுப்பெறவில்லை.
10. வாசனை.
18. தை - வழி பிறக்கும்.

# புதிர் BOX

## கண்ணாமூச்சி



a) அமலா பால்
b) பாவனா
c) மீரா ஜெஸ்மின்



a) அனுஷ்கா
b) ஹன்சிகா
c) சினேகா



a) தமன்னா
b) அசின்
c) ஓவியா



a) வேதிகா
b) ப்ரியா மணி
c) நயன்தாரா

## யாரது

இவர் ஒரு நடிகர். 1997ஆம் ஆண்டு தமிழ் சினிமாவிற்கு வந்தார். தன் முதல் படத்திலே இரண்டு மிகப்பெரிய நடிகர், நடிகைகளுடன் நடித்தவர்.

இவர் திருமணம் செய்திருப்பது ஒரு பேமஸ் நடிகையையே. இவரின் சகோதரன் மற்றும் அப்பாவும் நடிகர்களே.

தற்போது இவர் இரண்டு பிள்ளைகளின் தந்தையும் கூட.

தற்போது இந்திய தொலைக்காட்சி ஒன்றில் நிகழ்ச்சி ஒன்றினை தொகுத்து வழங்கியிருந்தார். தொலைக்காட்சி விளம்பரங்களிலும் நடித்துக் கொண்டிருக்கின்றார்.

## கண்டுப்பிடி கண்டுப்பிடி

"அதோ போகின்றது ஆசை மேகம் மழையைக் கேட்டுக் கொள்ளுங்கள் இதோ கேட்கின்றது குயிலின் பாடல் இசையைக் கேட்டுக் கொள்ளுங்கள்
இந்த பூமியே பூவனம் உங்கள் பூக்களைத் தேடுங்கள்
இந்த வாழ்க்கையே சீதனம் உங்கள் தேவையைத் தேடுங்கள்..."
இந்தப் பாடலின் முதல் வரி என்ன?

## சொல் வேட்டை


தி →

01 ரு□ண□லை
02 □ப்□ச்□
03 ரு□கு□□
04 □வ□ணா□லை
05 ள□கு□□

01. இலங்கையில் உள்ள ஒரு மாவட்டம்.
02. நடிகர் விஜய் நடித்த படம்
03. இந்த நூலை எழுதிவர் திருவள்ளுவர்
04. இந்தியாவில் அணையா தீபம் உள்ள இடம்
05. முன்னணி ஊடகங்களில் ஒன்று.

இந்த கண்கள் யாருடையது என்று தெரிகிறதா? இன்றைய தமிழ் சினிமாவில் முன்னணி நடிகைகள் யார் என்பதை கண்டுபிடியுங்கள் பார்க்கலாம்.

a)



b)



c)



**உங்கள் விடைகளை**
உதயசூரியன் புதிர் Box
இல-68, எலிஹவுஸ் வீதி,
கொழும்பு-15
என்ற முகவரிக்கு அனுப்பிவையுங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைத்ததை முடிப்பவன்!

வில்லவன் கட்டிலை விட்டு எழுந்தான். இரவு அதிக நேரம் கண் விழித்திருந்தாலும் சரியாக ஐந்து மணிக்கு எழுந்துவிடும் வழக்கமுள்ளவன். நேற்று அவனை தலைவர் முத்துராமன் வரச்சொல்லியிருந்தார். அவருக்கு வயது அறுபதுக்கு மேல் இருக்கும்.

கடந்த முப்பது வருடங்களாக தொடர்ந்து பாராளுமன்ற உறுப்பினராக இருந்து தோட்ட மக்களுக்கு சேவை செய்து வருகின்றார். அவருக்கு ஒரே மகன். பெயர் வேலவன். வேலவன் ஒரு விஞ்ஞான பட்டதாரி. ஆசிரியர் வேலையினை விரும்பி ஏற்றுக்கொண்டவன். அதை சேவையாக செய்பவன். எந்த நிலையிலும் அரசியல் பக்கமே செல்ல விரும்பாதவன். ஆனால், முத்துராமனுக்குப் பின் அவருக்கு அரசியல் வாரிசில்லை. கண்ணுசாமியை முழுக்க முழுக்க நம்பி அவனுக்கு பிரதியமைச்சர் பதவியெல்லாம் வாங்கித் தந்தார். ஆனாலும் என்ன செய்வது? பாட்டாளி மக்களின் தேவையறிந்து சேவை செய்வதைவிடுத்து தன் உறவினர்கள் தேவைகளுக்காக உழைத்தான். ஊரெல்லாம் சொத்து சேர்த்தான். தெருவுக்குத் தெரு சின்ன வீடு வேறு. மக்கள் முத்துராமனிடம் முறையிட்டார்கள். அவர் சிந்தித்தார். தனக்குப் பின் தன்னைப் போலவே தன்னலமற்ற சேவையினை வழங்கக்கூடிய ஒருவனைத் தெரிவுசெய்ய வேண்டிய கட்டாயத்தில் அவர் இருந்தார்.

அப்போதுதான் அவர் கண்ணில் வில்லவன் பட்டான். அவருடைய கட்சியில் பலகாலமாக இருக்கிறான். மக்கள் மத்தியில் செல்வாக்கு மிக்கவன். யாருக்காவது பிரச்சினை, ஆபத்தென்றால் முதல் ஆளாக அவன் அங்கே இருப்பான். அவனைப்பற்றி பலரிடம் விசாரித்தார். யாரும் அவனைப்பற்றி ஒரு வார்த்தைகூடத் தவறாக சொல்வில்லை.

எனவே, அவர் முடிவு செய்துவிட்டார். அவன்தான் அவருக்குப்பின் கட்சியைக் கொண்டு செல்லக்கூடியவன். அவர் பெயரை நிலைநாட்டக்கூடிய திறமையானவன். அவனை அழைத்தார். பேசினார். முதலில் அன்புடன் மறுப்பு தெரிவித்தவன் பின் சம்மதித்தான். விஷயம் கேள்விப்பட்ட கண்ணுசாமி தாண்டவமாடினான்.

"வா வல்லவா... உட்கார் உன்னிடம் நிறைய பேசணும்...."

"சொல்லுங்கய்யா...."

"முதல்ல நல்லா சாப்பிடு... என்னைத் தேடி வர்றவங்க யாருமே பசியோட இருக்கக்கூடாது"

"எனக்குத் தெரியாதுங்களா... உண்மையான அரசியல்வாதிகளுக்கு இலக்கணமா வாழ்ந்து வர்ற உங்களோட இருக்கிறதுல நான் ரொம்ப பெருமைப்படுறேன்..."

"நான் முப்பது வருஷமா பாராளுமன்ற உறுப்பினரா இருக்கேன். என்னோட செல்வாக்கினால கண்ணுசாமியையும் எம்.பி. யாக்கி பிரதியமைச்சராவும் ஆக்கி அழகு பார்த்தேன். ஆனா ஓட்டுப் போட்டவங்களை மறந்துட்டு உல்லாசமா இருக்கான். ஊருக்கு உழைக்காம உருப்படாத வேலைகளை செஞ்சிக்கிட்டிருக்கான். என்னால பொறுக்க முடியலை.

எனக்கப்புறம் இந்தக் கட்சி காணாம போயிடுமோன்னு பயந்தேன். என் மகன் வேலவன் அரசியலே வேணாம்னு ஒதுங்கிட்டான். அதுவும் ஒரு வகையில நல்லதுதான். குடும்ப அரசியல் எனக்குப் பிடிக்காது. உன்னை என்னோட வாரிசா நியமிச்சதுக்கு பல காரணங்கள் இருந்தாலும் முக்கியமானது உன்னோட எளிமையும் நேர்மையும்.

எந்த பதவியுமில்லாமலே ஏழை, எளியவங்களுக்காக நீ செய்யிற சேவைகளைப் பார்த்து வியந்திருக்கேன். எனக்கு இப்படியானவொரு ஆள்தான் தேவை. அழுக்கு நிறைஞ்சிருக்கிற மலையக அரசியலை சுத்தமாக்க உன்னை மாதிரி கை சுத்தமானவங்கதான் வேணும்..."

"ஐயா... நீங்க என்னை அளவுக்கதிகமா புகழுறீங்க... இதுக்கெல்லாம் நான் அருகதையில்லாதவன்..."

"இல்ல உன்னோட தகுதி உனக்கு தெரியலை. உன்னோட பெறுமதி எனக்குமட்டும் நல்லா தெரியும். என்னோட சரியான தெரிவுதான் இது. எந்தக்காரணம் கொண்டும் இதுல எந்த மாற்றமும் கிடையாது...."

***

சுதர்ஷன் அந்த பாதாள படிக்கட்டுகள் வழியாக முன்னால் நடக்க கண்ணனும், சிவகுருவும் படபடக்கும் இதயத்துடன் பின்னால் நடந்தனர். அந்த மூன்றாவது படுக்கையறையின் தரை விரிப்பை தூக்கியவுடனேயே கீழே பாதாளம் செல்லக் கூடியதற்கான அடையாளம் இருந்தது. பலகையினால் உருவாக்கப் பட்டிருந்த அந்த மரக்கதவினை திறந்தவுடனேயே படிக்கட் டுகள் காணப்பட்டன. சுதர்ஷன் சந்தோஷத்துடன் விசிலடிக்[illegible]ற இருவருக்கும் அச்சத்தால் உடல் நடுங்கியது.

"கண்ணா... ஒரு வகையில் பார்த்தா வேலுமணி இல்லாததும் நல்லதுதான். மூணு பங்கா பிரிச்சா [illegible]பம் அதிகமா கிடைக்கு மில்லையா..."

"போற போக்கைப்பார்த்தா நாங்க ரெண்டு பேரும் இல்லாமப் போனால்கூட முழுசையும் நீயே அனுபவிக் கலாமுன்னு சந்தோஷப்படுவே போல..."

"சே... சே... சும்மா விளையாட்டுக்கு சொன்னேன். அவன் வேலுமணி இல்லாமலேயே போனாலும் அவனோட பங்கை அவன் மனைவி பிள்ளைகளுக்கு குடுத்திடுவோம்." அவர்கள் மின்பொறி விளக்கு வெளிச்சத்தில் கீழே இறங்கினார்கள்.

தரை ஒரே குப்பையாக இருந்தது. அது ஒரு பெரிய அறையாகக் காணப்பட்டது. பத்தடி தூரத்தில் ஏராளமான அட்டைப் பெட்டிகள் அடுக்கிவைக்கப்பட்டிருந்தன. சற்று தூரத்தில் ஒரேயொரு அறை மட்டும் கதவு பூட்டப்பட்டிருந்தது. சுதர்ஷன் - அந்த அறையை நோக்கி நடந்தான்.

"யாரும் சத்தம் போடாம நடக்கணும். அந்த அறையிலதான் நாம தேடி வந்த பொருள் இருக்குமுன்னு நினைக்கிறேன்...."

அவர்கள் சத்தமில்லாமல் நடந்தார்கள். அந்த அறைக்கதவை அண்மித்தார்கள். சுதர்ஷன் கதவின் கைப்பிடியைத் திருகினான். ஆனால் கதவு திறக்கவில்லை. உட்புறம் பூட்டப்பட்டிருந்தது. அப்படியானால் உள்ளே யாரோ இருக்கிறார்களா? அவர்கள் வியர்த்தார்கள்.

தொடரும்....



## துவளாத வரை தோல்வியில்லை

வலிகள் இல்லாது வலிமையில்லை
பயணமில்லாது பாதையில்லை
பாலைவனத்துக்குள்ளும் ஒரு சோலைவனம்
புதைந்திருக்கும்
கட்டாந்தரையிலும் கனிமச் சுரங்கம் காத்திருக்கும்
கேள்விகளுக்குள்ளும் பதில்கள் ஒளிந்திருக்கும்
நெருங்கிச் சென்றால் நிலவுக்குள்ளும் நீர் இருக்கும்
தொடரும் தோல்விகளுக்குப் பின்னாலும்
வெற்றிக் கனி மறைந்திருக்கும்
தேடல் தொடர்ந்தால்
தோல்வியும் ஒருநாள் துவளும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்பினால் நம்புங்கள்!

ஹென்றி சீக்லேண்ட் என்பவன் 1883 ஆம் ஆண்டு தன் காதலியுடனான உறவை முறித்துக் கொண்டான். அந்தக் காதலி மன உளைச்சலில் தற்கொலை செய்து கொள்ள அவளுடைய சகோதரர் கடும் கோபமடைந்து சீக்லேண்டைத் தேடிக் கண்டுபிடித்து சுட்டுவிட்டு தானும் தற்கொலை செய்து கொண்டான். ஆனால் அதிர்ஷ்டவசமாக சீக்லேண்ட் சாகவில்லை. அந்தத் துப்பாக்கிக் குண்டு முகத்தை உராய்சிக் கொண்டு சென்று அங்கிருந்த மரத்தில் பதிந்தது. சில வருடங்கள் கழித்து அந்தப் பெரிய மரத்தை வெட்டி விட சீக்லேண்ட் நினைத்தான். ஆனால் அதை அவ்வளவு சுலபமாக வெட்டி விட முடியவில்லை. எனவே டைனமைட் குச்சிகளை வைத்து மரத்தைப் பிளக்க நினைத்தான். அப்படிச் செய்கையில் அந்த மரம் சுக்கு நூறாகி வெடிக்கையில் அந்தக் குண்டு சீக்லேண்டின் தலையில் பாய்ந்து அந்த இடத்திலேயே சீக்லேண்ட் மரணம் அடைந்தான். பல வருடங்கள் கழித்துப் அந்தக் குண்டு பழி தீர்த்துக் கொண்டது போல் அல்லவா இருக்கிறது. இந்த சம்பவம் ரிப்ளியின் நம்பினால் நம்புங்கள் என்ற புத்தகத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# நீங்கள் நீங்களாக இருங்கள்!

நம்மில் பெரும்பாலோருக்கு வெற்றிகரமான ஆட்களைப் போலவே நடந்து கொள்ள ஒரு உந்துதல் இருக்கிறது. முடிந்தால் அவர்களைப் போலவே ஆகி விடவும் முயற்சிக்கிறோம்.

சார்லி-சாப்ளினை அறியாதவர்கள் இருக்க முடியாது. மிகவும் ஏழ்மையிலிருந்து வாழ்க்கையை ஆரம்பித்து உலகப்பெரும் பணக்காரராக ஆனவர் அவர். தெருக்கோடி நாடகங்களில் நடித்துக் கொண்டிருந்தவருக்கு காலப்போக்கில் சினிமாவில் நடிக்க சந்தர்ப்பம் கிடைத்தது. சினிமா சந்தர்ப்பம் ஏழை சாப்ளினிற்கு கிடைத்தற்கரிய சந்தர்ப்பம். அதைத் தக்க வைத்துக்கொள்ள முதல் சினிமாவில் அந்தக் காலத்தில் கொடிகட்டிப் பறந்த பிரபல சிரிப்பு நடிகரைப் போலவே நடிக்க முயற்சி செய்தார் சார்லி சாப்ளின்.

அந்த சினிமா டைரக்டர் அதைக் கவனித்து சார்லி சாப்ளினை அழைத்து சொன்னார். நீ அந்த பிரபல நடிகரைக் கொப்பி அடிப்பது போல தெரிகிறது. எனக்கு அவரைப் போன்ற நடிப்பு தேவை இருந்திருந்தால் நான் அவரையே என் படத்தில் நடிக்க வைத்திருப்பேன். நீ உன்னைப் போல் நடி. அது தான் என் தேவை. இன்னொன்றையும் நினைவு வைத்துக்கொள். நீ என்ன தான் தத்ரூபமாக அந்த நடிகரைப் போல் நடித்தாலும் நீ அவரின் நகலாகவும், இரண்டாம் தரமாகவும் தான் இருக்க முடியும். நீ உன் நடிப்பில்தான் அசலாகவும் முதல் தரமாகவும் இருக்க முடியும்.

அந்த அறிவுரை சார்லி சாப்ளினிற்கு பெரும் ஞானோதயத்தை ஏற்படுத்தியது. அவர் தன் இயல்பான நடிப்பையே அன்றிலிருந்து நடிக்க ஆரம்பித்தார். ஆங்கில சினிமாவில் அவர் ஒரு சகாப்தமாகவே இருந்தார். இன்றும் சினிமா வரலாற்றில் அவருக்குத் தனி இடம் இருக்கிறது. ஆனால் அப்படி அவர் இடம் பிடிக்கக் காரணம் அடுத்தவர் நகலாகும் முயற்சியை ஆரம்பக் கட்டத்திலேயே அவர் கைவிட்டது தான்.

வெற்றியாளர்களிடம் இருந்து கற்றுக்கொள்ள வேண்டியவை நிறையவே இருக்கின்றன. அவர்க ளிடமிருந்து கடைபிடிக்கவும் நிறையவே இருக்கின்றது. அதற்கென்று யாரும் அவர் களுடைய நகலாகி விட முயற்சிக்கக் கூடாது. ஒருவருடைய நகலாக முயற்சிக்கையில் உங்களுடைய தனித்தன்மையை அழித்தே அதை சாதிக்க வேண்டியிருக்கிறது.



உலக வரலாற்றின் அனைத்து பெரும் சாதனைகளும் தங்கள் தனித் தன்மைகளை தக்க வைத்துக் கொண்டவர்களாலேயே நிகழ்த்தப் பட்டிருக்கின்றன. அடுத்தவரிலிருந்து வித்தியாசப்படுவது எல்லா சமயங் களிலும் வரவேற்கப் படுவதில்லை. ஏளனமும், கேலியும், கோபமும், வெறுப்பும் தான் பல நேரங்களில் சமகாலத்து சமூகத்தால் காட்டப்ப டுகின்றன என்ற போதும் அதில் பாதிக்கப்படாமல் அவர்கள் இருந்திருக்கிறார்கள். சமூகம் எல்லோரையும் ஒரே வார்ப் பில் வார்த்தெடுக்க முயலும் முயற்சி சிலரிடம் வெற்றி பெறுவதில்லை. அந்த சிலர் தான் சமூகத்தின் அடுத்த மாற்றத்திற்குக் காரணமாகிறார்கள். எனவே உங்கள் தனித் தன்மையை இழந்துவிடாதீர்கள்.

பல நேரங்களில் நாம் நம்மை அறியாமல் இருக்கக் காரணம் வாழ்க்கையின் அவசர ஓட் டத்தில் நாம் எந்திரமாக மாறி விடுவது தான் எனவே அந்த ஓட்டத்தை குறைத்துக் கொள்ளுங்கள். அது முடியா விட்டாலும் ஒரு நாளில் சிறிது நேரத்தையோ இல்லை ஒரு வார இறுதியில் சில மணி நேரங்களையோ உங்களை அறிவதற்கு அல்லது அலசு வதற்கு ஒதுக்கிக் கொள்ளுங்கள். உங்கள் வாழ்க்கையைத் திரும்பிப் பாருங்கள். எல்லாம் உண்மையில் திருப்திகரமாக இருக்கிறதா? மற்றவர்களில் இருந்து எங்கேயாவது வித்தியாப்படுகிறீர்களா? இல்லை வித்தியாச ப்பட வேண்டும் என்று நினைக்கிறீர்களா? என்று யோசியுங்கள்.

அந்த பதிலில் கூட உங்கள் தனித்தன்மையின் நூலிழை உங்களுக்குக் கிடைக்கலாம்.

(இன்னும் வரும்)




01

- தபால் மூலம் - ஆறு மாத கால டிப்ளோமா
Course Length - Six Month

23 வருட அனுபவம்

COURSES:

| | |
|---|---|
| Dip. in Psychology | உளவியல் டிப்ளோமா |
| Dip. in Office Administration | காரியாலய நிர்வாக டிப்ளோமா |
| Dip. in Human Resources Management | மனிதவள முகாமைத்துவ டிப்ளோமா |
| Dip. in Civil Engineering | சிவில் எஞ்ஜினியரிங் டிப்ளோமா |
| Dip. in Business Management | வியாபார முகாமைத்துவ டிப்ளோமா |
| Dip. in Banking Management | வங்கி முகாமைத்துவ டிப்ளோமா |
| Dip. in Sales & Marketing Management | விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் மு.டி |
| Dip. in Health & Hospital Management | சுகாதாரம் மற்றும் வைத்தியசாலை மு.டி |
| Dip. in Nursing Administration | தாதியர் நிர்வாக டிப்ளோமா |
| Dip. in Educational Management | கல்வி முகாமைத்துவ டிப்ளோமா |
| Dip. in Montessori | மொன்டிசூரி டிப்ளோமா |

SEPT.'2012 TO FEB.'2013

தமிழ் மொழி மூலம்

கற்கை முடிவில் பரீட்சை நடைபெறும் பிராந்திய நிலையங்கள்

• கல்முனை • மட்டக்களப்பு • திருகோணமலை • புத்தளம்
• வவுனியா • மன்னார் • யாழ்ப்பாணம் • கண்டி • கொழும்பு
• ஹட்டன் • அனுராதபுரம் • நுவரெலியா

மேலதிக விபரங்கள் மற்றும் விண்ணப்பப்படிவம் பெற உங்களது பெயர், முகவரி, தெரிவு செய்த கற்கைநெறி என்பனவற்றை கீழ் உள்ள கையடக்கத் தொலைபேசிக்கு SMS செய்து பெற்றுக் கொள்ளலாம்.

Mobile: 0777 140 844, 071 803 48 48

விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி
Country Co-ordinator
MARUTHUR.A.HASSEN (B.Sc. Psychology, M.Sc. Psychology)
ALL INDIA INSTITUTE OF MANAGEMENT STUDIES
24, 1ST FLOOR, SUPERMARKET COMPLEX, MAIN STREET, SAINTHAMARUTHU - 07.
Web: www.aiimas.com, www.iimat.com, www.aicomas.org
Tel: 067 2222917, 067 3671749, 067 3679688, 071 803 4848

விண்ணப்ப முடிவுத் திகதி : 28.09.2012

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# செருப்பு தேயுமே!

ஒருவன் கஞ்சனாக இருந்தான். அவன் மகனோ அவனை விடக் கஞ்சனாக வளர்ந்தான். ஒரு நாள் மகன் வெளியே ஒரு வேலையாக செல்ல வேண்டியிருந்தது. தந்தையிடம் சொல்லிவிட்டு செல்லலாம் என்று பார்த்தால் அவர் தூங்கிக் கொண்டிருந்தார். எனவே தந்தையை தொந்தரவு செய்யாது வெளியே சென்றான். இரண்டு கி.மீ. தூரம் நடந்து சென்றபின், வீட்டில் விளக்கை அணைத்தோமா என்ற சந்தேகம் அவனுக்கு வந்தது. அது எரிந்து கொண்டிருந்தால் வீண் செலவாகுமே என்று கருதிய அவன் வீட்டிற்கு திரும்பி நடந்தான். வீட்டிற்கு வந்தபோது வெளியே நின்றிருந்த அவன் தந்தை விபரம் கேட்டார். அவனும் சொன்னான். பின் தந்தை, ''நீ சரியாகக் கவனிக்காமல் சென்றதால் இப்போது இரண்டு கி,மீ. தூரம் திரும்பி வந்திருக்கிறாய். இதனால் உன் செருப்பு அதிகப்படியாகத் தேய்ந்திருக்குமே, இது நமக்கு கட்டுப்படியாகுமா?'' என்று கேட்டார், பையன் உடனே, ''நான் ஒன்றும் முட்டாள் இல்லை,'' என்று சொல்லியவாறு கக்கத்தில் இருந்த செருப்பை எடுத்துக் காட்டினான். தகப்பன் சொன்னான், ''அந்த மட்டுக்கும் பரவாயில்லை. இப்போது நீ ஏற்கனவே சென்ற தூரம் வரை செருப்பு போடாமலே போ'' என்று.

தவறுகள் வருந்துவதற்காக அல்ல, திருந்துவதற்காக.



# பென்சிலும் ரப்பரும்

**பென்சில்:** என்னை மன்னிக்க வேண்டும்.

**ரப்பர்:** எதற்காக மன்னிப்பு?

**பென்சில்:** நான் தவறு செய்யும் போதெல்லாம் நீ சரி செய்கிறாய். ஆனால் ஒவ்வொரு முறையும் நீ தேய்ந்து போகிறாய். என்னால் தானே உனக்கு அந்த பாதிப்பு?

**ரப்பர்:** நீ தவறு செய்யும்போது சரி செய்வதற்காகவே நான் படைக்கப்பட்டிருக்கிறேன். என் பணியை நான் செய்கிறேன். அதில் எனக்குப் பூரண மகிழ்ச்சியே. எனக்குத் தெரியும், நான் கொஞ்சம் கொஞ்சமாகத் தேய்ந்து ஒரு நாள் இல்லாமல் போய் விடுவேன். அதன்பின் உனக்கு ஒரு புதிய ரப்பர் கிடைக்கும். ஆனால் எனக்காக நீ வருத்தப்படுவது எனக்குக் கவலை தருகிறது.

இங்கு ரப்பர் என்பது பெற்றோர். பென்சில் என்பது அவர்களது பிள்ளைகள். பிள்ளைகள் தவறு செய்யும் போதெல்லாம் அதை அவர்கள் சரி செய்கிறார்கள். நாளடைவில் அவர்கள் தேய்ந்து போகிறார்கள். ஆனால் பிள்ளைகளை சரி செய்வதை மகிழ்வுடனே செய்கிறார்கள். தங்களுக்குப் பதிலாக தன் பிள்ளைகளுக்கு கணவனோ, மனைவியோ வந்து விடுவார்கள் என்பது அவர்களுக்குத் தெரியும். ஆனால் எந்த சூழ்நிலையிலும் தங்களுக்காகப் பிள்ளைகள் வருத்தப்படுவதை அவர்கள் விரும்ப மாட்டார்கள்.

அடிக்கிற ஆளுக்கு சிறிதளவு பலம் போதும். அடி வாங்குகிறவனுக்குத்தான் பெரும்பலம் வேண்டும். அடிக்கிற சிற்றுளி பலமானதா, அடி வாங்குகிற பாறை பலமானதா?

# கணக்கு தீர்ந்தது

புத்தரைப் பார்க்க வந்த ஒருவன் திடீரென அவர் முகத்தில் உமிழ்ந்து விட்டான். புத்தரும் முகத்தைத் துடைத்தவாறு, ''அப்பனே! வேறு என்ன சொல்ல விரும்புகிறாய்?'' என அமைதியாகக் கேட்டார். அவனுடைய அவமரியாதைக்கு எதிர்செயல் ஏதும் இல்லாது அவர் முகம் அமைதியாக இருப்பதைக் கண்ட அவனுக்கு மிகுந்த குழப்பம் ஏற்பட்டது. அவன் ஒன்றும் சொல்லாமல் திரும்பி விட்டான்.

அன்றிரவு முழுவதும் அவனுக்குத் தூக்கம் வரவில்லை. அவன் கொடுத்த அவமரியாதை அவனுக்கே திரும்பி வந்து விட்டதாய் அவன் உணர்ந்தான். நடந்ததை அவனால் நம்ப முடியவில்லை. நீண்ட யோசனைக்குப் பின் தன் தவறை அவன் உணர்ந்தான். மறு நாள் அவன் நேரே புத்தரிடம் சென்று மன்னிப்பு கேட்டான். புத்தர் சொன்னார், ''அதைப் பற்றி கவலைப் படாதே. இதற்கு முன் எப்போதோ உனக்கு ஏதோ தீங்கு நான் இழைத்திருக்க வேண்டும். இப்போது அந்தக் கணக்கு சரி செய்யப்பட்டு விட்டது. அதனால் நீ செய்ததற்குப் பதில் ஏதும் செய்யப் போவதில்லை. நான் ஏதேனும் பதிலுக்கு செய்தால் நம் கணக்கு முடியாது தொடர்ந்து கொண்டே போகும். நான் கணக்கை முடித்து விட்டேன்.'' என்றார்.



உன் எண்ணங்கள் குறித்து எச்சரிக்கையாய் இரு. அவை எந்த வினாடியும் வார்த்தைகளாக வெளி வரக் கூடும்.



# மரம் ஏறி

மரம் ஏறுவதில் கில்லாடியான ஒருவர், ஒரு பையனுக்கு மரம் ஏற சொல்லிக் கொடுத்துக் கொண்டிருந்தார். மர உச்சிக்குப் போய் சில கிளைகளை வெட்டச் சொல்லி அவனுக்கு உத்தரவு கொடுத்துக் கொண்டிருந்தார். பையனும் அவ்வாறே செய்யும்போது அவன் மிகுந்த ஆபத்தில் இருப்பதை உணர்ந்து பதைப்புடன் காணப்பட்டான். அப்போது அவர் வாயே திறக்கவில்லை. வெட்டி முடித்தவுடன் அவன் கீழே இறங்கி வரும்போது, ''பார்த்து கவனமாக இறங்கு'' என்றார். இதையெல்லாம் அருகில் இருந்து கவனித்துக் கொண்டிருந்த ஒருவர் அவரிடம், ''அவன் உச்சிக் கிளையில் ஆபத்தான சூழலில் இருக்கும்போது நீங்கள் ஒரு ஆலோசனையும் சொல்லவில்லை. இப்போது அவன் நினைத்தால் மரத்திலிருந்து குதித்து விடலாம். இப்போது கவனமாக இருக்கச் சொல்லி அறிவுரை கூறுகிறீர்கள். இது நியாயமா?'' என்று கேட்டார். அவர் சொன்னார், ''நீங்கள் கேட்பது நியாயமான கேள்விதான். அவன் அவ்வளவு உயரத்தில் இருக்கும்போது, கிளைகள் முறிந்து கீழே விழுந்து விடுவோமோ என்ற அச்சத்தில் அவன் மிகக் கவனமாக இருந்தான். எனவே நான் அப்போது அவன் கவனத்தைக் கலைக்க விரும்பவில்லை. ஆனால் அவன் குறைந்த உயரத்திற்கு இறங்கியவுடன், அவன் தன் வேலை முடிந்து விட்டது என்ற எண்ணத்துடன் எங்கோ பார்த்துக் கொண்டிருந்தான். எனவே நான் அவனை எச்சரிக்க வேண்டியதாயிற்று. எந்த வேளையிலும் மிகவும் இலகுவான நிலையிலேயே மக்கள் அதிகம் தவறு செய்கிறார்கள்,''



நாம் நல்ல வசதியுடன் இருக்கும்போது நண்பர்கள் நம்மைப்பற்றித் தெரிந்து கொள்கிறார்கள். நம்மிடம் வசதி குறையும் போதுதான் நாம் நம் நண்பர்களைப் பற்றித் தெரிந்து கொள்கிறோம்.






அலங்காரம் செய்வதனால் அகங்காரம் வளரும். ஆடம்பரம் செய்வதனால் ஆணவம் ஓங்கும். எளிமையின் மூலமே எதையும் வெல்லும் மனத் திண்மை வளரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாகனத்தில் வந்த ஆவி

நான் ஒரு சாரதி. நான் தலவாக்கலை வட்டவளை எனும் இடத்தில் பிறந்து வளர்ந்தவன். தொழில் நிமித்தம் காரணமாக தற்பொழுது கொழும்பில் வசித்து வருகின்றேன். நான் வட்டவலையில் கடமையாற்றிக் கொண்டிருக்கும் போது ஓர் மறக்க முடியாத திகில் சம்பவம் ஒன்று நடந்தது.

எனது பெரியம்மாவின் மகள் வெளிநாட்டில் தொழில் புரிந்து விட்டு இலங்கை திரும்பியிருந்தார்.

நான் கொழும்பிற்குச் சென்று அவரை அழைத்துவர வேண்டிய ஒரு சந்தர்ப்பம் ஏற்பட்டது.

நான் வேனில் கொழும்பிற்கு வந்து அவரை அழைத்துக் கொண்டு வத்தளைக்குச் சென்று பகல் உணவு சாப்பிட்டுவிட்டு அவரை அங்கே தங்க வைத்து விட்டு நான் மட்டும் தலவாக்கலை நோக்கி வந்து கொண்டிருந்தேன்.

நான் தலவாக்கலையை அடையும் போது இரவு 11 மணி இருக்கும். தலவாக்கலை நகரைத் தாண்டி சென்று கொண்டிருக்கும் போது வழியில் ஒரு வயதான நபரைக் கண்டேன்.

சாரம் அணிந்துகொண்டு புகைப்பிடித்தபடி கொஞ்சம் மதுபானம் அருந்தியவர் போல் தள்ளாடி நடந்து சென்று கொண்டிருந்தார்.

வீதி விளக்கின் ஒளியில் அவர் நன்றாகத் தெரிந்தார். எனக்கு அவரை எங்கோ நன்கு பார்த்துப் பழகியவர் போல் இருந்தது. சரி வயதானவர் பாவம் என நினைத்து அவரை வேனில் ஏற்றிக் கொண்டு வந்தேன்.

அவர் வேனின் பின் இருக்கையில் போய் அமர்ந்து கொண்டார். வரும் வழியில் அவரைப் பற்றிய விடயங்கள் மற்றும் அவர் எங்கே இறங்க வேண்டும் போன்ற விடயங்களை கேட்டு அறிந்துகொண்டேன். கொஞ்சத் தூரம் வந்ததும் அவர் இறங்க வேண்டிய இடத்தில் வேனை நிறுத்தி விட்டு அவரை கூப்பிட்டேன்.

அவர் சொன்னார் ''இல்லை தம்பி இன்னும் கொஞ்ச தூரம் செல். அங்கே ஒரு சேர்ச் (தேவாலயம்) இருக்கும் அதற்கு பக்கத்தில்தான் நான் இறங்க வேண்டும். அங்கே வெளிச்சம் இருக்கும். அங்கிருந்து நான் நடந்து செல்கிறேன்'' என்றார். நானும் அவர் சொன்னது போல் வாகனத்தை இன்னும் கொஞ்சம் முன்னால் செலுத்தினேன். அவர் சொன்னதைப் போல் சேர்ச் ஒன்று இருந்தது. அந்த இடம் ஓரளவு வெளிச்சமாகவும் இருந்தது.

சரி ஐயா இங்கே இறங்கிக் கொள்ளுங்கள் என்று சொல்லி வேனை நிறுத்தினேன்.

அவர் இறங்கவில்லை. நான் பல தடவைகள் கூப்பிட்டும் ஒரு சத்தமும் இல்லை. ஒருவேளை நன்றாக தூங்கிவிட்டாரோ என நினைத்து பின்னால் திரும்பிப் பார்த்தேன்.

வேனின் இருக்கையில் அவரைக் காணவில்லை. இருக்கையில் படுத்து நித்திரையாகிவிட்டாரோ என நினைத்து வேனை நிறுத்திவிட்டு இறங்கி வந்து வேன் கதவை திறந்து பார்த்தேன். வேனில் அவர் இல்லை. எனக்கு பயமாக இருந்தது. என்னையறியாமல் எனது கை, கால் நடுங்கத் தொடங்கின.

அப்போது தான் தெரிந்தது வேனில் உள்ள கடைசி ஜன்னல் லேசாக திறந்திருந்தது. உடனே வேனின் அனைத்து ஜன்னல்களையும் கதவையும் நன்றாக மூடிவிட்டேன். அவசரமாக வேனை ஸ்டார்ட் செய்தேன். குளிரிலும் எனக்கு வியர்த்துக் கொட்டியது.

சிறிது தூரம் கடந்திருப்பேன். மலைப்பகுதி பாதையென்பதால் இருபுறமும் உயர்ந்த திட்டுக்கள் காணப்பட்டன. வீதியின் இரு மருங்கிலும் பெரிய பெரிய மரங்கள், அச்சுறுத்திக் கொண்டிருந்தன.

மனதின் அச்சத்தை இந்தச் சூழ்நிலை இன்னும் அதிகப்படுத்திக் கொண்டிருந்தது.

என்றாலும் எப்படியாவது வீடுபோய்ச் சேர்ந்துவிட வேண்டுமே என்பதற்காக வேனை வேகமாக செலுத்தினேன். மரங்கள் அடர்ந்த இடத்தில் திடீரென யாரோ வேனை வழி மறித்தார்கள்.

மீண்டும் யார் என்று பார்த்தபோது என்னுடன் வேனில் வந்த அந்த வயதான நபர் வேனை நிறுத்தச் சொல்லி கையைக் காட்டினார்.

என் உயிர் என்னுடன் இல்லை. வேனை நிறுத்தாமல் மிகவும் வேகமாகச் செலுத்தினேன். அப்போதுதான் அந்த விபரீதம் நடந்தது. வாகனத்தை வேகமாக செலுத்தும் போது பின்னால் இருந்து குளிர்காற்று பலமாக வீசியது. திரும்பிப்பார்த்தால் மீண்டும் அதே மனிதர் வேனில் உள்ள கடைசி சீட்டில் உட்கார்ந்திருக்கிறார். அவர் என் கண்களுக்கு நன்றாகத் தெரிகின்றார். அந்த சமயம் என் உயிர் என் கையில் இல்லை. கடவுளை நினைத்துக்கொண்டேன். இனி என்ன வந்தாலும் சரி வாகனத்தை நிறுத்தாமல் ஓட்டினேன். சிறிது தூரம் வந்ததும் ஒரு செக்கன் முன்னால் ஓடிக்கொண்டு வந்த எனது வேன் சடுதியா பின்னால் தள்ளப்பட்டு மீண்டும் ஓடியது. திடுக்கிட்டு திரும்பினேன். மீண்டும் வாகனத்தில் அந்த மனிதர் இல்லை. முன்பு போலவே வேனின் பின் கதவு சாடையாக திறந்திருந்தது. என் தலையே சுற்றியது

அன்று எப்படி வீட்டுக்கு வந்து சேர்ந்தேன் என்பது எனக்கே தெரியாது. அன்று முதல் சுமார் ஒரு மாத காலமாக சுயநினைவு இன்றி இருந்தேன். எத்தனையோ வைத்தியங்கள் எத்தனையோ மதச்சடங்குகளுக்கு பிறகு நான் சுயநினைவு பெற்றேன்.

அபி




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலாட்டா



















## சார்லி சாப்லின் வேடத்தில் தென்னிந்திய ஹீரோக்கள் நடித்தால்...!




அபி

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org